மனதில் ஒரு முறை நிலைபெற்ற கருத்தை இடையில இறந்துபோனாலன்றிச் சாதித்துச் சித்திகொள்ளாது விடுகிறதில்லை எனும் ஓர்ப்பு! நாள் ஏற ஏற, இது நிசமென என் மனம் தேறுகின்றது. இந்தக் குணம் இவ்வுலகில் சாத்தியமாகத்தக்க எதையும் சாதிக்கும்; இது இல்லாதவனுக்கு என்னென்ன சாமர்த்தியங்கள், இடம்பொருள் ஏவல், உசித சமயம் இருந்தாலும் அவன் இரண்டு கால் மாடேதவிர மனுஷன் ஆகான்." என்று அவர் மொழிந்தார்.

அதிகாரம் - ௯.

வேலைக்காரர்.

"வேலையில் முயற்சியுள்ள ஒருவனைக் காண்கிறாயா? அவன் அரசர்முன் நிற்பான்"

சாலோமோனின் நீதிமொழி.

"வேலை செய்யவும் தன் காரியம் பார்க்கவும் பயின்றிராத மனுஷன் இமலைசக்கானேதவிர மற்றப்படி அல்ல."

ஓவென் பெல்தாம்.

ஹாஸ்லிட் என்பவர் சமர்த்தாய் எழுதிய பிரபந்தங்களில் ஒன்றில் வேலைக்காரன் ஏதாயினும் ஒரு வேலையை அல்லது தொழிலை அமைத்து நடைவண்டியில் வைக்கப்பட்டிருக்கும் அற்ப மனுஷன், அவன் செய்வது எல்லாம் கூடி நாளும் நடந்த வழி விலகாமல் தன் கருமம் போனபோக்கிற் போகட்டுமென்று விட்டுவிட்டிருப்பதே எனச் சிறக்கணித்துச் சொல்லுகிறார். பின்னும், "சாதாரண வேலைகளை வளம்பெற நிர்வகித்தலை முக்கியமாய் வேண்டுவது சங்கற்ப சூனியமும் வழக்கத்தையும் சொந்தத் தன் சுயஇஷ்டத்தையும் சார்ந்த நினைவன்றி வேறு நினைவின்மையுந்தான் எனச் சொல்லுகிறார். ஆனால், இந்த இலக்கணத்திலும் அதிக பட்சபா

தமும் காரியத்தளவில் அபத்தமும் மற்றொன்று இராது. மெய்தான். வித்தையில் வல்லவர்களுக்குள்ளும் இலக்கண விலக்கியங்களில் தேர்ந்தவர்களுக்குள்ளும் சட்டதிட்டங்கள் நிர்மாணிப்பவர்களுக்குள்ளும் சிலர் அற்பபுத்தியுள்ளவர்களாய் இருக்கும்வண்ணம் வேலைக்காரர் வகுப்பிலும் அற்பபுத்தியுடையோர் உண்டு. ஆனால், சாது காரியத்தையும் கிரகிக்கத்தக்க புத்தி விர்த்தியும், பெருந் தொழில் செய்யும் திறமையுமுள்ள வேலைக்காரரும் இருக்கிறார்கள். இதற்கு ஒப்ப, இந்தியாவைப்பற்றிப் பிறந்த பத்திரத்தின் பெயரில் பர்க் செய்த உபந்யாசத்தில் தெருத்தெருவாய்த் திரிந்து சரக்கு விற்றுப் பிழைத்தவர்கள் அமைச்சர் ஆனதும், வர்த்தகர் மதிவல்லோராய் நடந்ததும் அறிவேனென்று உரைத்தார்.

யாதொரு முக்கியமான வேலையை வளம்பெற நடத்த இன்றி அமையாத லக்ஷணங்கள், விசேஷ சாமர்த்தியம், உற்றவிடத்தில் தீவிர யுக்தியோடு கருமம் முடித்தல், திரளான கையாட்களை வைத்திருந்து கிரமமாய் வேலைவாங்கத்தக்க சமர்த்து, மிகு விரகு, மனுஷர் இயற்கையைத் தேற அறியும் அறிவு, இடைவிடாது அறிவைப் பண்படுத்தல், லௌகிக காரியங்களில் மேலுமேலும் அனுபவம் முதிர்தல். இந்த லக்ஷணங்களை எண்ணிப் பார்ப்போமானால் வேலை பயிலும் வித்தியாசாலை சில கிரந்தகர்த்தர்கள் சொல்லுகிறபடி எவ்விதத்திலும் அத்தனை அற்பமல்ல எனத் திருஷ்டாந்த பூர்வமாய்த் தோன்றுமென்று எண்ணுகிறோம். சிறந்த வேலைக்காரரைக் காண்பது மகா கவிகளைக் காண்பதுபோலுமே- இரண்டும் அரிது. மெய்யன்புள்ள மகாத்மரையும் ரத்தசாட்சிகளையும் காண்பது மிக அரிதன்றே - நல்லவேலைக்காரரைக் காண்பது அதனினும் அரிது. "வேலை மனுஷனை ஆளாக்குகிறது." மற்றெந்த அறையைக் குறித்தும் இப்படி வற்புறுத்திச் சொல்லக்கூடாது என மெஸ். ஹெல்ப்ஸ் சொல்லியது முக்காலே மூன்று வீசம் உண்மையே.

ஆனாலும், யூதர்கள் வேலைக்கு யோக்கியரல்லவென்பதும், அந்தந்த வேலை செய்து பயின்றவர்கள் யூதர்கள் செய்யும் முயற்சிகளுக்கு உதவார்களென்பதும் எக்காலத்திலும் மூடர்கள் மனதிற்கு இதமான அபிப்ராயம். "மனுஷனாகப் பிறந்தும் பல சரக்கு வியாபாரி ஆனேனே" என்று சில வருஷத்திற்குமுன் ஆத்மஹத்தை செய்த அந்தப் பாவி வாலிபன் பல சரக்கு விற்கும் யோக்கியதைக்கும் தன் புத்தி போதாதென்று தான் செய்த செய்கையால் மெய்ப்பித்தான். ஏனெனில், ஒருவனுக்கு இழிவு அவன் செய்யும் தொழில் அல்ல, ஒருவன் செய்யும் தொழிலுக்கு அவனால் இழிவு உண்டாகும். கைவேலை ஆனாலும் சரி, புத்தியாற் செய்யும் வேலையானாலும் சரி பொய் களவின்றிப் பயன் தரும் எவ்வகை வேலையும் கௌரவமுள்ளதே. கைவிரல் அழுக்கானாலும் ஆகும், நெஞ்சோ நிர்மலமாயிருக்கும். ஏனெனில், அத்தனையும் தீழ்ப்பு உண்டாக்குவது கையாடும் பொருளல்ல, கள்ளம் கபடு நெரிடு முதலிய மலமே—புறனும் கறையல்ல, பொருளாசை—களிம்பல்ல, பொல்லாங்கு.

பெருமையிற் சிறந்தவர்களும் உயர் பதவிகளில் நாட்டம் வைத்திருக்கும் பொழுதும் பிழைப்பிற்கு உதவும் வேலைகளை நேர்மையாய்ச் செய்வது இழிவென்று விட்டுவிடவில்லை. பெயர்பெற்ற அறிஞர் எழு பேரில் முதல்வராகிய தேல்ஸ் (Thales), அதேன்ஸ் நகரத்தை இரண்டாமுறை ஸ்தாபித்த ஸோலன் (Solon), கணித வித்தகராகிய ஹைபிரேத்திஸ் (Hyperates) இத்தனை பேரும் வியாபாரிகள். சிறந்த ஞானி ஆனதுபற்றித் தேசமொன்றும் பெயர்பெற்ற ப்ளேத்தோ (Plato) எகிப்து தேசத்திற் செய்த பிரயாணச்செலவிற்கு உதவியது அவர் வழியில் எண்ணெய் விற்றுச் சம்பாதித்த லாபம். ஸ்பினோஜா (Spinoza) தத்துவ வித்தியா விமரிசை செய்து வரும்பொழுது கண்ணாடி மெருகிட்டு ஜீவனம் பண்ணினார். மஹா தாவர வித்தகராகிய லினியன்

(Linnaeus) தோல அடித்துப் பாதரக்ஷை கட்டும்பொழுது அவ்வித்தை கற்றுக்கொண்டுவந்தார். ஷேக்ஸ்பியர் (Shakespeare) நடனசாலை ஒன்று வைத்து ஆட்டம் பழக்கிச் சித்திபெற்றார்—அவர் நாடகமும் செய்யுளும் எழுதும் திறமையிலும் நாடகம் ஆடும் சமர்த்தையே தமக்கு அதிக பெருமையென்று கொண்டாடினார் போலும். ஷேக்ஸ்பியர் முக்கியமாய் இலக்கண இலக்கியங்களிற் பயின்று பண்பட்டது பிறரைச் சாராமல் பொய்களவு தவிர்த்து தம்மளவில் முட்டின்றிப் பிழைக்க, இது போப் கவிஞர் அபிப்பிராயம். கல்வியில் வல்லவரென்று கீர்த்தி பெறுவதைத் தொட்டு அவருக்கு லக்ஷியமே இல்லை எனத் தோன்றுகிறது. ஒரு நாடகமாவது அவர் தமது கண்பார்த்து அச்சிடுவித்தது, அச்சிட உத்தரவு செய்தது முதலாகத் தெரியவில்லை. அவர் கிரந்தம் எழுதிய காலவிவரம் இன்றளவும் அந்தரங்கமாயிருக்கின்றது. ஆனால் இதொன்று மெய், அவர் கருமம் வாய்த்தது. அவர் பிறந்த ஊராகிய ஸ்திராத்போர்த்-அப்பான்-அவன் எனும் இடத்திற்குத் திரும்பிப் போய்க் கிலேசமின்றிக் காலம் கழிக்கப் போதுமட்டும் திரவியம் சேர்த்தது.

சாஸர் (Chaucer) ஆதியில் ராணுவ சேவகன், அப்பால் சக்தியுள்ள சேவு அதிகாரியும், வனத்திற்கும் சர்க்கார் நிலத்திற்கும் அத்தியக்ஷருமானார். ஸ்பென்ஸர் அயர்லாந்தின் ராஜப்பிரதிநிதிக்கு லிகிதர்; பின்பு கார்க் நகரத்தின் தர்மாதிகாரி, அன்றியும் வேல்ஸ்களில் அவர் பூமியும் அவதானியுமென்று சொல்லி யிருக்கின்றது. ஆதியில் உபாத்தியாயராயிருந்த மில்டன் (Milton) பிரஜாதிபத்திய காலத்தில் மந்திராலோசனைச் சபை லிகிதர் உத்தியோகத்திற்கு உயர்த்தப்பட்டார். மந்திராலோசனைச் சபையில் பிறக்கும் திட்டங்கள் எழுதிவைத்த புஸ்தகமும் மில்டன் எழுதிய கடிதம் அனேகமும் இன்னமும் கெட்டுப் போகாதிருக்கின்றன. அவ் வுத்தியோகத்தில் அவர் சுறுசுறுப்பிற்கும் அவரால் அதிக பிரயோஜனம் விளைந்ததற்கும் அவைகளே பெ

ரும்பாலும் சாட்சியிக்கின்றன. ஸ்ரீ ஐசாக் ந்யூற்றன் (Sir Isac Newton) டங்கசாலைத் தலைமை உத்தியோகத்தில் நிர்வாகியென்று திருஷ்டாந்தமாய்த் தெரியவந்தது. 1694-ம் ஆண்டு கூடயின்று தமது கல்வரண ஆதன நாணயம் அடிப்பித்தவர் அவரே. கௌபர் (Cowper) கவிஞர் வேலையில் தாம் கால நிஷ்டை தவறியிருந்தது தமக்குப் பெருமையென்று கொண்டாடினார். "நான் அறிய என்னைத் தவிர எந்தக் கருமத்திலும் காலநியமம் தவறியிருந்த கவிஞர் இல்லை" என்று அவர் அறிக்கை செய்திருந்தும், உவோர்ட்ஸ் உவோர்த் (Wordsworth), ஸ்காட் (Scoth) கவிராஜர்கள் இருவரும் எந்தக் கருமத்திலும் காலநியமம் தவறியிருந்தவர்களே. இவர்களில் உவோர்ட்ஸ்உவோர்த் முத்திரை விபாகி; ஸ்காட் லெஷன் கோர்ட்டு லிகிதர். லந்தனில் பிரதினமும் கன முதல் வைத்து வியாபாரம்செய்து வெகு இரவியம் சம்பாதித்த டேவிட் ரிகார்டோ (David Rioardo) இத்தனை தொல்லைக்குள் அர்த்த தந்திர தத்துவம் எனும் அவர் மனதிற்கு இனிய கல்வித்துறையில் மனம் குவிந்து நுழைந்து, அத்துறையைத் துலங்க உணர்ந்த நிர்வாகி ஆனார். ஏனெனில், அவர் வர்த்தகத்தில் கூர்ந்த விவேகியாயிருந்ததுமன்றி, கல்வியில் ஆழ்ந்த அறிவினருமா யிருந்தார். கோளவித்தையிற் சிறந்த பேலியும் (Baily) நாணய வர்த்தகத்தில் தரகரே. ரசாயனவித்தகராகிய அல்லென் (Allen) பட்டு நெய்து பிழைத்தவர்.

உன்னத புத்தி சக்தியும் எக்காலும் ஒரே விதமாய்ச் செய்யும் தொழிற் பிரவர்த்தி சித்தியும் ஒன்றுக்கொன்று சேராதவைகளல்ல என்பதற்கு நமது காலத்திலும் அனேக திருஷ்டாந்தங்கள் உண்டு. க்ரேக் தேசசரித்திரம் எழுதிய மகா வித்துவான் ஆகிய க்ரோத் (Grote) லந்தன் நாணயவர்த்தகர். இப்பொழுது கீர்த்தி உன்னதரென்று பெயர் பெற்றவர்களில் சிறந்தவராகிய ஜான் ஸ்டியுவர்ட் மில் (John Stewart Mill) ஈஸ்ட் இந்தியா கம்பெனியின் கணக்குப் பதி

சோதனை வகுப்பினின்று உத்தியோகம் விட்டு நீங்கி இன்னும் நாட்படவில்லை. அவர் தம்முடன் உத்தியோகம் செய்தவர்களால் வியப்பும் மதிப்பும் பெற்றுப் போனார். அவர்கள் அவரை வியந்து மதிப்பது தத்துவ சாஸ்திரத்தில் உயர்ந்த அறிவினர் என்பது பற்றி அல்ல, உத்தியோகசாலையில் அவர் உயர் தரமான திறமையை விளைவுறுத்தி, தமது வகுப்பில் தேறத்தெளியத் திருப்திகரமாக வேலை நடத்தினவர் என்பது பற்றியே.

எந்தத் தொழிலிலும் சாதாரணமாய் சித்திவழி நாடோடிப் புத்திவழியே. அறிவுச் சம்பாத்தியத்திற்கு அல்லது சாஸ்திரம் கற்கும் முயற்சிக்கு எப்படியோ அப்படியே வேலைப் பயிற்சிக்கும் பொறுத்து உழைக்கும் உழைப்பும் மனக்கருத்தும் இன்றி அமையாதவைகளே. "யாதொரு தொழிலில் வல்லவன் ஆதற்கு வேண்டும் சாதனம் மூன்று ஜன்ம இயற்கை, கல்வி, சாதனை" என்று பூர்வ க்ரேக்கர் சொல்வார்கள். வேலையில் சித்தி பெறுதற்கு உரிய மகாசூக்ஷமம் புத்தியாய் ஜாக்கிரதையோடு சாதனைசெய்து வருவதே. சிலருக்குச் சாதனையின்றிச் சித்தி வரினும் வரும். அது அவர்கள் "அதிர்ஷ்டவசம்". ஆனால் சூதாடிச் சம்பாதிக்கும் பணம் போல, இவ்வாறு அதிர்ஷ்டவசமாய் வாய்ப்பதெல்லாம் ஒருவனை ஆசை காட்டி மோசப்படுத்துமே தவிர மற்றப்படி அல்ல. வழியைப் பற்றிச் சொல்வது வேலைக்கும் பொருந்தும்—மிகவும் கிட்டிய வழி சாதாரணமாய் அதிக கஷ்டமானது. சுக வழி விரும்பிப் போக விரும்புவோன் சுற்றுச் சுற்றிப் போக வேண்டும், என பேக்கன் பண்டிதர் சொல்லி வருவார். வழியில் வெகு நாழிகை சென்றாலும் செல்லும். ஆனாலும் செவ்வோரம் வழி நடக்கும் இன்பமும், நடந்து பெறும் பயனை அனுபவிக்கும் இன்பமும் நிஷ்களங்கமான மெய்யின்பமாம். சாமானிய கூலிஜனங்களைப்போலாயினும் அன்றன்று சிறிது வேலை பார்த்துப் பிழைப்பது பின்பு

செய்யும் மற்றெல்லா முயற்சியையும் மனதிற்கு இனி தாக்கும்.

மெர்க்யுலியின் உண்மையைப் பற்றிச் சொல்லியிருக்கும் கட்டுக்கதை மனுஷர் செய்கை யெத்தி அனைத்திற்கும் அச்சாயிருக்கின்றது. பூலோகத்தில் தனக்குச் சுகமும் விர்த்தியும் உண்டாவது முக்கியமாய்ப் பிறர் உதவியினாலும் ஆதரவினாலுமல்ல, தன்னாலும் தன் மனவலிச் சாதனையினாலுந்தான் என்று பிரதி வாலிபருக்கும் உணர்த்தவேண்டும். ரூமஅர் கவிராயர் குமாரரில் ஒருவருக்கு ஏதும் உபகாரம் செய்யும்படி ஜான் ரஸ்ஸெல் பிரபு காலஞ்சென்ற மெல்போர்ன் பிரபுவிற்குக் கடிதம் எழுதி அனுப்ப, அவர் அதற்கு எழுதிய மறுமொழியில் ஆலோசனை ஒன்று அமைந்திருக்கின்றது. அம்மறுமொழி இதுதான்— "இஷ்டர் ஜான் அறியவும், ரூமனைப்பற்றித் தாம் எழுதிய கடிதத்தைத் திருப்பி அனுப்பி விடுகிறேன். தம் மனம்போலச் சமயம் கண்டு ஏதும் செய்யச் சித்தமாயிருப்பேன். ஏதானாலும் செய்வதைக் குறுக்காகச் செய்யவேண்டுமென்பது என் தாற்பரியம். இதைச் சற்று அதிக குறிப்பாக, நேராக, தெளியச் சொல்லுகிறேன். வாலிபருக்குச் சிறுகத் திரவிய உபகாரம் செய்வது நன்மை அல்ல. அதனிலும் அதிக கேடு அவர்களுக்கு மற்றொன்று இல்லை. அவர்கள் இவ்வாறு தமக்கு அமைந்ததை அளவிற்கு மிஞ்ச மதிப்பார்கள். அப்பால் ஏதும் முயற்சி செய்யார்கள்; அவர்கள் முயலுகிறதில்லை. 'உங்கள் நிலைப்பதற்கு வழி உண்டாக்கிக்கொள்வது உங்கள் பாடு. முயற்சி செய்வீர்களானால் முட்டின்றி நான் [illegible], [illegible] பட்டினியாய் வருந்துவீர்கள்' என்று [illegible] வாலிபருக்கு ஒரு பொழுதும் வேறு வார்த்தை சொல்லவேண்டாம். இங்ஙனம், தங்கள் விதேயன், மெல்போர்ன்."

எத்தொழிலிலும் புத்தியாய் மனவலியுடன் முயற்சிசெய்தால் அதற்குத் தக்க பயன் எப்பொழுதும் உண்டாகும்.

அம்முயற்சி எவனையும் முன்னுக்குக் கொண்டுவரும், அவன் குறியை வெளி வருவிக்கும், பிறரை முயற்சிசெய்யத் தூண்டிவிடும். எல்லாரும் சமமாய் உயரா திருப்பினும், மொத்தமாய்ச் சொல்லில், அவனவன் தானேதான் செய்த முயற்சியின் அளவு உயர்ச்சி அடைவான். "எதிரிலா மண்டபத்தில் வசிக்க யாவராலும் மாளாதாயினும் ஆதித்த ஒளியும் உஷ்ணமும் அனைவருக்கும் உண்டு." இது தஸ்கெனியில் வழங்கும் பழமொழி.

காலையும் சிந்திக்குமிடத்தில், பூலோக வாழ்வின் மார்க்கம் நடைக்கு மிக எளிதாக்கப்படுவது மானிடர் இயற்கைக்கு நன்றல்ல. குனிந்து துரும்பும் எடுக்காதிருந்து ராஜபோஜனம் செய்து மெல்லிறகு மெத்தையிற் பள்ளிகொண்டு சுகிப்பதினும் பாடுபட்டு வருந்தி உழைத்து எளிய உண்டி தின்று காலம் தள்ளுவது வாசி. லௌகிக வியாபாரம் ஏதும் தொடங்கும்பொழுது கூடியவரையும் கைப்பொருள் இல்லாதிருப்பது ஒருவனை உழைக்கத் தூண்டி விடுவதற்கு இன்றியமையாத சாதனமாம். பூலோக வியாபாரத்திற் சித்திபெறுவதற்கு முக்கிய சாதனங்களில் அது ஒன்றென முக்காலேமூன்றுவீசம் உறுதியாய்க் குறித்துவைக்கலாம். இது வாஸ்தவம் - இந்தக் காரணத்தினாலேயே, நியாயவாதத்திற் சித்திபெறப் பெரும்பாலும் உதவும் சாதனம் என்னவென்று எவரோ ஒருவர் தாமறிவில் சிரேஷ்டரான நியாயாதிபதி ஒருவரைக் கேட்க, அவர் "சிலபேர் சித்திபெறுவது மிக்க சமர்த்தால், சிலர் நல்லினச்சேர்க்கையால், சிலர் அற்புதமாய், ஆனால் பெரும்பாலார் கையில் மடியில் அணா ருபாய்க்கும் வழியின்றி நியாயவாதம் செய்யத் தொடங்குவதனாலே தான்" என்ற மறுமொழி சொன்னார்.

வெகு காலம் சிற்பநூல் கற்றுத்தேறி, கிழக்குத் தேசத்தில் சிற்பாலங்காரமுள்ளவைகளென்று காரியங்கள் வியக்கவுடைய ஸ்தலங்களின் அதிசயங்களைப் போய்ப் பார்வை

யிட்டு, எண்ணத்தகும் சாமர்த்தியரான சிற்பி ஒருவர் தாம் கற்ற தொழில் செய்து பிழைக்கத் தமது ஜன்மதேசத்திற்குத் திரும்பியபின், அகப்படுமானால் எவ்வித வேலையும் செய்ய நிர்ணயித்தாராம். நிர்ணயித்து இடிந்த கட்டடங்களை மராமத்துச்செய்ய ஏற்பட்டார். கட்டடமராமத்து எளிய வேலை, அதில் கூலி மிதம். ஆனாலும் பயின்ற தொழில் செய்து பிழைப்பது தமக்கு மானத்தாழ்வென்று சிறக்கணித்துவிட அவர் அறிவிலி அல்ல, அறிவாளி. படிந்த வேலையைச் செய்து வரவரத் தரம் உயரப் பார்க்கும்படி நிர்ணயித்தார். ஆகவே முதலில் படிந்த வேலையிற் பழுது இல்லை. ஜூலை மாசம் ஒரு நாள் கடுவெயிலில் இடிந்த வீட்டுமுகட்டில் கால் இடுந்து உட்கார்ந்து வேலைசெய்ததை இஷ்டர் ஒருவர் கண்டபொழுது, அந்தச் சிற்பி முகத்தில் வெயர்வையைத் துடைத்து "க்ரேக்கதேசம் எல்லாம் போய் வந்தவனுக்கு அகப்பட்ட சிறந்த வேலையை இதோ பாரும்!" என மொழிந்தார். ஆனால் அவர் அற்பமென்று அசட்டைபண்ணாமல் அகப்பட்ட வேலையை அரைகுறையின்றிச் செவ்வையாய்ச் செய்தார். சலித்து விட்டுவிடாமல், எப்பொழுதும் உழைத்து வரவரத் தரம் உயர்ந்ததனால், அதிக வருமானம் உள்ள வேலைகள் படிந்தன. கடைசியாய் அவர் உயர்ந்த வேலை செய்யும் அருந்திறமுள்ள சிற்பி ஆனார்.

சற்றும் விடாது உழைக்கும்படி நேர்வதுதான் ஒவ்வொருவனுக்கும் விர்த்தியென்றும், தேசத்திற்கு எல்லாம் நாகரிகமென்றும் நாம் சொல்லும் அனைத்திற்கும் மூலவேரெனவும் முளையெனவும் எண்ணத்தகும் - இது வாஸ்தவம். மனுஷரை எதற்கும் ஆசைப்பட, எதையும் விரும்ப, எதற்காகவெனினும் பாடுபட விடாமல் சும்மா இருக்க வைத்து, அவர்கள் மனதிற்கு இஷ்டமான போகம் அனைத்தையும் நிறையக் கொடுப்பதினும் அவர்களுக்குக் கொடிய சாபம் மற்றொன்று உண்டோ? இது சந்தேகம். இம்மையில் மனுஷர் எதையும் செய்ய நிமித்தமும் இல்லை, செய்வது அவசியமுமல்ல

என்று நினைக்கும் நினைவைக்காட்டிலும் புத்தியுடையோர் மனதை மிக வருத்திப் பதைப்புறுவிக்கும் நினைவு வேறில்லை. ஸ்பினோலா மார்க்விஸ் ஸ்ரீ ஹொரேஸ் வியரைக் கண்டு உமது சகோதரர் இறந்த காரணம் என்னவென்று கேட்க, அவர் "செய்ய ஒன்றும் இல்லாதிருந்ததே அவன் இறந்த காரணம்" என மறுமொழி சொன்னார். அதுகேட்டு அந்தப் பிரபு "ஐயோ! நமது சேனாதிபதிகளில் எவரையும் கொல்ல அவ்வொரேயொரு காரணம் போதுமே" என மொழிந்தார்.

ஆனால், எந்த முயற்சியிலும் விர்த்திக்காதவர்கள் நிர்த்தோஷிகளாகிய தமக்கு அபகாரம் சேர்ந்ததென்று குறை கூறி, தம்மைத் தவிர மற்றெல்லாரும் ஒரு கையாய்த் திரண்டு தமக்குத் துன்பம் செய்கிறார்களென்று பதறி அநுமிதிசெய்வார்கள். சிறந்த கிரந்தகர்த்தர் ஒருவர் ஏற்கெனவே இயற்றிப் பிரசுரஞ்செய்த ஒரு புஸ்தகத்தில் தாம் செய்யத் தொடங்கிய கருமம் அனேகம் சிதறிப்போனதை விவரணமாகச் சொல்லுகிறார். சொல்லி, பெருக்குக்கணக்குவாய்ப்பாடு தமக்குத் தெரியாதென்று ஒளிக்காமல் ஒப்புக்கொள்ளுகிறார்; மேலும், உள்ளபடி பார்க்குமிடத்தில், தமக்குக் கருமம் சிதறும் காரணம் அக்காலத்தார் நெஞ்சில் தலைப்படும் திரவியாசாதனையேயென்று அவர் அறுதியிட்டார். அன்றியும், லெமார்ட்டிலும் தமக்குள்ள அங்ககணித அஞ்ஞியத்தை வெளியிடப் பின்னிடவில்லை. ஆனால் அவர்க்கு அதில் அத்தனை அலக்ஷியம் இல்லாவிடின், அந்தப் பிரபல புருஷரில் வியப்பு மிகுந்தவர்கள் விருத்ததசையில் உதரபோஷணைக்காக மொழி எழுதவிக்கச் சோகம் சேர்ந்த அவல நிலைத்தை நாம் காண நேரிடாதுபோயிரும்.

மேலும், சிலர் தாம் அதிர்ஷ்டவீனராகப் பிறந்தோமென்று எண்ணி, தம் பேரில் குற்றம் குறை ஒன்றும் இல்லாதிருக்க, உலகம் எப்பொழுதும் தமக்குச் சத்துருவாகிறதென்று மனதில் உறுதிசெய்கிறார். இவ்வகைப் பிரகிருதியுள்ள

மனுஷன் ஒருவன் இம்மாத்திரத்தில் நிற்காமல், பின்னும் சற்றெட்ட மனோபாவனைசெய்து, தான் சிரசில் இடும் குல்லா செய்துவிற்கச் சம்பவித்தால் ஊரார் சிரசின்றிப் பிறந்திருப்பாரென்று சொன்னதாய்க் கேள்வி! ஆனாலும், மிடி என்பது மடைத்தனத்திற்கு அண்டையில் என்றொரு பழமொழி ருஷாவில் வழங்குகின்றது. இடைவிடாமல் தங்கள் துர்க்கதியை நினைந்து புலம்புவோர் தங்கள் சோர்வு, செய்பிழைபாடு, கெடுமதி, சோம்பு எனும் இவைகளால் விளையும் பயனை எவ்வாறுவது அனுபவிக்கிறார்களென்று பெரும்பாலும் தோன்றும். செலவிற்காகப் பத்தனை ரூபாய் கொண்டு லந்தன் நகரத்திற்குப் போயிருக்கும்பொழுது ஒருமுறை குலமகன் ஒருவருக்கு எழுதிய கடிதத்திற்கு உளைவிலி எனத் தமது நிலைமையை உள்ளபடி குறிப்பித்துக் கையொப்பமிட்ட ஜான்ஸன் பண்டிதர் (Dr. Johnson) "ஒருவன் பிறரைக் குறைசொல்வதெல்லாம் அநியாயம்; யோக்கியனை உலகம் சிறக்கணித்தது அறியேன்; ஒருவன் செய்யும் கருமம் கடைத்தேறுதுபோவது பெரும்பாலும் அவன் தோஷமே" என வஞ்சனையின்றிச் சொன்னார்.

அமெரிக்க கிரந்தாசிரியராகிய உவாஷிங்தன் எர்விங் (Washington Irviug) என்பவர் அபிப்பிராயமும் இத்தன்மையதே:—"திறமை இருந்தும் அடங்கி நடப்பவர்களைத் தேடுவார் இல்லையென்று சொல்வது பெரும்பாலும் பிசகு. மந்தரும் சஞ்சலபுத்தியுள்ளவர்களும் இப்படிச் சொல்லித் தங்கள் கருமம் பிறராற் சிதைந்ததென்று காட்ட வகை தேடுவார்கள். ஆனாலும், யோக்கியதையும் அடக்கமுமுள்ளவர்களுடைய பிரசித்தி பெரும்பாலும் முயற்சியின்மை, அசட்டை, சிட்சையின்மை. கனிய முதிர்ந்து பண்பட்டுத் தெளிந்த சாமர்த்தியத்திற்கு முயற்சி இருக்குமானால் எப்பொழுதும் நயம் உண்டு. ஆனால் வேண்டியவர்கள் வலியத் தேடி வருவார்களென்று அது வீட்டில் முடங்கியிருக்கலாகாது, அடக்கமாயிருக்கும் யோக்கியதை எவரும் சப்

டைபண்ணுதிருக்க, எதற்கும் முயற்சி காணமின்றி கடப்ப
வர்களுக் கருமம் சித்திப்பதைப்பற்றியும் தப்பபிப்பிராயம்
மிகுதியாய் உண்டு. ஆனால் எதற்கும் முயற்சி செய்பவர்களிட
த்தில் காலநிஷ்டை, பிரவிர்த்தி எனும் மேலான குணம்
உண்டு. இம்முக்கிய லக்ஷணம் இல்லாவிடில் யோக்கியதை
பலிக்காது. தூங்குகிற சிங்கத்திலும் குலைக்கிற நாய் பெரு
ம்பாலும் காரியத்திற்கு உதவும்.”

எவ்வகைக் கருமத்தையும் சித்தியாய் முடித்தற்கு வேண்
டும் முக்கிய லக்ஷணங்கள் அவதானம், முயற்சி, திட்டவட்
டம், கிரமம், காலநிஷ்டை, தீவிரம் என்பவைகளே. ஆரம்
பதிர்ஷ்டிக்கு இவைகள் அற்பமாகத் தோன்றினும் தோன்
றும். ஆனால் மனுஷர் மனோசுகத்திற்கும் வாழ்விற்கும் பிர
யோஜனத்திற்கும் இவைகள் இல்லாமல் தீராது. இவைகள்
அற்பம் என்பது மெய்யே; ஆயிரம் மாகாணி அறுபத்திரண்
டரை. அற்பம் அனேகம் இரண்டில்லவா மனுஷர் வாழ்வு
தாழ்வு உண்டாகின்றன. அற்பச் செய்கைகளை அடுத்தடு
த்துச் செய்ய மொத்தத்தில் அவனவன் குணம் குறி அமை
யும், அன்றியும் அந்தந்தச் சாதியார் தேசத்தார் குணம்
குறியும் வரையறுக்கப்படும். ஒருவன் கருமமாவது ஒரு
தேசத்தார் கருமமாவது சிதறிச் சீரழியும்பொழுதெல்லாம்
சிதறத்தாக்கிய பாரி அற்பகாரியங்களை அஜாக்கிரதையாய்
விட்டுவிடுதல் ஆகிய பாசெனத் தோன்றும். குடும்ப ஆட்சி
யானாலும் சரி, வியாபாரமுதலிய தொழிலாட்சியானாலும்
சரி, அரசாட்சியானாலும்சரி அதில் அதில் பிரதிமனுஷனுக்
கும் செய் கடன்கள் உண்டு. அதைப்பற்றி அவனவன் அந்
தச் செய் கடன் முடிக்கும் திறத்தைப் பண்படுத்தி வருவி
த்துக்கொள்வது அவசியகம்.

கைத்தொழில், வித்தை, கல்வி இவற்றின் பல துறைக
ளில் உழைத்துப் பிரபலரானவர்கள் சரித்திரத்தை மேலே
திருஷ்டாந்தமாய் எடுத்துக்காட்டியதனால், எத்துறை

யில்லாவது இடையறாது முயன்றுவருவது முக்கியமென்று பின்னும் வலியுறுத்திச் சொல்வது அநாவசியகம். செய்தொழிலின் உறுப்புகளைத்தையும் ஓயாது அவதானித்துவரல் மனுஷர் விர்த்திக்கு மூலம்; மற்றெல்லாவற்றைக் காட்டிலும் முயற்சி சௌபாக்கியத்திற்குத் தாய். இது அநுதினமும் அநுபவசித்தமாய் அறிந்துவரும் சித்தாந்தம். சூசனையும் முக்கியமான லக்ஷணமே. அது ஒருவன் நன்றாய்ப் பண்பட்டிருப்பதைத் தவறாமற் குறிப்பிக்கும் அடையாளம். சூசனையாய்க் கவனித்தல், சூசனையாய்ப் பேசல், சூசனையாய்க் கருமமுடித்தல். செய்வதைத் திருந்தச் செய்ய வேண்டும். அரைகுறையாகப் பத்துப் பங்கு வேலை செய்வதிலும் அருமையாக ஒரு பங்கு வேலைசெய்வது மேல். "விரைவில் முடிக்கும்பொருட்டுச் சற்றுத் தங்கிப் போவோம்" என ஞானி ஒருவர் சொல்வார்.

ஆனால் நிதானம் எனும் இம் மிகுமேலான லக்ஷணத்தைத் தகுமளவிற்கு அவதானிப்பார் இல்லை. "எதாயினும் ஒரு காரியத்தை நிதானமாய் வரையறுத்துச் சொல்லத் தக்கவர்களாக நான் கண்டவர்கள் மிகவும் சிலர். இது ஆச்சரியம்" என்று விவகார ஞானத்திற் சிறந்த ஒருவர் ஏற்கெனவே மொழிந்தார். ஆனாலும், வேலைகளில் மனுஷர் ஒருவனைப் பூஜிப்பதும் தூஷிப்பதும் அவன் அந்த வேலைகள் செய்யும் முறையைக் கண்டே. சகுண அமிர்தங்கள் சாமர்த்தியம் இதர விஷயங்களில் ஒழுக்கம் இருப்பினும் வாலாயமாய் நிதானமற்ற வேலைக்காரனை நம்பக்கூடாது. அவன் செய்த வேலையைத் திருப்பிச் செய்யவேண்டிவரும். இவ்வாறு அவனால் உண்டாம் திண்டாட்டமும் தொல்லையும் அலைச்சலும் அநந்தம்.

சார்லஸ் ஜேம்ஸ் பாக்ஸ் (Charles James Fox) என்பவர் செய்யும் அனைத்தையும் நேரத் தெளியச் சிரமப்பட்டுச் செய்துவருவார். இது அவர் பாக்கு. மந்திரி உத்தியோகம்

பெற்றபொழுது அவர் கையெழுத்து உதவாதென்று எவ ரோ குறைகூறக் கேட்டு மனக்குறைவடைந்து எழுத்துப் பழக்க ஒரு உபாத்தியாயரை அமர்த்திப் பள்ளிப்பிள்ளைகளைப்போலக் கையெழுத்துப் படிவுகளையும் சட்டம் எழுதிக் கொண்டுவந்தார். அவர் தேகம் சற்றுத் தளர்ந்திருந்தும் பந்தாடும்பொழுது வாயுவேகமாய் ஓடிப்பறந்து பந்தெடுப்பதை அறிந்தோர் உமக்கு இத்தனை தீவிரகதி வந்தது எவ்வகையென்று கேட்டதற்கு அவர் "நான் மிக வருந்தி உழைக்கப் பயின்றதனால் வந்தது" என்று விளையாட்டாக மறுமொழி சொன்னார். அவர் அற்ப காரியங்களில் எப்படி அப்படிப் பாரகாரியங்களிலும் நிதானமுள்ளவராயிருந்தார். சித்திரகனைப்போல "ஒன்றையும் அலக்ஷியமாய் விட்டுவிடாதிருந்ததனால்" கீர்த்திமானானார்.

கிரமம் வேலைக்கு முக்கியம்; அது அநேக வேலையைத் தா ப்திகரமாய்ச் செய்துமுடிக்க உதவும். "கிரமம் என்பது பெட்டிக்குள் சாமான் வைத்து அடுக்குவதற்குச் சமானம்; நன்றாய் அடுக்கத் தெரியாதவன் பெட்டி நிறைய அடுக்கியிருக்கும்பொழுது தெரிந்தவன் அதை அடக்கி அதனுடன் பின்னும் பாதிப் பங்கு அடுக்குவான்" எனக் கனம். ஸீஸில் போதகர் மொழிந்தார். வேலையில் அவர் அபூர்வ தீவிரர். அவர் கைக்கொண்டுவந்த விதி இது:—"பல காரியங்களைச் செய்து முடிக்கத் தகும் சுருக்குவழி எடுத்த வேலையை இடையிற் குறைவேலையாய் நிறுத்திவிடாமல் முடித்துவிடுவதே". அவர் அவகாசம் கண்டு முடிக்கும்படி எந்த வேலையையும் ஒருபொழுதும் குறைவேலையாய் விட்டதில்லை. வேலை நிபிடகரமாயிருக்கும்பொழுது அவர் ஒன்றையும் அரைகுறையாய் நிறுத்திவிடாமல் உண்டிமறுத்துத் துயில் ஒழித்துச் செய்துமுடிப்பார். டீ விட் (De Witt) என்பவர் அனுசரித்த விதியும் ஸீஸில் விதியைப்போலவே இருந்தது:— "வேளைக்கு ஒரு வேலை". "நான் அவசியமான பத்திரம்

ஏதும் எழுதவேண்டியிருந்தால் எழுதி முடிகிற வரையில் மற்றொன்றையும் நினையேன், குடும்பகாரியம் யாதாயினும் பார்க்கவேண்டியிருந்தால் நிருமனமும் அதொன்றையே பார்த்து முடிப்பேன்" என்று அவர் மொழிந்தார்.

வேலையில் விசேஷ தீவிரமுள்ளவரொன்றும் விநோதஸ்தலங்களுக்கு நித்தமும் போகிறவரொன்றும் ஊர் அறியப் பெற்ற ஒரு பிரான்சிய மந்திரியைப் பார்த்துத் தாம் இவ்விரண்டையும் விடாது செய்துவரும் உபாயம் ஏதென்று ஒருவர் கேட்க, அம்மந்திரி "மற்றொன்றுமல்ல, இன்று செய்யவேண்டியதை நாளைச் செய்யலாமென்று நான் ஒருபொழுதும் நிறுத்திவைக்கிறதில்லை" என உத்தரம் சொன்னார். இந்தக் கிரமத்தை மாற்றி அங்கிலேய அமைச்சர் ஒருவர் நாளைவரையில் நிறுத்திவிடக் கூடியதை ஒருபொழுதும் இன்றைக்குச் செய்வதில்லை என விதி கற்பித்துக் கைக்கொண்டுவந்தார் என்று ப்ளௌஹம் பிரபு மொழிந்தார். அம்மந்திரியை இப்பொழுது முக்காலேமூன்றுவீசம் மறந்திட்டோம், ஆனாலும், அவரன்றிப் பின்னும் பலர் சாதனை இதுவேயாயிருக்கின்றது - இது நிர்ப்பாக்கியந்தான். இது சோம்பரும் * அகிர்தார்த்தரும் கைக்கொள்ளும் சாதனை. அன்றியும், இவ்வகை மனுஷர் தமது கருமத்தைக் காரிய கர்த்தர்களை நம்பிச் செய்யவிடுவார்கள். காரியகர்த்தரை எப்பொழுதும் நம்பலாகாது. முக்கியமான கருமங்களை அவனவன் தானே செய்யவேண்டும். "உன் வேலை செய்து முடிய வேண்டில் நீயே போய்ச்செய், அது செய்துமுடிவது உனக்கு மனம் இல்லாவிடில், எவனாவது ஒருவனை அனுப்பு." இது பழமொழி.

சோம்பராகிய நாட்டகத்துக் குலமகன் ஒருவருக்குச் சிறிது பூஸ்திதி இருந்தது. வருஷவாரி அதன் விளைவு முன்பின் ஐந்நூறு பௌண்டுக்குக் காணும். கடனில் மூழ்கி

* Unsuccessful persons.

அவர் அச்சொத்திற் பாதியை விற்றுக் கடன் இறுத்து, மிச்சத்தை முயற்சியுள்ள இருஷிகன் ஒருவனிடத்தில் இருபது வருஷத்திற்குக் குத்தகைக்கு விட்டார். குறித்த கால அறுதியில் இருஷிகன் குத்தகைப்பணம் கட்டக் காணிக்காரனிடத்திற்குப் போய் உமது நிலத்தை விற்றுப்போடுவீராவென்று கேட்டான். காணிக்கு உடையவர் பிரமை அடைந்து, "நீ வாங்கிக்கொள்வாயா" என வினவ, ஆம், கிரயத்தில் நாம் இருவரும் இணங்கினால் வாங்குவேன், என்று உத்தரம் சொன்னான். அது கேட்டுக் குலமகன் "இது மிகவும் அதிசயம்; இந்நிலமும் பின்னும் இவ்வளவும் சொந்தமாய் வைத்திருந்த எனக்கு இதன் விளைச்சல் ஜீவனத்திற்குக் கட்டிவராதிருக்க, நீ வருஷாவருஷம் இருநூறு பௌண்ட் குத்தகைப்பணம் தவறாமற் செலுத்திக்கொண்டுவருகிறாய். சில வருஷத்திற்குள் என் நிலத்தைக் கிரயம் கொடுத்து வாங்கவும் வல்லவனானாய். இது எப்படி - சொல்லப்பா" என்று பரிந்து கேட்டார். அதற்கு அவன், "இதன் காரணம் வெளிப்படை; தாம் அசைவற உட்கார்ந்திருந்து போ என்றீர், நான் எழுந்துவா என்றேன். தாம் மஞ்சத்தில் படுத்திருந்து தமது சொத்தை அநுபவித்தீர். நான் காலையில் எழுந்து என் வேலையிற் சித்தனேயாயிருந்தேன்" என மறுமொழி பகர்ந்தான்.

உத்தியோகம் பெற்றுப் புத்திமதி சொல்லக் கேட்ட வாலிபன் ஒருவனுக்கு ஸ்ரீ உவால்த்தர் ஸ்காத் (Sir Walter Scott) எழுதிய மறுமொழியின் பின்வரும் இடபுத்தியைக் காணலாம்; "உன் காலமுழுதும் வேலையிற் கழியாமற் சிறிது அவகாசம் இருந்தால் ஒருவித் கெடுமதி உன்னை எளிதிற் சுற்றிக்கொள்ளும். அதற்கு இடங்கொடுக்கப் போகிறாய்-பத்திரம் பார். வீண்பொழுதுபோக்கு என்று பெண்பாலார் சொல்வது அதைத்தான். நீ அநுசரிக்கவேண்டிய விதி செய்யவேண்டிய எதையும் உடனே செய்துமுடி. வேலைக்குப்

பின்னன்றி, ஒருபொழுதும் வேலைக்குமுன் இளைப்பாறவும் விநோதங்களிற் பிரவேசிக்கவும் வேண்டாம். ஒரு பட்டாளம் வழி நடக்கும்பொழுது முன்னணிவீரர் தடையின்றி நடைகொள்ளாவிடில் பின்னணி பெரும்பாலும் குலைந்து சிதறுண்ணும். வேலையின் இயற்கையும் இதே. முதல் முதற் கையிடுவதை அப்பொழுதே விட்டு விடாமற் கிரமமாய்ச் செய்துமுடிக்காதிருந்தால் பின்பு வேறு வேலைகள் திரளாய்ப் பெருகும். பெருகவே நாலுவேலைகளும் ஏககாலத்தில் நிபிடிகரமாகும். இந்த அமர்க்களத்தை உத்தரிக்கத் தக்க புத்தி எந்த மனுஷனுக்கும் இல்லை''.

காலத்தின் அருமை பெருமையை ஏற்கும் வண்ணம் சிந்திக்கும் சிந்தனை தொழிலில் காலநிஷ்டை தவறாதிருக்கத் தூண்டிவிடும். இத்தாலிய வித்தகர் ஒருவர் காலத்தைத் தமது பூஸ்திதியென்று சொல்லிவருவார். இந்நிலத்தைப் பண்படுத்தினாலன்றி இதில் ஒன்றும் விளையாது. ஏற்குமாறு திருத்தினால் முயற்சியாய் உழைப்பவனுடைய உழைப்புக்குத் தக்க பயன் ஒருபொழுதும் உண்டாகாமற்போகாது. அதைத் தரிசாயிருக்கவிட்டால் உதவாத புல் பூண்டும் நானாவித விஷஜாதி செடி கொடி விருட்சங்களும் உண்டாவதன்றி மற்றொரு பிரயோஜனமும் இல்லாதே போம். இடைவிடாது எப்பொழுதும் வேலைசெய்துகொண்டுவருவதனால் விளையும் பயன்களிற் சிறிய பயன் ஒன்று என்னவானால் அது ஒருவனைத் தீமைக்கு விலக்கும். ஏனெனில், சோம்புள்ள மூளை பிசாசின் தொழிற்சாலை, சோம்பன் பிசாசின் தலையணை. இது நிச்சயம். வேலை செய்வதும் வீட்டைக் குடிக்கூலிக்கு விட்டிருப்பதும் சரி. சோம்புற்றிருப்பதும் வீடு காலியாயிருப்பதும் சரி. மனோபாவனையின் கதவுகள் திறந்திருக்கும்பொழுது சோதனை தடையற உட்செல்லும், தீய நினைவுகள் திரள் திரளாய் வரும். வேலை சற்றுக் குறைவாயிருக்கும்பொழுதுதான் முக்கியமாய்ச்

கடலோடிகள் முறுமுறுத்துக் கலகம் செய்ய ஆரம்பிப்பார்கள். இது கடல் ஓடிப் பயின்றவர்களுக்கு நன்றாய்த் தெரியும். ஆனது பற்றியே வயோதிகரான மாலுமி ஒருவர் வேலை மற்றொன்றும் இல்லாதிருக்கும்பொழுது "நங்கூரம் விளக்கும்படி" கடலோடிகளுக்குத் திட்டம் செய்வார்.

காலம் திரவியம் எனும் பழமொழியை வேலைக்காரர் பாராட்டுவது வழக்கம். காலம் திரவியம் மாத்திரமல்ல, முறைமையாகப் பிரயோகித்தால் அதே ஒருவனைப் பண்படுத்தும், அதே ஒருவனைத் தேற்றும், அதே நல்லொழுக்கத்தை முதிர்விக்கும். அன்றன்று வீண்காரியங்களிலாவது வினையொழிந்திருப்பதிலாவது கழிக்கும் ஒரு மணி நேரத்தைத் தாம் தாம் தேறும் முயற்சியில் போக்கினால், அது அறிவீனனைச் சில வருஷத்திற்குள் அறிவாளி ஆக்கும்; நற்கிரியை செய்துவந்தால், உள்ள நாள் உள்ளமட்டும் அவனாற் பிரயோஜனம் உண்டாம், மரணம் மதிக்கத்தகும் கிரியைகளின் விளைவு அறுவடைக்காலம். தினம் ஒன்றுக்குப் பதினைந்து நிமிஷம் தான் தான் தேறும் முயற்சி செய்துவந்தால் ஒரு வருஷமுடிவில் அதன் பயன் புலப்படும். நற்சிந்தனைகளையும் அவதானமாய்ச் சம்பாதித்த அனுபவத்தையும் வைக்க இடம் வேண்டுவதில்லை. அவைகளை நமக்குத் துணையாய் எவ்விடத்திற்கும் கொண்டுபோகலாம். கொண்டுபோகச் செலவும் இல்லை, கொண்டுபோவது பாரமுமல்ல. காலத்தைக் கட்டுமட்டாய்க் கழியவிடாதே ஒழிவுநேரம் மிஞ்சும்படி செய்துகொள்ளும் உபாயம். இப்படிச் செய்வோமானால், காலம் நம்மைத் தள்ளிக்கொண்டுபோவதற்குப் பதிலாக, நாம் வேலையை முற்றமுடியச் செய்யவும் காலத்தைத் தள்ளிக்கொண்டு போகவும் இயன்றவர்களாவோம். ஆனால், காலத்தை வகைமோசமாய்க் கணக்கிடுதல் நம்மை நித்தமும் ஆத்திரத்திற்கும் தடுமாற்றத்திற்கும் சங்கடத்திற்கும் உட்படுத்தும்; வேலைக்கு அடுத்த விரகுஅறிந்து காலந்தன்

ளும் உபாயமே பூலோக வியாபாரமாய்முடியும். பெரும்பா லும் இந்தஉபாயத்தைத் அடுத்துப் பாடாவிதிநேரிடும். “எதை யும் குறித்த காலத்திற்குக் கால்மணிநேரம் முந்திக் கை யிட்டதனால் நான் செய்தன எல்லாம் சித்தித்தன” என்று நெல்ஸன் ஒரு முறை சொன்னார்.

கையில உள்ள பணம் எல்லாம் செலவழிந்து தீருமள வும் சிலர் பணத்தின் அருமையை நினைக்கிறதில்லை. வெகு பெயர் தங்கள் காலத்தையும் இவ்வண்ணமே செய்கிறார் கள். அவர்கள் செயலின்றி நாழிகைக்கு நாழிகை வீணே கழிய விட்டுவிடுவார்கள். பின்பு ஆயுசு விரைவிற் குன்றும் பொழுது அவர்கள் காலத்தைப் புத்தியாய்ப் போக்குவது கடனென்று எண்ணுவார்கள், எண்ணினாலும், அவதான மின்றிச் சோம்பியிருக்கும் வழக்கம் அதற்குள்ளே நிலை பெருகிவிடும். பாசத்தாற் கட்டுண்ண உடன்பட்டு இடங் கொடுத்த அவர்கள் அப்பால் அந்தப் பாசத்தை அறுக்க வல்லவர்களல்ல. கைகடந்துபோன திரவியத்தை முயற் சியாலும், மறந்துபோன அறிவைக் கற்பதனாலும், போக கடித்த சுகத்தை அளவறிந்துண்பதனாலும் ஔஷதத்தா லும் மீளவும் அடைந்துகொள்ளலாம், வீணே கழிந்த கால மோ ஒருபொழுதும் மீளாது.

காலத்தின் அருமையை எற்றும் எண்ணம் சித்தித்தால், காலநிஷ்டை தவறாதிருக்கும் சாதனைகள் உண்டாம். “கால நிஷ்டை காவலர்க்கு விநயம்” என 14-வது லூயி அரசர் மொழிந்தார். அன்றியும் அது குலமக்கள் செய்கடன், வேலைக்காரருக்கு அது இல்லாமல் தீராது. இந்தக் குண சாதனையிலும் அதிவிரைவில் ஒருவனுக்குப் பிறரால் நம் பிக்கை உண்டாகுவதும் ஒன்றும் இல்லை, இக்குணமின் மையிலும் அதிவிரைவில் உள்ள நம்பிக்கையை நிலைகுலைப் பதும் ஒன்றும் இல்லை. தன் உத்தியோகத்தின் பெயரிற் கண்ணாயிருந்து உன்னைக் காத்திருக்க வைக்காதவன் தன்

காலத்தையன்றி உன் காலத்தையும் மதிப்பவனென்று காட்டுகிறான். இவ்வண்ணம் காலவிஷயமானது லௌகிக வியாபாரத்தில் நம்மோடு எதிர்ப்படுமவர்கள் பெயரில் நமக்கு அபிமானம் உண்டெனக் காட்டியிடும் விதங்களில் ஒன்று. அன்றியும் அது ஒருவாறு நெஞ்சறிய நேர்மையாய் ஒழுகுவதாம். ஏனெனில், எவ்வகை வேலையும் வெளிப்படையாகவெனினும் குறிப்பாகவெனினும் ஓர் உடன்படிக்கையாயிருக்கின்றது. அவ்வுடன்படிக்கையைக் கைக்கொள்ளாதவன் நம்பிக்கைத்துரோகி ஆவதுந்தவிர, பிறருடைய காலத்தையும் அயோக்கியத்தனமாய்ப் பிரயோகித்து இவ்வாறே தவறாமல் அவன் குடி கெட்டுப்போகின்றது. காலத்தைப்பற்றி அக்கறை இல்லாதவனுக்கு வேலையிலும் அக்கறை இராது. முக்கியமான வேலைகளைச் செய்ய நம்பிவிட அவன் யோக்கியன் அல்லவென்று இயற்கையாய் அறுதியிடுகிறோம். உவாஷிங்தனுடைய லிகிதர் ஒரு நாள் உத்தியோகத்திற்கு நாழிகை சென்று போய்க் கைக்கடிகாரம் பிசகியதுபற்றிச் சற்றுப் பிந்தி வந்ததை மன்னிக்கவேண்டுமெனக் கேட்க, யஜமானன் "அப்படி ஆனால் நீ வேறொரு கைக்கடிகாரம் வாங்கவேண்டும், அல்லது நான் வேறொரு லிகிதனைத் தேடிவைத்துக்கொள்ளவேண்டும்" என அமைதியாய்ச் சொன்னார்.

காலத்தையும் அதிற் செய்யும் வேலையையும்பற்றி அசட்டையாயிருப்பவன் பொதுவாய்ப் பிறருடைய சமாதானத்தையும் அமைதியையும் சீர்குலைக்கிறவனென்று வாளாயமாய்க் காணப்படுகிறான். "பட்டணத்தவர் காலையில் ஒரு மணிநேரத்தைப் போக்கடித்து அன்று பகல்முழுவதும் அதைத் தேடித்திரிகிறார்" என வயோதிகராகிய நியூகாஸில் ட்யூக்கைக்குறித்து செஸ்தர்பீல்ட் பிரபு வெகு தந்திரமாய் மொழிந்தார். காலநிஷ்டையில்லாதவனுடு ஊடாடும் யாவருக்கும் காலத்திற்குக்காலம் கொதிப்பு உண்டாகும்; அவன் எப்பொழுதும் நாழிகை சென்று போவான். அவன் சிரமமாயிருப்பது அக்

கிரமத்தில் மாத்திரம். அவன் ஒரு விதிக்கு அமைந்தொழுகு வான்போல் எப்பொழுதும் வீண்காலம்போக்கிவருவான்; குறித்த கருமத்திற்குக் காலம் பிந்திப் போய்ச்சேர்வான்; வண்டித்தொடர் புறப்பட்டபின் இருப்புப்பாதை ஸ்தானத்திற் சேர்வான்; பெட்டி பூட்டியபின் தபாலிற் கடிதம் போடுவான். இவ்வாறே, வேலை தாமதமாகிவிடும். அதிற் சம்பந்தப்பட்ட யாவருக்கும் கஷ்டம் உண்டாம். காலம் பிந்திப் போகும் சாதனையுள்ளவர்களே கருமம் கடைத்தேறாதவர்களென்று பெரும்பாலும் காணப்படும். உலகம் அவர்களைப் பிரத்தியேகமாய் விலக்கிவிட, அதிர்ஷ்டத்தை கொந்து தூற்றுவார் வகுப்பு அவர்களால் தொகை பெருகும்.

உயர்ந்த வகுப்பு வேலைக்காரனுக்கு வேலைக்குரிய சாதாரண சாமர்த்தியங்களோடு சீக்கிரபுத்தியும் நினைத்தபடி நிறைவேற்றுவதில் உறுதியும் வேண்டும். சாமர்த்தியமும் முக்கியந்தான். இது பாதி இயற்கையாய் உள்ளதெனினும், இதைக் காட்சியாலும் அனுபவத்தாலும் திருத்தி விர்த்திப்பிக்கலாகும். இந்தக் குணமுடையோர் வேலைசெய்யும் சரியானவகையை விரைவிற் காண்பார்கள்; நினைத்ததை முடிக்கும் நிர்ணயம் இருக்குமானால், தாங்கள் கையிட்டதைச் சொர்பறச் செய்து சித்திகாணக் கங்கணம் கட்டிநிற்பார்கள். சமர்க்களத்திற் சேனாபதியைப்போலப் பெருமுயற்சிகளில் பிறரை வைத்து வேலை வாங்குவோர்க்கு இந்தக் குணங்கள் முக்கியமாய் வேண்டும். இவை இல்லாமல் தீராது. தளபதி ரணகாம்பீரியத்தில் மாத்திரமல்ல, வேலைத்திறத்திலும் பெருந்தகையாயிருப்பது ஆவசியகம். தளபதிக்கு மிக்க சாமர்த்தியமும், மனுஷர் குணங்களில் அதிகம் அறியும் அறிவும், திரளான சேனாவீரரை நிர்வகித்துக் கிரமமாய் வேலைவாங்கத்தக்க திராணியும் இருக்கவேண்டும். அவர்கள் யுத்தம் செய்து ஜயம்பெறும் பொருட்டுத் தளபதிதாமே அவர்களுக்கு அன்னமும் ஆடையும் ஆவசியகமான எவ்வகைப் பொருளும் கொடுத்து வரவேண்டும். இவைகளில் தட்டோவி

யன் உவெலிங்டன் இருவரும் தம்மின்மிக்கோர் இல்லாத வேலைக்காரர்.

இவற்றை அனைத்தையும் கூறுகூறாகப் பார்வையிடுவது நெப்போலியன் மனதிற்கு மெத்தவும் பிரியமாயினும், சங்கிரஹ சக்தியும் அவருக்குப் பிரபலமாய் உண்டு. அந்தச் சக்தி இருந்ததனால் நெடுந்தூரம் எட்டிய நிரைகளை நெட்டாயமாய்க் கண்டு, சிற்றுறுப்புகள் அனைத்தையும் புத்தியாய் விரைவில் ஒருங்கு நிர்வகிக்கத் திராணியந்தரானார். அவர் சேனா வீரர் குணம் குறிகளைத் தேற அறிந்ததனால் தாம் நினைத்த உபாயத்தை நிறைவேற்றத்தக்க திறவான்களைத் தவறாது ஆய்ந்தெடுக்க வல்லவரானார். முக்கியமான சித்திகளை விளைவிக்கத்தக்க விசேஷ காரியங்களில் அவர் கூடியவரையில் காரியகர்த்தரை நம்பி விடுகிறதில்லை. அவர்க்குள்ள இந்தக் குறிக்கு இப்பொழுது அச்சிட்டுவருகின்ற 'நெப்போலியன் கடிதத்திரட்டு' எனும் புஸ்தகத்தில் கவனிக்கத்தகுமளவிற்குத் திருஷ்டாந்தம் காணலாம். முக்கியமாய் இதற்குத் திருஷ்டாந்தம் ஐலா சண்டையில் வெற்றி உண்டாய்ச் சிறிது காலத்திற்குள் 1807-ம் ஆண்டு போலாந்தின் எல்லையில் பின்கென்ஸ்டீன் எனும் சிறுகோட்டையிலிருந்து சக்கரவர்த்தி எழுதிய கடிதங்கள், சட்டதிட்டங்கள், பத்திரங்கள் அமைந்த 15-வது புஸ்தகத்தின் பொருளட்டவணையே.

அப்பொழுது பிரான்சிய சைனியங்கள் பஸ்ஸார்ஜ எனும் ஆற்றங்கரையில் கூடாரம் அடித்திறங்கியிருந்தன. ருஷ்ய ராணுவம் அவர்களுக்குமுன்னே, ஆஸ்திரிய ராணுவம் வலப்பக்கத்தில், ஜயிக்கப்பட்ட புருஷியர் பிற்பக்கத்தில். பகைவர் தேசத்தின் மார்க்கம் நெடுந்தூரம் பிரான்சு தேசத்திற்கு நிர்ப்பந்தமின்றிப் போகவேண்டியிருந்தது; ஆனால் இது மிகவும் அவதானமாய்ச் செய்யவேண்டியிருந்தது. அத்தனை பூர்வதிருஷ்டியாய் இதற்குரிய எத்தனம் யாவும் செய்யப்பட்டிருந்தன. அதுபற்றி, நெப்போலியன் எதாயினும்

ஒரு அஞ்சலை ஒருபொழுதும் பிசகவிட்டதில்லையென்று சொ
ல்வார்கள். பிரான்சு, ஸ்பேன், இத்தாலியா, ஜர்மானியா
தேசங்களில் வெகுதூரம் தொலையினின்று சேனைகள் வருவது
போவது, துணைப்படைகொண்டு வருவது, பொலாக்து—புரு
ஷியாதேசங்களின் விளைபொருளைத் தன் பட்டாளஸ்தானத்
திற்குத் தடையறக் கொண்டுவந்து சேர்க்கும்படி கால்வாய்
வெட்டுவிப்பது, சாலைகளை ஒப்பம்செய்விப்பது முதல் மிக
வும் சிறிய காரியங்கள் அறுதியாக யாவையும் அவர் ஓயாமல்
அவதானித்துக்கொண்டேவந்தார். இன்னின்ன இடங்களில்
குதிரை சேகரிக்கவேண்டுமெனத் திட்டம் செய்வது, சீனி
வேண்டுமளவிற்குச் சவதரித்துக் கொடுக்க ஒழுங்குசெய்
வது, ரணவீரருக்குப் பாதரக்ஷை தைக்க உத்தரவுசெய்வது,
ரொட்டி பிஸ்கட்சாராயம் பாளயத்திற்கு அனுப்பவேண்டி
யதும் தளத்தின் செல்விற்குக் களஞ்சியத்திற் கட்டிவைத்
திருக்கவேண்டியதும் வகைக்கு இத்தனை இத்தனையென்று
குறிப்பது இவை எல்லாம் அவரால் முடிந்தன. இம்மாத்தி
ரமல்ல, ப்ரெஞ்சு வித்தியாசாலையைத் திருத்தும் உபாயம்,
சர்க்கார் கல்வியபிவிர்த்தி செய்யும் உபாயம் சூழ்ந்து பரீ
ஸைக்கு எழுதி அனுப்புவார்; மனிட்டார் பத்திரிகைக்கு வர்
த்தமானச்சுருக்கமும் பிரபந்தங்களும் வாசகம் சொல்லி
எழுதுவிப்பார்; அரசிறை வரவு செலவுமதிப்புப் பத்திரங்க
ளைப் பார்வையிட்டுத் திருத்துவார்; துவிலரிஸ் அரண்மனை
யிலும் மடிலேன் தேவாலயத்திலும் இன்னின்ன திருத்தம்
செய்யவேண்டுமென்று சிற்பிகளுக்குத் திட்டம் எழுதுவார்;
மடம் டீ ஸ்தேயெல், பரிஸ்வர்த்தமான பத்திரிகைகளுக்கு
அப்போதப்போது கண்டனை எழுதுவார்; பெரு நடனசா
லையில் பிணக்குத் தவிர்க்கத் தலையிடுவார்; துர்க்கிய சுல்தா
னுடனும், பாரசீக ஷா அரசரோடும் கடிதப் போக்குவரவுசெ
ய்துகொண்டுவருவார். ஆகவே, அவர் தேகம் பிங்கென்
ஸ்டீனில் இருக்க, மனமோ பரீஸிலும், ஐரோப்பாவிலும்,

உலகம் எங்கும் ஒருசேர இடங்களில் பிரவர்த்தியாயிருந்ததாகத் தோன்றியது.

அவர் நேயிக்கு ஒருகடிதம் போக்கித் தாம் அனுப்பிய துப்பாக்கிகள் தவறாமல் வந்து சேர்ந்தனவாவென்று கேட்பார்; மற்றொரு கடிதத்தில் உவர்ட்டெம்பர்க் பட்டாளத்திற்குக் கொடுக்கவேண்டிய உடைசட்டை, பெருமேலங்கி, ஆடை, பாதரக்ஷை, படைக்கலம் இவைகளைக் குறித்து ஜிரோம் ராஜபிரபுவிற்குத் திட்டம்செய்வார்; அப்பால் தளத்திற்கு இருபங்குதானியம் அனுப்பும்படி கம்பெஸீரீஸை நெருக்கி ஏவுவார் "வந்தாற் பார்க்கலாமென்று பின்போடுவதும் பக்குவம்சொல்வதும் இச்சமயத்திற்கு உதவா. எல்லாவற்றிலும் முக்கியம் அதை விரைந்து செய்யவேண்டும்" என்று அவர்சொன்னார். பின்பு தளத்திற்கு உட்சட்டை வேண்டுமென்றும், அது கைவசம் வந்து சேரவில்லையென்றும் தருவிற்குத் தெரிவித்தார்; "பிஸ்கட், ரொட்டி இவைகளைச் சரியாகப் பங்கீடுசெய்து முடிக்கதா—இதைப் பற்றி அறிக்கை எழுதவும்" என மாஸ்ஸினாவிற்குக் கடிதம் எழுதினார். "ராணுவ வீரருக்குக் கத்தி இல்லையென்று முறையிடுகிறார்கள்; பொஸெனில் வாங்கிவரும்படி உத்தியோகஸ்தர் ஒருவரை அனுப்பும். தலைச்சீராவும் இல்லையெனக் கேள்வி; எப்லிங்கில் செய்யும்படி திட்டம் பண்ணும்..நித்திரை செய்துகொண்டிருந்தால் எந்தவேலையும் நிறைவேறாதே" என பெர்கின் டியூக் பட்டவர்த்தனருக்கு மார்க்கவசம்தரித்த ரணவீரர் படைக்கோலத்தைக் குறித்துத் திட்டம் செய்தார். இவ்வண்ணம், எந்தச் சிறியகாரியத்தையும் அவர் பாராமுகம் செய்யவில்லை. தொழிலில் பிரவர்த்தியாகும்படி அவர் யாவருடைய ஊக்கத்தையும் அபூர்வ சக்தியுடன் தூண்டிவிட்டார். அவர் தன்னைப் பரீக்ஷைபார்த்து முடிய வெகுதினம் செல்லும்,—இப்பரீக்ஷைக்கு அவர் சில வேளை தினம் ஒன்றுக்குத் தொண்ணூறு மைல் முதல் நூற்றிருபது மைல் வரையும் சவாரிபோவார். அன்றியும் ராணுவ

சிக்ஷை, பெரியோர்க்குத் தரிசனம் கொடுத்துபசரித்தல், ராஜகாரியம் பார்த்தல் இவைகளுக்குப் பல நாட்செல்லும்— வேலையோடு அடுத்த காரியங்களுக்குக் காலம் சிறிதும் மிஞ்சாது. இப்படி இருந்தும், இதனிமித்தம் அவர் ஒன்றையும் அலக்ஷியமாய் விட்டுவிடவில்லை. ஆவசியகம் ஆகும்பொழுது ராத்திரிகாலத்தில் வெகுநேரம் அவர் விழித்திருந்து அரசிறை வரவு செலவு மதிப்புப் பத்திரம் பரீக்ஷிப்பார், வர்தகம்சொல்லிக் கட்டளைப் பத்திரங்களை எழுதுவிப்பார், அரசாட்சி அங்கத்தின் அமைதியிலும் விவகாரத்திலும் ஆயிரக்கணக்காய்ச் சில்லறை விஷயங்களைக் கவனமாய்ச் சிந்திப்பார். அரசாட்சியந்திரம் முக்காலே மூன்று வீசம் அவர் புத்தியில் திரண்டு குவிந்திருந்தது.

நெப்போலியனைப்போல வெலிங்தன் டியூக் பட்டவர்த்தனரும் முதன்மையான வேலைக்காரர். அவர் ஒருபொழுதும் சண்டையில் அபஜயப்படாதிருந்தது முக்கியமாய் ஜனம் விவேகத்தின் அளவிற்கு வேலைத்திறமை உடையவராயிருந்ததனாலேதானென்று சொல்வது விபரீதமல்ல.

லெடாஸ்த்தன் உத்தியோகம் செய்கையில் அவர் பதவி உயரத் தாமசப்படுவதைப்பற்றி மனக்குறை யடைந்தார். அவர் காலாட் பட்டாளத்தினின்று குதிரைப்பட்டாளத்திற்கு இருமுறை உயர்ந்து இருமுறை இழிந்தார். ஆனதுபற்றி, அப்பொழுது அயர்லாந்தின் ராஜப்பிரதிநிதியாயிருந்த காம்டென் பிரபுவிற்கு அவர் விண்ணப்பம் எழுதி, அரசிறைச் சபையிலாவது பொக்கசக்கணக்கர் சபையிலாவது உத்தியோகம் வேண்டுமெனக் கேட்டார். கேட்டபடி உத்தியோகம் படித்துண்டானால், முதன்மையான உத்தியோக வகுப்புத்தலைவர் ஆவார், வர்த்தகத்தில் பிரவேசித்தால் பிரபல வர்த்தகராவார், கைத்தொழிலில் பிரவர்த்தித்தால் அதிலும் சிரேஷ்டராவார். இதற்கு ஐயம் இல்லை. ஆனால் அவர் விண்ணப்பம் வாய்க்கவில்லை—ஆகவே பிரித்தானிய தளபதிகளில் மிக்கோராகும்படி ராஜசேவகத்தைக் கைவிடாதிருந்தார்.

ட்யூக் முதலில் சண்டைசெய்யத் தொடங்கியது பலான்டர்ஸிலும் உலாந்திலும், யோர்க் ட்யூக்கின்கீழும், வால்மோடென் தளபதியின் கீழும். செய்தொழிற்கிரமத்தாழ்வினுலும் தளபதி சாமர்த்தியக்குறைவினுலும் பல கெடுதிகளும் அபஜயமும் நேரிடுவதுமன்றி தளத்தின் நன்னெறிக்கும் சிதைவு உண்டாமென்று அங்கு அவர் கண்டறிந்தார். ராணுவசேவகத்தில் சேர்ந்து பத்துவருஷம் சென்றதன்மேல் அவர் இந்தியாவில் கர்னல் பதவி பெற்றார். தன்ராமனவலியும் முயற்சியுமுள்ள உத்தியோகஸ்தரென்று மேலதிகாரிகள் அவரை வியந்து அறிக்கை எழுதினார்கள். அவர் ராணுவசேவகத்திற்குரிய சில்லறைவிஷயம் ஒன்றையும் அலக்ஷியமாய் விட்டுவிடாமல் நன்குகவனித்து, ராணுவசேவகர் நிலைமையைச் சிரேஷ்டமாய் உயர்த்த வகைதேடினார். "கர்னல் வெல்ஸ்லி பட்டாளம் பட்டாளம் அனைத்திற்கும் ஓர் அச்சாயிருக்கின்றது. சேவகமோடியிலும், சிக்ஷையிலும், போதனையிலும், நல்லொழுக்கத்திலும் அவர் பட்டாளம் புகழ்தற்கு அரியது" என 1799-ம் ஆண்டு ஹாரிஸ்தளபதி எழுதினார். இவ்வாறே அவர் பின்னும் அதிக பிரபலபதவிகளுக்கு யோக்கியராகிச் சிறிது காலத்திற்குள் மைசூர் ராஜதானியின் கவர்னராக நியமிபெற்றார். மஹாராஷ்டிரருடன் நடந்த சண்டையில் அவரை முதல்முதல் தளபதியாக்கிப் பரீக்ஷைபார்த்தார்கள். முப்பத்து நாலு வயசில் அவர் பிரித்தானிய ராணுவசேவகர் 1500 பெயர், சிப்பாய்கள் 5000 பெயருடன் மஹாராஷ்டிரகாலாட் சேவகர் 20,000 பெயரையும் குதிரை வீரர் 30,000 பெயரையும் முறியடித்து என்றும் ஞாபகத்தினின்று அழியாதிருக்கத்தக்க அஸேயே சண்டையை வென்றார். இத்தனை பிரபலமும் அவர் மனநிறைவைச் சிறிதும் நிலைகுலைக்கவுமில்லை, அவர்க்குள்ள குன்றாத நேர்மையைப் பின்னப்படுத்தவுமில்லை.

பின்பு சிறிது காலத்திற்குள் அதிசயமாய் அவர்க்குள்ள அரசாட்சித்திறத்தை வெளியிடச் சமயம் வாய்த்தது. சீரங்

பட்டினத்தைக் கைவசப்படுத்தினவுடன் பிரதான ஜில்லா ஒன்றுக்கு அவர் அதிகாரியானார். முந்தவே ராணுவவீரருக்குள் திட்டமான ஒழுங்கும் சிட்சையும் ஸ்தாபிப்பதே அவர் தாற்பரியமாயிருந்தது. ராணுவவீரர் பெற்ற ஜயத்தால் கருவித்து, சொற்கேளாமல் அதிக்கிரமிக்கத் தலைபட்டார்கள். "தூக்கிலிடும் அதிகாரி என்னிடத்திற்கு வந்து என் சொற்படிசெய்ய ஆஜராயிருக்கட்டும். இந்தக் கூறைக்காரிற் சிலரைத் தூக்கிற்போடுகிறவரையில் கிரமமும் க்ஷேமமும் உண்டாவது அசாத்தியம்" என அவர் மொழிந்தார். சமர்க்களத்தில் வெலிங்டனிடத்தில் விளங்கிய இக்கணகண்டிப்பு சேனவீரரை நிலைபடச்செய்தும், பலபடைகளில் அவர்களுக்கு ஜயமாய் முடிந்தது. அப்புறம் அவர் செய்த முயற்சி கடைகளை நூதனக் கிரமமாய் ஸ்தாபித்ததும் போஜன பதார்த்தங்களின் வருவழிகளை மீளவும் திறந்ததுமே. கர்னல் வெல்ஸ்லி ஸ்தாபித்த குன்றாத சிட்சைக்காகவும், போஜனபதார்த்தங்கள் சேகரிக்கச் சிந்தித்துச் சீர்தூக்கி மேலான ஏற்பாடுகள் செய்து அவ்வேற்பாடுகளால் கடைக்குத் தடையறத் திரளாய்ப் பலபண்டபதார்த்தங்கள் வருவித்து நாலுவகை வியாபாரிகளுக்கும் உற்சாகம் புகட்டியதற்காகவும் ஹாரிஸ் தளபதி அவரை வியுறுத்திப்பாராட்டிக் கவர்னர் ஜெனரலுக்குக் கடிதம் எழுதினார். அவர் இந்தியாவில் சஞ்சரித்த நாள் எல்லாம் அலக்ஷியமின்றி அற்பகாரியம் அனேகத்தையும் மனம் குவிந்து கவனித்து நிர்வகித்துக்கொண்டுவந்தார். அவர் கடத்திட்டுப்போன படைவீரர் துங்கபத்திரி நதி தாண்டிச்செல்ல, துந்தியாவின் இறமிருந்த திரளான சைநியங்கள் கண்ணெதிரில் அக்கரையில் இறங்கிநிற்க, பிராணபதமான விஷயங்கள் பின்னும் அனேகத்தை அவசியமாய்ச் சிந்திக்கவேண்டியிருக்க இவ்வரும் சமயத்தில் பாசறையிருந்து படைத்தொழில் செய்யும் வகையைக் குறித்துப் பலவகை உபாயம் சூழ்ந்து அவர் விசேஷ சாமர்த்தியத்தோடு க்லைவ் பிரபுவிற்குப் பத்திரம் ஒன்று எழுதி அனுப்பி

யது மிகவும் அதிசயமாயிருக்கின்றது. இவ்வண்ணம், கையிட்டிருக்கின்ற வேலையை இடையிற் சிறிதுநேரம் நிறுத்திவிட்டு, அவ்வேலைக்குமுழுதும் வேறான விஷயங்களைக் கருவிகரணாதிகள் அனைத்தும் கவிந்து சிந்திக்கும் திறமை அவருக்கு இயற்கையாய் அமைந்திருந்தது. இது மிகவும் ஆச்சரியம். அச்சமயங்களில் வெகு சங்கடங்கள் நேரிடினும் அவர் மனம் தடுமாறுவது மில்லை, அவருக்கு அச்சம் உண்டாவதுமில்லை.

ஸ்ரீ ஆர்தர்வெல்ஸ்லி தளபதி உத்தியோகத்தில் வல்லவரென்று கீர்த்திபெற்று இங்கிலாந்திற்குத் திரும்பியவுடன் அவருக்கு உத்தியோகம் படிந்தது. 1808-ம் ஆண்டு போர்த்துகல் தேசத்தைச் சிறைமீட்க நியதிபெற்ற 10,000 ராணுவவீரருக்கு அவர் தளபதியாக அனுப்பப்பட்டார். அவர்களுடன் அவர் அத்தேசத்திற் போய்இறங்கிப் பொருது இரண்டு சண்டையில் ஜயம்பெற்று, ஸிந்திராவில் உடன்படிக்கை செய்துமுடித்தார். ஸ்ரீ ஜான் மூர் இறந்தபின் அவர் போர்ட்டுகலுக்கு நூதனமாகப் படையெடுத்துப்போன தளத்திற்குத் தலைவரானார். ஆனால் தீபகற்பத்தில் நடந்தசண்டை அனைத்திலும் வெலிங்தன் சேனாவீரர் தொகை மிகக் குறைந்தும் மாற்றான படைத்துச் சேனாவீரர் தொகை அதிகரித்துமிருந்தது. 1809-ம் ஆண்டுமுதல் 1813-ம் ஆண்டளவும் அவர் சேனாவீரர் தொகை ஒரு பொழுதும் 80,000-க்கு மிஞ்சவில்லை. மாற்றான்படையோ தீபகற்பத்தில் பிரான்சிய சேனாவீரர் 350,000-பெயர்; அவர்களிற் பெரும்பாலார் காலங்கண்டவீரர், நெப்போலியனுடைய தீர்க்க சாமர்த்தியமுள்ள தளபதிகளோடு போனவர்கள். அத்தனை திரளான சேனைகளுடன் போராடி வெலிங்தன் அவர்களை வெல்லநினைப்பது எப்படி? ஸ்பானிய தளபதிகள் பெரு வெளிகளில் அணிவகுத்துச் சண்டைசெய்த பொழுதெல்லாம் தவறாமல் முறியடிபட்டுச் சிதறுண்டார்களே – அதை நினைந்து வேறேதாயினும் உபாயம் செய்யவேண்டுமென வெலிங்தனுடைய தெளிந்த பகுத்தறிவிற்கும் பலமான புத்திக்கும் தோன்றி

யது. பிரான்சியருடன் சண்டைசெய்து ஜயம்பெறவேண்டில் தமது சேனைவீரரைப் புதிதாய்ப் பண்படுத்த வேண்டுமென்று அவர் மனதிற் பட்டது. படவே, 1809-ம் ஆண்டு தல்வீராசண்டையின்பின் தொகையேறிய பிரான்சிய சைனியங்கள் நாற்றிசையும் சுற்றிக்கொண்டதுகண்டு, அவர் அதற்குள்ளே அனுசரிக்க நிர்ணயித்திருந்த உபாயத்தின் வண்ணம் செய்யப் போர்ட்டுகல் தேசத்தினுள் ஒதுங்கினார். அவ்வுபாயம் ஏதெனில், போர்ட்டுகலில் தளம் சேர்த்து பிரித்தானிய அதிகாரிகள் வசப்படுத்தி, தமது சேனைவீரருடன் சேர்ந்து சண்டை செய்யும்படி அவர்களைப் பயிற்றிவைப்பதும், அதன் மத்தியில் மாற்றானுக்குத் தோற்காவண்ணம் தீர்ப்பாய்ச் சண்டைசெய்வதில்லையென்று மறுத்து விடுவதுமே. இப்படிச்செய்தால் பிரான்சிய சேனைவீரர் தீரம் அழிந்துபோமென்று அவர் எண்ணினார். அவர்கள் ஜயமின்றி ஜீவனோடிருக்கப்பொறார்கள்; தமது தண்டு சிட்சையின்று சண்டைக்குப் பக்குவப்பட்டு, மாற்றான் மனநிலை குலைந்தபின் சர்வபராக்கிரமத்தோடும் அவர்களைத் தாக்கலாமென்று அவர் மனம் தேறியது.

எக்காலும் மறத்தற்கு அரிய இந்தச்சண்டைகள் அனைத்திலும் வெலிங்டன் பிரபுவிடத்தில் விளங்கிய அபூர்வ குணாதிசயங்களை ஏற்குமாறு நன்குமதிக்கவேண்டில், அவர் எழுதிய பத்திரங்களை வாசித்துப்பார்க்கவேண்டும். அவர் சித்திக்கு அடிகோலுவதற்கு அனுசரித்த வழிவகைகளை அப்பத்திரங்கள் வர்ணிப்பின்றி வரலாறாகச்சொல்லும். அக்காலத்துப் பிரித்தானிய துரைத்தனத்தார் அதைரியமும் பொய்புரட்டும் தந்திரமுமுள்ளவர்கள்; வெலிங்டன் பிரபு ஆயர்தீர்த்து ரக்ஷிக்கும்படி போன தேசத்தார் பிறர் கெடினும் தாம் வாழவிரும்பி வீம்புபாராட்டும் கோழைகள். இவ்விரு காரணங்களால் அவருக்கு அளவற்ற கஷ்டமும் விரோதமும் உண்டாயின். மனுஷர் ஒருபொழுதும் அவரிலும் அதிகம் கஷ்டப்பட்டதில்லை. அவர் ஸ்பானியாவில் யுத்தத்தை

நிர்வகித்தது நமது மனவுறுதியினாலும் துணிவினாலுமே. மனம் குன்றத்தக்க பெரும் கஷ்ட நஷ்டங்கள் நேர்ந்தபோதிலும் மனவுறுதியும் துணிவும் ஒருபொழுதும் அவருக்கு உதவாமற்போகவில்லை. அவருக்கு ஒருவேலை அல்ல, நாட்படச் சேவகம்செய்து முதிர்ந்த நப்போலியனுடைய சேனாவீரரைச் சண்டைசெய்து வெல்வதுடன் ஸ்பானியர் அந்தரங்க ஆலோசனைகளையும், போர்த்துகேய பதில் ராஜாதிகார சபையையும் மீறவொட்டாமல் தடுக்கவேண்டியிருந்தது. பட்டாளத்திற்குப் போஜன பதார்த்தங்களும் வஸ்திரமும் அகப்படுவது வெகு சங்கடமாயிருந்தது. இம்மாத்திரமல்ல, தல்வீராவில் மாற்றானுடன் சண்டையிட்டுக்கொண்டிருக்கும் பொழுது, ஓடிப்போன ஸ்பானியர் பிரித்தானிய பட்டாளத்தின் சாமான் மூட்டைகளில் விழுந்து அந்தச் சண்டாளர் சூறையாடினார்கள். இது பரிகாசமல்ல! இவ்வகைத் திண்டாட்டங்கள் பலவற்றை ட்யூக் பட்டவர்த்தனர் பதைக்காமல் அடங்கி மனம்பொறுத்துச் சகித்தார். செய்நன்றிமறந்தவர்கள் மறக்க, கர்ப்பனை நினைந்தவர்கள் நினைக்க, விரோதித்தவர்கள் விரோதிக்க, மனவுறுதி எதற்கும் இளைக்காமல் கருமத்தின்பெயரில் கண்ணாயிருந்தார். அவர் ஒன்றையும் அலட்சியமாய் விட்டுவிடவில்லை. அற்பகாரியம் ஒவ்வொன்றையும் தாமாகப் பார்த்து நிர்வகித்து வந்தார். தளத்திற்கு இங்கிலாந்தினின்று போஜன பதார்த்தம் எடுப்பிப்பது அசாத்தியமென்றும் தாமாக இதற்கு ஏதும் உபாயம் செய்யவேண்டுமென்றும் கண்டபொழுது அவர் லிஸ்போன் நகரில் இருந்த பிரித்தானிய ஸ்தானாதிபதியோடு பங்குகூடிப் பெருகத்தானிய வியாபாரம் செய்யத்தொடங்கினார். கம்பெனி உண்டிகள் ஏற்பட்டன. அவ்வுண்டிகளுக்கு மத்தியதரைக் கடற்றுறைகளிலும் தென்னமெரிக்காவிலும் தானியம் வாங்கப்பட்டது. பண்டசாலைகள் அனைத்தையும் நிறைத்தபின், மீந்த தானியம் போஜனபதார்த்தம் கிட்டாமல் முட்டுப்பட்ட போர்த்துகேயருக்கு விற்கப்பட்டது. வந்தது வரட்டுமென்று நிர்

மறியாமிராமல் அவர் எவ்வகை ஆபத்திற்கும் முந்தவே எத்தனம் செய்துவைத்தார். ராணுவசேவக சம்பந்தமான அற்பவிஷயங்களையும் அவர் கவனித்துவந்தார்; அன்றியும் காலத்திற்குக்காலம் ராணுவசேவகர் பாதரக்ஷை, கூடாரத்திற் சமைக்கும் கொப்பரை, குதிரைத்தீனிமுதலிய இழிவாகத் தோன்றும் காரியங்களையும் அவர் முழுமனோற்சாகத்துடன் சிந்தைகுவிந்து பார்ப்பார். வேலையில் அவர்க்குள்ள மஹாயோக்கியதைகள் எங்கும் வெளிவந்தன; எவ்வகை ஆபத்திற்கும் ஏற்கும் எத்தனம் முந்தவே செய்தஅவர் ஜாக்கிரதையும், ஒவ்வொரு அற்பகாரியத்தையும் தாமாக நிர்வகித்துவந்த அவதானமுமே அவர் பெற்ற பெரும்சித்திக்கு அஸ்திவாரமாயின். இதற்கு யாதும் ஐயம் இல்லை * இவ்வகைச் சாதனங்களால், அவர் ஒன்றும் அறியாதவர்களைச் சேவகத்திற்சேர்த்து ஐரோப்பிய ராணுவவீரர் அனைவரிலும் சிரேஷ்டர் ஆக்கினார். அவர்களுடன் எங்கெங்கே போகவும் ஏதேது செய்யவும் சாத்தியப்படுமென்று அவர் வெளியிட்டார்.

செய்யக் கையிட்டிருக்கும் வேலை எத்தனை வில்லங்கமாயிருப்பினும் அதைப் பாராட்டாமல் நிறுத்திவிட்டு அதற்கு முழுதும் வேறாகிய யாதொரு வேலையின் உள்ளுறுப்புகளை மனம் குவிந்து சிந்திக்கும் அதிசயசக்தி அவருக்கு உண்டென்று முன் குறிப்பித்தோமே. இதைச்சுட்டி நப்பியர்சொல்வது:—இரவற்பணத்தை நம்பியிருப்பது வியர்த்தமென்று

* நப்போலியனுக்கும் அவர் சகோதரர் ஜோசெப்புக்கும் நடந்த கடிதப்போக்குவரவை அமைத்து ஏற்கெனப் பிரசுரமான கிரந்தமும், ரகூஸாட்டுக் பட்டவர்த்தனர் சரித்திரமும் இப்பட்சத்தைப் பூர்த்தியாய் உறுதிப்படுத்துகின்றன. சண்டைசெய்ய அநுசரித்தக்கிரமம் நயந்திருந்ததனால் ட்டூக் நப்போலியனுடைய தளபதிகளை முறியடித்தார். நான் யாதாயினும் எத்துணையேனும் அறிந்ததுண்டானால், ராணுவவீரரைப் போஷிக்கும் சூக்ஷமம் அறிவேன் என்று அவர்சொல்வது வழக்கம்.

சிறையில் உள்ள மந்திரிகளுக்குத் தெளியத்தோன்ற அவர் எழுதியது ஸலமான்கா சண்டை செய்ய எத்தனித்த சமயத்தில்; போர்த்துகேய நாணயவர்த்தகசாலை ஒன்று ஸ்தாபிக்க எத்தனிப்பது விபரீதபுத்தியென்று அவர் ஒப்பித்தது ஸான்க்றிஸ்தவல் சிகரத்தில் சமர்க்களத்திலேயே நிற்கும்பொழுது; பஞ்சல எழுதிய அரசிறைக்கணக்கை உறுப்புறுப்பாய்ச்சோதித்துத் தேவஸ்தானசொத்தை விற்க நினைப்பது பைத்தியமென்று அவர் காட்டியது பர்கோஸின் அகழியில் இருந்து; மேலே குறிப்பித்த சமயங்களில் எல்லாம் அவர் ராணுவவகுப்பெனும் யந்திரத்தின் நுட்பாதிநுட்பங்களைப்போல இந்த விஷயங்களையும் நன்குணர்ந்தவரென்று காண்பித்தார்.

அவர் வேலையில் நேர்போல்போல நிற்கும் நிதானியென விளங்கிய மற்றொரு குணம் தீர்க்கசத்தியம். ஸௌல்த் என்பவர் ஸ்பானியாவில் விலையேறப்பெற்ற இராளான படங்களைக் கொள்ளையாடிக்கொண்டுபோக, வெலிங்டன் ஒருதுட்டுச் சேர்த்தும் எடுக்கவில்லை. அவர் போன இடந்தோறும் மாற்றான்தேசத்திலும் தமக்கு வேண்டும் எதையும் கிரயம் கொடுத்து வாங்கினார். அவர் பிரான்சுதேச எல்லைதாண்டிச் சென்றபொழுது அவருக்குப்பின் சென்ற ஸ்பானியர் 40,000 - பெயர் கொள்ளையாடித் திரவியம் தேடப்பார்க்க, அவர் முதலில் அவர்கள் ராணுவ உத்தியோகஸ்தரை அதட்டினார். அப்பால் அவர்களைத் தடுக்கத் தாம் செய்த எத்தனம் வியர்த்தமாய்ப்போனது கண்டு, அவர்கள் தேசத்திற்கு அவர்களைத் திருப்பி அனுப்பிவிட்டார். பிரான்ஸ்தேசத்திலும் கிருஷிகர் தங்கள் ஊராருக்கு அஞ்சி விலைபெற்ற சொத்துக்களை எடுத்துக்கொண்டு தப்பி அங்கிலேய ராணுவஸ்தானத்தில் அடைக்கலம் புகுந்தார்கள்! அக்காலத்திலேயே வெலிங்டன் பிரித்தானிய மந்திரிசபைக்குக் கடிதம் எழுதி "கடனில் முழுகியிருக்கிறோம். சர்க்கார் செலவிற்குக் கடன்கொடுத்தவர்கள் தங்கள் கடனைக் கேட்கச் சமயம் பார்த்திருப்பார்களென்று அஞ்சி எனக்கு

வீடுவிட்டு வெளிப்படக்கூடாதிருக்கின்றது." என அறிக்கை செய்தார். ஜஸ்டிஸ் மக்கொல் வெலிங்தன் ட்யூக்கின் குணம் குறிகளைப்பற்றித் தம்மதிப்பில் தோன்றியதைச்சார்ந்து சொல்லியது:—"இவ்வாக்குமூலத்திலும் அதிக மேம்பாடும் அபூர்வ உசிதமும் மற்றொன்று இல்லை. முப்பது வருஷம் சேவகம் செய்து அனுபவம் முதிர்ந்த இந்த ரணகம்பீரர், இவ்விருப்பு நெஞ்சர், இவ்விஜயதளபதி, பெருஞ்சேனைசமுத்திரத்திற்குத் தலைவராக மாற்றான் தேசத்தில் இறங்கியிருந்த இவர் கடன்காரருக்கு அஞ்சினாராம்! இது ஒருவகை அச்சம். இவ்வச்சம ஜயபதிகள், தூவடிபோவோர் நெஞ்சை ஒருபொழுதும் கலிங்கவைத்ததல்ல; இத்தனை உசிதசத்த நெஞ்சுக்கு இணை ஏதும் யுத்தசரித்திரங்களில் உண்டா - நான் நம்பவில்லை." இக்கேள்வியை வெலிங்தன் ட்யூக் பட்டவர்த்தனமிட்டுத்திற்கேட்டால் அவர் தான் மகத்துவமொன்றும் உதாரமதியுள்ளவனென்றும் விளக்கவிளைந்து ஒன்றும் செய்யவில்லை. வாங்கின கடனைக் குறித்தகாலத்தில் தவறாமற் கொடுத்துத்தீர்ப்பது லௌகிகவியாபாரம் நடத்துவதற்கு உத்தமமும் மிக்க கனமுமுள்ள வகையென்பது என் பக்ஷம் என்று சொல்வார்போலும்.

"நேர்மை நன்னெறி". இது நயமிகுமுதுமொழி. பூலோக வியாபாரத்தில் அன்றன்று அவரவர் அநுபவம் இதன் உண்மைக்கு ஆதரவு; நிதானமும் மனநிறையும் வெறுவிஷயம் அனைத்திற்குமன்றி வேலைக்கும் அனுகூலமென்று கண்டிருக்கின்றது. "பூலோக வியாபாரம் அனைத்திலும் பிறருக்கு 'குவித்துவழிய அளப்பது நிறையடி' என்பதை அனுசரித்துக் கொடு - கொடுத்தால் அறுதியில் உனக்கு அது நஷ்டமாய் முடியாது" என ஹியூ மில்லருக்கு கனயோக்கியரான அவர் சிறியதந்தை புத்திசொல்லிவருவார். பீர் வடிக்கும் பிரசித்தராகிய வியாபாரி ஒருவர் தானியத்தைச் சிறக்கணிக்காமல் விரயம்செய்ததனால் தமக்குச் சித்தி உண்டாயிற்றென்றார். சாராயம் வடிக்கத் தானியம் ஊறப்போட்டிருக்கும் தொட்டி

யண்டை போய்ச் சிறிது அள்ளி நாவில் விட்டு ருசிபார்த்து, "இளைஞரே, காரம் இன்னும் போதாது. பின்னும் ஒருகூடை தானியம் கொட்டுங்கள்" என்று வேலைசெய்யும் சிறுவருக்குச் சொல்வார். அந்த பீர் வியாபாரி யதார்த்தர். தமது யதார்த்தத்தைத் தாம் வடிக்கும் பீரிலும் இட்டார். இடவே அது யாவருக்கும் உதவியது. அதன்மூலமாய் அவருக்கு இங்கிலாந்திலும், இந்தியாவிலும் ஆங்கிலேயர் குடியேறிய மறுநாடுகளிலும் பிரக்கியாதி உண்டாயிற்று. அது திரண்ட திரவியம் சேர அஸ்திவாரம் ஆயிற்று. சொல்லும் சொல் நிறையும் செய்யும் தொழில்நிறையும் வேலை அனைத்திற்கும் மூலைக்கல்லாயிருக்கவேண்டும். ராணுவசேவகனுக்கு முக்கியம் அபிமானம், தேவபக்தனுக்கு அன்பு, வியாபாரிக்கும் வர்த்தகனுக்கும் நெசவுமுதலிய தொழில் செய்வோனுக்கும் சொல்நிறையும் தொழில்நிறையுமே. மிகவும் எளியதொழிலிலும் இந்த நிதானப்பயிற்சிக்கு இடம் உண்டெனத் தோன்றும். ஹியூ மில்லர் தமக்குத் தொழில்பயிற்றிய சிற்பி கையால் எடுத்து அடுக்கிய ஒவ்வொரு கல்லிலும் மனச்சான்றைக் கூட வைத்தானென்று சொல்லுகிறார். அவ்வாறே சத்தியவந்தனாகிய சிற்பி தன் வேலை முற்றமுடியத்தீர்க்க உறுதியாயிருப்பதும், உன்னதமதியுள்ள ஒப்பந்தக்காரன் தன் ஒப்பந்தத்தின் ஒவ்வொரு உறுப்பையும் உண்மையாய் நிறைவேற்றுவதும் தமக்குப் பெருமையென்று கொண்டாடுவார்கள். சத்தியம் திறம்பாத தொழிலாளிக்கு அவன் உற்பத்தியாக்கும் கள்ளம் சூது இல்லாத வஸ்துவினாலும், வியாபாரிக்கு அவன் விற்கும் சரக்கு நாணயத்தினாலும் மாறுபாடின்மையினாலும் கனமும் கீர்த்தியுமன்றித் தனவிர்த்தியும் உண்டாம். ஆங்கிலேய ஜாதியார் அடையும் சித்திக்கு முக்கிய காரணம் அவர்கள் யதார்த்தம் என்பது ட்யூபின் பரன் பிரபு பக்ஷம். அந்த யதார்த்தத்தைச்சுட்டி அவர் சொல்லியது:— "வஞ்சனையாலும் சதியில் விழுந்து அமர்த்துவதனாலும், வல்லடியாலும் சிறிதுகாலம் நமக்குச் சித்தி உண்டானாலும்

ஆகும்; ஆனால், நிரந்தரமாய்ச் சித்திபெறக்கூடியது அவைகளுக்குமுழுதும் மாறின குணங்களாலேயே. இங்கிலாந்தில் உற்பத்தியாகும் பலவகைப்பொருள் உசிதத்தையும் அங்கிலேயர் மகத்துவத்தையும் நிலைநிறுத்திக்கொண்டுவரும் சாதனங்கள் என்ன — வர்த்தகருக்கும் தொழில்செய்வோர்க்குமுள்ள தீரமும் விவேகமும் சுறுசுறுப்பும் மாத்திரமா — அல்ல; முக்கியமாய் அவர்கள் ஞானமும் காரியநிர்வாகமும்; அனைத்திலும் மேலான சாதனம் அவர்கள் யதார்த்தம். பிரித்தானியதீவுகளில் உள்ள லோகோபகாரிகளாகிய வர்த்தகரும் தொழில்செய்வோரும் மேற்சொல்லிய குணம்குறிகளை எப்பொழுதேனும் இழந்துபோகச் சம்பவித்தால், வர்த்தகத்தில் அவர்கள் நாணயம் கெட்டுப்போக, தற்காலத்தில் அம்மூன்று ராச்சியத்தாருடைய கைத்தொழில் முயற்சிப்பயனை விளைந்த பண்டம் கொடுத்து மாறிய சர்வதேசதிரவியங்களும் ஏற்றிக்கொண்டு சமுத்திரநீர்முகத்தில் செல்லும் மரக்கலங்கள் சகல துறைகளிலும் நின்று துரத்திவிடப்பட்டுப் பற்றறத் தொலைந்துபோம். குறிதப்பும் எத்தேசத்திற்கும் இவ்வகைச்சீர்கேடு நேரிடுவது இயற்கையே.”

ஒருவனுடைய யதார்த்தத்தை மற்றெவ்வகைத் தொழிலினும் மிகவும் அதிக கண்டிப்பாய்ச் சோதிக்கும் தொழில் வார்த்தகம் என்று ஒப்புக்கொள்ளவேண்டும். அது மனநேர்மையையும், ஆசை அடக்கத்தையும், நீதியையும், உண்மையையும் வெகுகண்டிப்பாய்ச் சோதிக்கும். போர்க்களத்தில் பீரங்கிக்குண்டுமுதலிய கண்டங்களுக்கு அஞ்சாமல் வீரதீரராக வெற்றிசிறந்துவரும் ரணகம்பீரரைப்போல மேற்குறித்த சோதனைகள் எல்லாவற்றையும் நன்றாய்ச் சகித்து மறுப்படாமல் வெளிப்படும் தொழிலாளரும் மிகு கௌரவத்திற்குப் பாத்திரர்தாம். நானாவகை வர்த்தகமும் செய்துவருவோர் பெரும்பாலார் அச்சோதனைகளுக்கெல்லாம் ஈடுகொடுத்து உத்தமராய் விளங்குகிறார்கள். அத்தனையும் அவர்களுக்குக்

கௌரவந்தான். செலவிற்குப் போதும் போதாதிருக்க ஸ்வல்ப சம்பளம் பெற்றுக்கொண்டுவருகிற உத்தியோகஸ்தர்வசம் அன்றன்று நம்பிவிட்டிருக்கும் கணக்கற்ற திரவியத்தையும், கடைக்காரர் - காரியகர்த்தர் - தரகர் - நாணய வர்த்தகசாலை லிகிதர் கையால் நித்தமும் செல்லும் கணக்கிற் சேராத ரொக்கத்தையும் கூடியபொழுது நினைந்து, இவ் வரிய சோதனைகளுக்கு ஆற்றமல் நம்பிக்கைத்துரோகிகளாகப் பின்னடைவோர் மிகவும் சிலர் என்பதைக் குறித்துக் கொள்வோமானால், இவ்வாறு அனுதினமும் பின்னமின்றிச் சத்தியவந்தராக நடப்பது மானுஷீகத்திற்கு மெத்தவும் கௌரவமென்று உலகம் ஒப்புக்கொள்ளும்போலும். இதைப்பற்றிக் கர்விக்காதிருப்போமானால் பின்னும் உத்தமந்தான். நாணயத்திற்குக் கடன்கொடுக்கும் ஏற்பாட்டுக்கு மூலாதாரம் அபிமானம். தொழிலாளிகள் ஒருவரை ஒருவர் நம்பியிருப்பது இவ்வேற்பாட்டால் குறிப்பாய்த் தெரிகின்றது. வர்த்தகத்தில் சாதாரணமாய் வழங்காதிருக்கச் சம்பவித்தால் ஒருவர்க்கொருவர் இத்தனை நம்பிக்கை இருப்பதைப்பற்றி வெகு ஆச்சரியம் உண்டாம். வர்த்தகர் தாம் ஒருபொழுதும் காணாத வெகுதூரம்தொலையில் பூமியின் எதிர்ப்புறத்தில் இருப்பவர்களைப் பிறர் சொல்லக்கேட்டு நம்பித் தமக்குக் காரியகர்த்தராய் ஏற்படுத்தி அவர்கள் யதார்த்தவாதிகளென்று பெரும்பாலும் அச்சமற்றுத் திரண்டதிரவியத்தை அவர்கள் பெயருக்கு ஒப்படைக்கிறார்களே. இந்த நம்பிக்கை மனுஷர் ஒருவரை ஒருவர் பூசிக்கும் சிறந்தபூசனை போலும் என சால்மர்ஸ் வேதாத்தியாபகர் மொழிந்தது நன்றாயிருக்கிறது.

சாதாரண நாணயம் சாமானிய ஜனங்களுக்குள் இன்னம் விர்த்தியாகிவருகிறது. இங்கிலாந்தில் நானாவகைத்தொழில் செய்யும் ஜனங்கள் இதயத்தில் சூது இல்லை. அவர்கள் யதார்த்தம் அவரவர் செய்யும் தொழிலுக்குள் இட்டிருக்கின்றது.

இத்தனையும் நமது பாக்கியந்தான். ஆனாலும், பின்விளைவதை எண்ணாதவர்களும், அளவிற்கு அதிகலாபத்திற் கண்ணாயிருப்பவர்களும் யார் கெடினும் தாம்மாத்திரம் வாழவேண்டுமென்றிருப்பவர்களும் திரவியஸ்தர் ஆகும் ஆத்திரத்தால் வெளிவெளியாய் நாணயம்தப்பித் திருட்டுப்புரட்டுகள்செய்து வருகிறார்கள். இதற்கு அனேக திருஷ்டாந்தங்கள் உண்டு. இது எக்காலத்திலும் இயற்கையே. இது நமது நிர்ப்பாக்கியந்தான். சரக்குநாணயத்தைக் கலந்துகெடுக்கும் வியாபாரிகளும், தப்பிலித்தனம்செய்யும் ஒப்பந்தக்காரரும், ஆட்டுரோமமென்று பழங்கந்தையையும், புதுப்பருத்திப்பஞ்சென்று பழம்பஞ்சையும், உருக்கிற்செய்ததென்று தண்டவாளத்திற் செய்த கருவிகளையும், ஊசியென்று காது இல்லாத கம்பிகளையும், எப்படியாவது விற்றால் போதுமென்று எண்ணிச்செய்த சவரகன்கத்திகளையும், பின்னும் பலரூபமான கள்ளச்சரக்குகளையும் வைத்து விற்கும் வியாபாரிகளும் இருக்கிறார்கள். ஆனால் இப்படிப்பட்டவர்கள் சிலர், எளியபுத்தியுள்ளவர்கள், லாபம் பெற்றுக்கொள்வது பெரிதென்று எண்ணியிருப்பவர்கள். அவர்கள் திரவியம் சம்பாதித்தாலும் அனுபவிக்க இடம்பெறார்களெனத் தோன்றுகிறது. யதார்த்தவாதிகளென்று அவர்களுக்கு ஒருபொழுதும் பெயர் உண்டாகாது; அச்சம் அற்று ஆறித்தேறியிருக்கும் இதயம் அவர்களுக்கு ஒருபொழுதும் கிடைப்பதுமில்லை. இவ்வகை நெஞ்சு இல்லாதவர்களுக்குத் திரவியம் இருந்து ஒன்றும் பெறாது. கால்துட்டுப் பெறாத கத்தி ஒன்றை எட்டுத்துட்டுக்கு விற்ற கருமான் ஒருவனைக்குறித்து லக்ஷ்மர் அத்தியக்ஷர் "அந்தத் திருடன் ஏமாற்றியது என்னை அல்ல, தன் நெஞ்சை" என மொழிந்தார். பிறரை அநியாயமாய் வருத்தி வாங்கியும் ஏமாற்றியும் தந்திரமாய் வஞ்சித்தும் தேடும் பணம் சிந்தனையில்லாதவர்கள் கண்ணைச் சிறிதுகாலம் மின்னி மயக்கினாலும் மயக்கும்; ஆனால் எண்ணாத போக்கிரிகள் பணம் தேடச் சூழும் உபாயம் எனும் புற்புதம் பூர்த்தியாய்ப் பருத்தபின்

பெரும்பாலும் தகதகென்று பிரகாசிப்பது தீர்ந்து உருஅழிவதற்கேயொழிய மற்றப்படி அல்ல. போக்கிரிகளென்று ஊர் அறியப்பெற்ற் ஸாட்லியர்ஸ், டீன் பால், ரொட்பாத் இவர்கள் போல்வார் இம்மையிலும் அறுதியில் வெகு துயரப்படுவார். வேறுபெயர் மாறுபாடுசெய்து பிழைத்தாலும் பிழைப்பார்; திருடரென்று அவர்கள் பெயர் வெளிவராதிருப்பினும் இருக்கும்; அவர்கள் அக்கிரமமாய்த் தேடிய திரவியம் அழிவற்று அவர்கள் கைவசம் நீடித்திருந்தாலும் இருக்கும்; ஆனால் அறுதியில் அது அவர்களுக்கு வாழ்வாகவல்ல, அவர்கள் குடியை அடியற வருத்தும் சாபமாக முடியும்.

நெறிவிலகாத நாணயவான் நெறிவிலகி நாணயங்கெட்டு நடப்பவனைப்போல் அத்துணைவிரைவில் ஐஸ்வரியவான் ஆகாதிருக்கவுங்கூடும். ஆனால் அவன் அடையும் செல்வம் கள்ளமும் அநியாயமுமின்றி நேர்மையாய்ச் சம்பாதித்த மெய்ச்செல்வம். நேர்மையுள்ளவனுக்குச் சிறிதுகாலம் விர்த்தி உண்டாகாதிருப்பினும், அவன் நேர்மையுள்ளவனாகவே இருக்கவேண்டும்: உள்ளதெல்லாம் இழக்கவரினும் இழந்து பெயரைப் பாதுகாத்துக்கொள்வது மேல். ஏனெனில், பெயரும் ஒரு வகைச்செல்வந்தான்; நெறிகுறியுள்ளவன் அச்சமற்று நெறி விலகாது நடந்துவருவானானால், சந்தேகமின்றி அவனுக்கு விர்த்தி உண்டாம்,—அன்றியும் உயர்வுக்குயர்வென்று உலகம் போற்றும் பரத்திற்குரிய செல்வம் அவனுக்கு அமையாதிராது. "மனோசுகமுள்ள ரணகம்பீரனை" வோர்ட்ஸ்வர்த் (Wordsworth) கவிஞர் பின்வருமாறு நன்றாய் விவரித்திருக்கிறார்,—

"அவன் வேலை அவனுக்குச் சாங்கோபாங்கமாய்த் தெரியும். அவ்வொன்றிலேயே சிந்தைகுவிந்து திர்ஷ்டிவைத்து அவன் அதை உண்மையாய்ச் செய்துவருவான்; ஆனதுபற்றி, செல்வத்திற்கானாலும், ராஜமகத்துவத்திற்கானாலும் அவன் பணிகிறதுமில்லை, பதிவிருக்கிறதுமில்லை; அவனுக்கு அமை

ப்பு இருந்தால், அவைகள் அவனைத் தொடரும், அவன் சிரசில் மன்னா மாரிபோலப் பொழியும்.''

வேலையில் நிதானியாயிருக்கப் பயின்று, நீதிக்கு இவரோ, உண்மைக்கு இவரோ, சமஸ்தகாரியங்களிலும் நிஷ்கபடமான ஒழுக்கத்திற்கு இவரோ எனக் குறிக்கொள்ளப்பட்ட உயர்மதியுள்ள வர்த்தகர் இத்தன்மையுள்ளவரென்பதை 'குவேக்கர் வாணத்துக் கிறிஸ்தர்மீது ஏறிய குற்றத்திற்குப் பக்குவம்' எனும் கிரந்தம் எழுதிய உறையூர் ராபர்ட் பார்க்லே பெயரனென்று உலகறியப்பெற்ற டேவிட் பார்க்லே (David Barcluy) யின் ஒழுக்கத்தில் காணலாம். வெகுவருஷகாலம் அவர் சீப்ஸைட் எனும் இடத்தில் விஸ்தாரமான வர்த்தகசாலை ஒன்றின் தலைவர். முக்கியமாய் அவர் வர்த்தகம் செய்தது அமெரிக்காவில். ஆனால், க்ரான்வில் ஷார்ப்பைப்போல அவரும் அங்கிலேயர் அமெரிக்கரோடு யுத்தம்செய்வது ஒருபொழுதும் தகாதெதன வெகு அழுத்தமாய் நினைந்ததனால் அமெரிக்க வர்த்தகத்தைத் தீர்ப்பாயக் கைவிட நிர்ணயித்தார். வர்த்தகராயிருந்தபொழுது அவர் சாமர்த்தியமும், அறிவும், மனநிறையும், வலிமையுமுள்ளவரென்று குறிக்கொள்ளப்பட்டிருந்தார். அதன்பின் அவர் தேசாபிமானியென்றும் லோகோபகாரியென்றும் பெயர் எடுத்தார். அவர் சத்தியத்தையும் நேர்மையையும் தெளிய விளக்கிய பளிங்கு. எப்பொழுதும் அவர் வாக்கு பத்திரத்தைப்போல் அத்தனை உறுதியுள்ளதென மதிக்கப்பட்டது. இக்குணம் சற்குணராகிய கிறிஸ்தருக்கும் சத்தியவிரதராகிய குலமக்களுக்கும் அழகென்று உலகம் போற்றும். அவருடைய அந்தஸ்தையும் உயர்ந்த குறியுடைமையையும் கண்டு அக்காலத்து மந்திரிகள் பல சமயங்களில் அவரிடத்தில் யோசனைகேட்பார்கள். அமெரிக்க விவகாரவிஷயத்தைப்பற்றி ஜனப்பிரதிநிதிகள்சபையில் அவரை அபிப்பிராயம் கேட்டபொழுது, அவர் தமது தாற்பரியங்களை மயக்கமறத் தெளியவிளக்கி, தாம் சொன்ன யோசனைக்குத் தகுதியான நியாயபலம் காட்டி

னார். அது கேட்டு கார்த்பிரபு தர்மமடத்திற்குக் கிழக்கே யுள்ள மற்றனைவர் வாக்குமூலமாகவும் தாம் அறியப்பெ ற்ற சங்கதிகளிலும் அவர் ஒருவர் வாக்குமூலமாய் அறிந்தது அதிகமெனச் சபையில் அறிக்கைசெய்தார். அவர் வர்த்தக த்தொழிலைக் கைவிட்டு விலகியது சுகித்துவாழ அல்ல, பிற ருக்கு உதவும் புதுத் தொழிற்றுறைகளில் இறங்க. இடம் பொருள் ஏவல் மொத்தவும் இருந்ததனால் உலகத்திற்கு நன் மைசெய்துகாட்டுவது தமது கடனென்று அவர் மனம் நினை ந்தது. உவால்தாம் ஸ்டோவில் தமது வாசஸ்தானத்திற்குக் கிட்ட அவர் கைத்தொழில் முயற்சியபிவிர்த்திசாலை ஒன்று ஸ்தாபித்துச் சில வருஷகாலம் வெகுதிரவிய விரயம்செ ய்து ஆதரித்துவந்தார். வரவர, அத்தொழிற்சாலை அவர் சிந்தித்தவண்ணம் அவ்வயலில் மனம் வணங்கி உழைக்கும் ஏழைக்குடும்பங்களுக்குச் சுகத்திற்கும் ஸ்வாதீனத்திற்கும் வருவழியாக வாய்த்தது. ஜமேக்காவில் ஒரு தோட்டம் அவ ருக்கு அகப்பட்டபொழுது, அக்கக்ஷணமே அத்தோட்டத் தைச் சேர்ந்த அடிமைகள் அத்தனைபெயரையும் சிறைவிட த் தீர்மானித்தார். அதில் அவருக்கு நேர்ந்த நஷ்டம் 10,000 பௌண்ட். அவர் அந்த நஷ்டத்தைப் பாராட்டவில்லை. அவர் தமது காரியகர்த்தரை அனுப்ப, அந்தக் காரியகர்த் தர் கப்பல் ஒன்று குடிக்கூலிக்கு அமர்த்திச் சிறுகூட்டத் தாராகிய சிறைகளை ஏற்றி, சிறையாட்சி இல்லாத அமெரி க்க பிரதேசம் ஒன்றுக்கு அனுப்பினார். அங்கு அவர்கள் குடியேறிச் சுகமே வாழ்ந்தார்கள். நீக்ரோவர் சுத்தமூட ரும் புல்லருமாயிருப்பதனால் ஸ்வாதீனர் ஆக யோக்கியர ல்லவென்று சிலர் உறுதிமொழி சொல்லக்கேட்டு, அவ்வாக் குறுதி அபாசமென்று விவகாரத்தில் தாக்கணிக்கும்பொரு ட்டாகவே மெஸ். பார்க்லே லேடி காப்பிரிகளைச் சிறைநீக்கி விட்டுப் பார்க்கத் தீர்மானித்தார். அவர் திரளச் சம்பாதி த்த திரவியத்தை மரணசாதனம் எழுதிவைக்காமல் தாம் இருக்கும்பொழுதே பந்துகளுக்குத் தமது மிகுசொத்தை

விபாகித்துக்கொடுத்து, உபகாரி ஆகி உதவிபுரிந்து, அவ்வவர் இறங்கிய துறையில் அவர்கள் தொழில் நடந்தேறுவதைக் கவனமாய்ப் பார்த்துச் சகாயஞ்செய்து, இவ்வண்ணம் லந்தன் ராஜதானியில் மிக விர்த்திக்கும் பெருவர்த்தகசாலைகள் சிலவற்றிற்கு அடிகோலியதுமன்றி, அவைகள் ஓங்கிவளர்ந்து முதிர்வதையும் கண்டுதான் இறந்தார். இன்றளவும் கர்ணி, ஹான்பரி, பக்ஸ்தன் முதலிய மிகுமேன்மை தங்கிய ஆங்கிலேய வர்த்தகர் சிலர் ஆதியில் தங்களை வர்த்தகஞ்செய்ய ஆளாக்கிவிட்டு அதில் நன்றாய்ப் பண்படுமுன் புத்திபுகட்டி ஆதரித்தவர் டேவிட் பார்க்லேயென்று நன்றியோடு சொல்லிப் பெருமைபாராட்டுவார்கள். இக்குறிப்புள்ள அவர் தம் தேசத்து வர்த்தகருடைய உண்மைக்கும் மனநிறைக்கும் இலக்கு, இனி எக்காலத்திலும் வேலைக்காரர் நெறிகுறியை விளக்கும் அச்சு, முன்மாதிரி.

அதிகாரம் - ௰.

பணம்—அதன் பிரயோகமும் குப்பிரயோகமும்.

"வேலிக்குள் ஒளித்துவைக்கவல்ல,
பரிஜனம் சேர்க்கவுமல்ல,
தூக்கற்றிருக்கும் மாட்சிமையான
சுதந்தரத்திற்காக"—**பர்ன்ஸ்.** (*Burns.*)

"கடன் வாங்கவும்வேண்டாம் கொடுக்கவும்வேண்டாம், ஏனெனில், பெரும்பாலும் கொடுத்த கடனையும் இழந்து இஷ்டனையும் இழக்கவரும்; கடன்வாங்குவது கிருஷிகர்மத்தின் கூர்மை மழுக்கும்" **ஷேக்ஸ்பியர்**—(*Shakespeare.*)

பணத்தோடு அடுத்த காரியங்களை லேசாய் எண்ணிடவாதே—பணமே உன் குறியாவது—**ஸ்ரீ இ. ல். புல்வர் லிற்றன்.** (*Sir E. L. Bulwer Lytton.*)

ஒருவன் திரவியத்தை வைத்து நிர்வகிக்கும் விதம், உற்பத்திசெய்யும் விதம், காப்பாற்றும் விதம், செலவிடும் விதம் இதே அவனுக்குள்ள விவகாரஞானத்தை உணர்த்தும் உத்தம பிரமாணங்களில் ஒன்றாயிருக்கின்றது போலும். பணந்தான் மனுஷர் பூலோகவாழ்வின் முக்கிய தாற்பரியமென்று எவ்விதத்திலும் எண்ணலாகாதெனினும், தேகசுகத்திற்கும் ஊருடன் கூடிவாழும் வாழ்விற்கும் முக்காலே மூன்றுவீசம் பணமே சாதனமாயிருப்பதனால், அறிவுடையோர் அவமதிக்க அது அற்ப விஷயமுமல்ல. மானுஷிகத்திற்கு அணியான சில குணங்கள் ஔதாரியம், சத்தியம், நீதி, அகப்பற்றுநீக்கல் முதலியவைகளாம். இக்குணங்களும் விவகாரசுகிர்தங்களாகிய கிரஹ கர்மசயமும் பூர்வதிர்ஷ்டியும் பணத்தைத் தரும் வகையாய்ப் பிரயோகிப்பதுடன் நீக்கமறச் சம்பந்தப்பட்டிருக்கின்றன. இது வாஸ்தவமே. ஆனால், மேற்சொல்லிய நான்கு குணங்களுக்கும் எதிர்க்குணங்களாகிய லோபம், அசத்தியம், அநீதி, அகப்பற்றுடைமை இவைகளை திரவியலாபவாஞ்சை மிகுந்துள்ளவர்களிடத்திலும், செலவொடுக்கமின்மை, வீண்செலவு, பூர்வதிர்ஷ்டியின்மை எனும் அகுணங்களைத் தாம் பெற்ற கைப்பொருளைத் துர்ப்பிரயோகஞ்செய்து வியர்த்தமாய் அழிப்பவர்களிடத்திலும் காணலாம். ஆகவே, ஹென்றி தேலர் (Henry Taylor) அவதானமாய் எழுதிய மனுஷர் சரித்திரக்குறிப்பு, எனும் கிரந்தத்திற் சொல்லியபடி "தகும் அளவிற்கு தகும் வகையாகத் திரவியத்தைத் தேடிப் பாதுகாத்துச் செலவழித்துக் கொடுத்து வாங்கிக் கடன்கொடுத்துக் கடன்வாங்கி மரணசாதனம் எழுதிக்கொடுப்பவனே நிறைந்த மனுஷனென்று முக்காலே மூன்றுவீசம் நியாயம் ஏற்படும்."

பூலோகத்திற் பிரதிமனிஷனும் தகும் வகை அனைத்தானும் சுகமே வாழ்ந்திருக்க வருந்துவது முறைமையே. இப்பதவியில் ஒருவன் இயற்கையின் உத்தமபாகமாகிய மனதைத் திருத்துவதற்கு ஆவசியகமான தேகசுகம் அமையும்.

அன்றியும் அவன் தன் குடும்பத்தாருக்கும் இந்தச் சுகத்திற்கு ஏற்கும் எத்தனம் செய்யவல்லவனாவான். இது இல்லாவிடில் ஒருவன் "கிறீச்சுரவாதியிலும் கேடுகெட்டவன்" என்று அப்போஸ்தலன் சொல்லுகிறான். நாமும் இந்தச் செய்கடனை எவ்வளவேனும் அலக்ஷியஞ்செய்யலாகாது. ஏனெனில், சமயம் கண்டு உலகத்தில் மானத்தோடு உயர்பதவி பெறத் தகுமுயற்சி செய்துவருவோமானால் நம்மில் மனுஷருக்குப் பெரும்பாலும் அபிமானம் உண்டாம். இந்தத் தாற்பரியத்துடன் நமது லௌகிக வியாபாரங்கள் வாய்க்கும்படி நாம் செய்யவேண்டிய முயற்சி தானும் அதன்மட்டில் ஒருவகைக் கல்வியாம்; இம்முயற்சி ஒருவனுக்குத் தன் மானத்தைப்பற்றி உணர்ச்சி கொளுத்தும், அவனுக்குள்ள விவகார பக்குவங்களை வெளிவருத்தும். பொறை, தொடுபிடி முதலிய சுகுணங்களின் சாதனையில் அவனைப் பண்படுத்தும். நாளைப்பிழைக்க வகைதேடி ஜாக்கிரதையாயிருப்பவன் சிந்தனையுள்ளவனாயிராமல் தீராது. ஏனெனில் அவன் இன்று பிழைத்தாலே போதுமென்று இருப்பவனல்லவே. அவன் பின்னுக்கு வேண்டியவைகளைப் பூர்வதிர்ஷ்டியாய் முன் நினைந்து ஏற்கும் எத்தனம்செய்வான். அன்றியும் அவன் எதிலும் மிதமிஞ்சாதிருந்து அகப்பற்று நீக்கும் சுகிர்தத்தை நன்றாய் வழக்கப்படுத்தி வரவேண்டும். ஒருவன் பெயருக்கு அதனிலும் அதிக பலம் தரத்தக்கது மற்றொன்று இல்லை. "அகப்பற்று நீக்கப் போதிக்கும் அதமவித்தை அதொன்றைத்தவிர மற்றனைத்தையும் போதிக்கின்ற உத்தம வித்தையிலும் வாசி" என ஜான் ஸ்தெர்லிங் (John Sterling) சொல்வது மெய். ரோமர் தேகபலத்திற்கும் மனோதீரத்திற்கும் வெர்ட்டஸ் (Virtus) என்னும் ஒரே சொல்லை வழங்கியது தகுதியே. யாவற்றினும் உயர்ந்த பலம் தன்னைத்தான் அடக்கி வெற்றிகொள்ளும் பலமே.

ஆனது பற்றியே, பிற்கால இன்பத்தைக் கருதித் தற்கால சுகத்தைத் தள்ளுவதாகிய அகப்பற்று நீத்தல் எனும் கல்வி

யை மனுஷர் அந்தியகாலவரையில் கல்லாதிருக்கிறார்கள். எவரிலும் மிஞ்ச மெய்வருந்தி உழைப்பவர்களே தாம் சம்பாதிக்கும் திரவியத்தின் அருமைபெருமையைப் பாராட்டுவோர்களென்று உலகம் எண்ணுவது இயற்கை ஆனாலும், அவ்வகுப்பார் அனேகர் நாளடைவில் தங்கள் சம்பாத்தியத்தை எண்ணிக்கையற்று அன்னபானாதிகளில் சிதைத்துப் பெரும்பாலும் திக்கற்றுத் தடுமாற, மிதச்செலவுசெய்து முட்டின்றியிருப்பவர்கள் அவர்களைத் தாங்கிவருகிறார்கள். நம்மில் வெகுபெயருக்குக் குடும்பசுகத்திற்கும் பிறர் உதவி வேண்டாதிருக்கும் ஸ்வாதீனத்திற்கும் போதுமட்டும் இடம் இருந்தும், முட்டுப்பாடான காலம் வரும்பொழுது தரித்திரத்திற்கும் அவர்களுக்கும் ஓரொரு நாள் தூரமென்று பெரும்பாலும் தெரிகின்றது; அதுவே தேசத்தில் வறுமையும் வேதனையும் உண்டாகும் முக்கிய காரணமாம். ஒரு நாள் பாடுபட்டுப் பிழைப்பவர்களிடத்தில் சர்க்கார் வாங்கும் வரியைக்குறித்து ஜான் ரஸ்ஸெல் பிரபுவைக் கண்டுபேச அவர்கள் பிரதிநிதிகள் சிலர் போயிருக்கையில் அவ்வுதாரமதியுள்ள குலமகன் அது சமயமென்று, "பாடுபட்டுப்பிழைக்கும் குடிகளிடத்தில் துரைத்தனத்தார் வாங்கும் வரி வெறிதரும் மதுவகை ஒன்றில்மாத்திரம் அக்குடிகள் வியர்த்மாய் இறைக்கும் பணத்திற்கு எவ்வளவும் ஈடாகாது! இது நிசமென்று நம்புங்கள்" என மொழிந்தார். பெரிய தேசவிவகாரம் அனைத்திலும் இதிலும் முக்கியமான மற்றொன்று இல்லை. உழைக்கும் மனுஷரைக் குரல்பாய்ச்சி வரவழைக்கும் பெருஞ்சீர்திருத்தவேலை வேறில்லை. ஆனால் "தற்சுகம் மறுத்தலும் தன்முயற்சியும்" சிறுகக்கூவிச் சபைகூடுமா, கூடாது; அன்றியும் இக்காலத்துள்ள தேசாபிமானத்திற்கு அவனவன் மிதச்செலவு பூர்வதிர்ஷ்டி எனும் சாமானிய விஷயங்களில் அத்தனை லக்ஷியம் இல்லை. ஆயினும், இவ்வகைச் சகிர்தங்களைச் சாதிப்பதனால் மாத்திரமே கைப்பாடுபட்டுப் பிழைக்கும் மனுஷருக்குச் சுத்த ஸ்வாதீனம்

அமையும். வித்தியாவினோதராகிய ஸாம்யுஎல் ட்ரூ (Samuel Drew) எனும் சக்ஸிவி "புத்தி - மிதச்செலவு - காரியபாகம் எனும் இவைகள் கெடுகோலத்தைத் திருத்த வல்ல சிறந்தவே லைக்காரர் : எந்த வீட்டிலும் இவைகளுக்கு இருக்கச் சிற்றி டம் போதும். ஆனல், குடும்பவிக்கினங்களைத் தீர்க்க இவை களுக்கு உள்ள வல்லமை பார்லிமெண்டில ஏற்பட்ட சீர்த் திருத்தச்சட்டம் எதற்கும் இல்லை" என்றும், ஸாக்ரொட்டீஸ் (Socrates) "உலகத்தை இயக்க விரும்புவோன் முதலில் தன்னைத்தான் இயக்கக்கடவன்" என்றும் மொழிந்தார்கள். பூர்வச்செய்யுள் ஒன்றில் சொல்லியது "அவனவன் தன் னைத்தான் சீர்திருத்தப்பார்ப்பானுனல், தேசமுழுதும் எத் தனை எளிதில் திருந்தும்". ஆனலும், நமது துர்ப்பழக்கங்க ளில் மிகச்சிறிதைத் திருத்துவதிலும் திருச்சபையாட்சியை யும் அரசாட்சியையும் திருத்துவது மிக எளிதெனப் பெரும் பாலார்க்குச் சிந்தனை உண்டாகின்றது; இவ்வகை விஷயங் களில் முதல்முதல் நம்மைநாமே திருத்தவல்ல, பிறரைத் திருத்தத் தொடங்குவது நம்மனதிற்கு மிகவும் இதமென்று வாலாயமாய்க் காண்கிறோம். விவகாரத்திலும் இப்படித் தான் இருக்கின்றது நிசம்.

கைக்கு எட்டியதைத் தின்றுபிழைக்கும் எவ்வகைமனுஷ ரும் எப்போதும் கீழோராகவே இருப்பார்கள். ஜனசமூகத் தின் ஓரத்தில் தாக்குணிகளாகி, குழுவிலைக்காலத்திற் படாத பாடெல்லாம் பட்டு, காற்றுக்கு மழைக்கு வெயிலுக்கு ஒதுக்கிடமின்றி அவர்கள் துர்ப்பலரும் அகதிகளுமாயிருப் பார்கள். இதற்குத் தப்ப வகை இல்லையே. தன்மானம் இல் லாத அவர்களுக்குப் பிறர்மானமும் இராது. வியாபாரம் இளைத்திருக்கும் அவதியில் அவர்கள் ஆதரவற்று அவலப்படுவ தன்றி வேறுகதி இல்லை. அன்றன்றுள்ள சம்பாத்தியத்தில் அற்பமாயினும் ஏதும் மிச்சம் பிடித்துவைப்பவர்களுக்குக் காரியபாகம் எனும் திறமை உண்டாம். அத்திறமை இல் லாமையால் அவர்களைக் குறித்து யாவருக்கும் பரிதாபம்

உண்டாம். சரியான சிந்தனையுள்ளவர்களாயிருப்பார்களானால், இனிமேல் தம்மனைவி மக்கள் படும் அவஸ்தையை நினைக்கும்போதெல்லாம் அவர்களுக்கு அச்சமும் நடுக்கமும் உண்டாகாதிரா. "பூலோகத்து மனுஷர் தேடின பொருளைச் சேமித்து வைத்தவர்கள் - செலவழித்தவர்கள், சிக்கனவுள்ளவர்கள் - பெருகச்செலவிடுவோர் என்று எப்பொழுதும் இருவகுப்பினராய் வியாகிக்கப்படுவார்கள். வீடு - யந்திரம்-வாரதி-மரக்கலம் இவைகளை நிர்மித்தவர்களும், மனுஷருடைய நாகரிகத்திற்கும் சுகத்திற்கும் காரணமாகிய சமஸ்த பெருமுயற்சிகளையும் சாதித்தவர்களும் யாவர்! யாவரெனில், தேடியதிரவியத்தைக் காப்பாற்றிவைத்தவர்களும் சிறுகச் செலவுசெய்தவர்களுமே. கைப்பொருளை விழலுக்கு இறைத்தவர்கள் எப்பொழுதும் மேற்குறித்தவர்களுக்குத் தொழும்பராயிருந்தார்கள். இப்படி ஆவதுதான் இயற்கைப் பிரமாணமும் திருவுளச்செயலின் பாங்குமாம்; எத்திறத்தாராலுஞ்சரி, ஆபத்திற்கு உதவுமென்று பொருளைச்சேமித்து வைக்காமல் சிந்தனையற்றுச் சோம்பியிருப்பவர்கள் விர்த்தியடைவார்களென்று வாக்குறுதி சொல்வேனானால் நான் சூதுசொல்லி ஊரை ஏமாற்றும் சுத்த 'அபத்தனுவேன்'' என மெஸ். காப்டென் (Mr. Cobden) ஹட்டர்ஸ்பீல்டில் கூலிவேலைசெய்த மனுஷருக்குச் சொன்னார்.

1847-ம் ஆண்டு மெஸ். ப்ரைட் (Mr. Bright) ராச்டேலில் தொழில்செய்யும் ஜனங்கள் கூடியகூட்டத்தில் "சத்தியம் என்பது சமஸ்தவகுப்பினருள்ளும் ஏற்றம் தாழ்வின்றிச் சமமாய்க் காணப்படும்" எனத் தம்மனம் தேறியிருப்பதை வெளியிட்டபின் அவர்களுக்குச் சொல்லிய புத்தி அத்தனை நற்புத்தியாயிருக்கின்றது. அது இது:— "எவனொருவனானாலும் சரி எத்தனை பெயரானாலும் சரி அவர்கள் நிலை நன்னிலை ஆனால் அதைக் காப்பாற்றிக்கொள்ளவும், தீயநிலை ஆனால் அதைவிட்டு விலகவும் அச்சமற்ற மார்க்கம் ஆக ஒன்றே ஒன்று. அது கைத்தொழில்முயற்சி, மிதச்

செலவு, மதுவிலக்கு, சத்தியம் எனும் குணங்களைச் சாதித்துவருவதே. இக்குணங்களைச் சாதித்து உங்களில் வெகுபெயர் இடைவிடாமல் உயர்ந்து சீர்ப்படுவதைக் காண்கிறீர்கள். மனுஷர் மனதிற்காவது தேகத்திற்காவது அகிதமும் அதிருப்தியுமாயிருக்கின்ற நிலையினின்று உயரத்தக்க மார்க்கம் இந்தச்சாதனை ஒன்றுதவிர வேறு ராஜபாதை இல்லை".

கூலிக்குப் பாடுபட்டுழைக்கும் ஜனங்களில் மத்தியமன் தனக்கும் பிறர்க்கும் உபகாரியும், கௌரவனும், மானியும், சுகமுடையோனுமாவதற்குத் தடை என்ன - ஒன்றும் இல்லை. கூலிக்கு வேலைசெய்வோர் அனேகர் அளவறிந்து செலவுசெய்து சுகுணசுகிர்தமுடையோராகி அறிவு முதிர்ந்து தேகம் தணிந்திருக்கிறார்கள். மனம் இருந்தால், அவர்களைப்போல (சிலர்தவிர) கைப்பாடுபட்டுப்பிழைப்போர் அனைவரும் அப்படி ஆகலாம். சிலர் பெற்ற பேற்றைக் கஷ்டமின்றி எல்லோரும் பெறலாம். அவர்கள் அனுசரித்த சாதனங்களை அனுசரித்தால் அவர்களுக்கு உண்டான சித்தி உண்டாம். எந்தெந்தத்தேசத்திலும் அனுதினமும் கஷ்டப்பட்டுப் பிழைக்கும் தரத்தார் இருக்கவேண்டுமென்பது தேவகற்பனை. அக்கற்பனை புத்தியும் நீதியுமாயிருக்கின்றது. ஆனால் இத்தரத்தோர் அளவு கடந்து செலவு செய்து, மனக்குறை அடைந்து, அறிவுகுன்றி, சுகம் அற்றிருப்பது தேவ அபிப்பிராயமல்ல. அது அவர்கள் அறிவின்மையாலும், ஆசை இச்சைகளுக்கு இடங்கொடுப்பதனாலும், குறும்புத்தனத்தாலுமே உண்டாகின்றது. கைப்பாடுபடும் ஜனங்களுக்கு உண்டாகும் தன்முயற்சிச்சிந்தை சுகசிந்தை. அது மற்றெந்தக் காரணங்களிலும் அதிகமாய் அவர்களை இனம்பிரிக்காமல் வகுப்போடே கொண்டு எழுப்பும். இவ்வண்ணம் அது அவர்களை உயர்த்துவது உயர்ந்தவர்களைத் தாழ்த்துவதனாலல்ல, பக்தியிலும் புத்தியிலும் சுகிர்தத்திலும் வர வர உயரும் பதவிமட்டத்திற்கு அவர்களைக் கிளப்பிவிடுவதனாலேதான். 'நீதினால் முழுதும் சம்பிரமமாய் வாழும் சீமான்களைப்

போலச் சாமானியருக்கும் பொருந்தும். மானிடர் இயற்கையின் வடிவு அகண்டமும் பிரதி மனுஷனுக்குள்ளும் அமைந்திருக்கின்றது.'' இது மந்தேக் வாக்கியம்.

இவ்வுலகில் மனுஷருக்கு உண்டாகும் முக்கிய ஆபத்து மூன்று – அவை, முயற்சியின்மை–பிணி–சாக்காடு. இம்மூன்றுக்கும் உதவும் எத்தனங்களை மனுஷர் முன்னாடியே செய்துவைக்கவேண்டும். இது இனி நிகழ்வதை எதிர்நோக்காய்க் காணும் எவர்க்கும் தோன்றும். மேற்குறித்த ஆபத்துகளில் முன்னவை இரண்டுக்கும் மனுஷர் தப்பினும் தப்பலாம். பின் குறித்த சாக்காடு எனும் ஆபத்து வராது நிற்காது. ஆனால், புத்தியுடையோர் தாம் முயற்சிகுன்றியிருக்கவும் பிணியுற்று வருந்தவும் சம்பவித்தால் தமக்கும் தம்மைப்பற்றியிருப்பவர்களுக்கும் இவ்வாபத்துகளுக்குக் கூடியவரையில் உதவும்படி மிதச்செலவுசெய்து க்ஷேமநிதி வைத்திருப்பது கடன். இந்த நடமாய்ப் பார்க்குமிடத்து, பொய்களவின்றி முறைமையாய்த் திரவியம்தேடி மிதமாய்ச் செலவிடுவது முக்கியம். முறைமையாய்த் தேடிய திரவியம் பொறுத்து முயன்ற முயற்சிக்கும், இளைக்காத மனவலிக்கும், எதிர்த்துநின்று மேற்கொண்ட சோதனைக்கும், ஆசைகூர்ந்து பெற்ற பயனுக்கும் அறிகுறியாம்; நல்வழியில் திரவியத்தைச் செலவிட்டால் புத்தியும் பூர்வசிந்தனையும் கட்டுமட்டான நடையும் விளங்கும். இவைகளே மனுஷர் நெறிகுறியைத் தளர்ச்சியின்றித் தாங்கும் அடிபுரம். யாதொரு நிலைபேறான இரயமும் பிரயோஜனமும் இல்லாத திரளான வஸ்துகள் செல்வப்பொருள் என்னப்படினும், மற்றனேக செல்வப்பொருள்கள் மிக அருமைபெருமையானவைகள்; அன்னம் – வஸ்திரம் – குடும்பசுகம் இவைகளன்றி, நன்மானம் – ஸ்வாதீனம் என்பவைகளும் செல்வப்பொருள்களே. ஆகவே, திரவியம் சேமித்து வைத்திருக்கும் வேலைக்காரனுக்கு அது தரித்திரத்தின் வருவழியை அடைக்கும் அரணாயிருக்கின்றது; அது அவனை அடிகோலி நிற்கப்பண்ணி, தற்காலம் வருமளவும் நெஞ்சம்

குளிர்ந்து ஆசைகூர்ந்து காத்திருக்க அவனை வல்லவனுக்கும். உலகத்தில் அசையாநிலைபெற எத்தனிக்கும் எத்தனம் என்ருல் அது சாமானியமல்ல – அதில் ஒரு கௌரவம் இருக்கின்றது. அது ஒருவனுக்கு அதிகபலமும் குணநலமும் உண்டாக்கும். எவ்விதத்திலும் அது அவனுக்கு முன்னிலும் அதிக கிரியாசுவாதீனம் கொடுக்கும்; அன்றியும், பின்னைத்தனத்திற்குப் பலவிர்த்திசெய்ய அவனை வல்லவனுக்கும்:

ஆனால் எப்பொழுதும் தரித்திரத்தின் அருகில் வட்டமிட்டு நிற்கும் மனுஷன் நிலைக்கும் அடிமை நிலைக்கும் சமீபமேதவிர அதிதூரம் அல்ல. எத்தருபமாய்ப் பார்ப்பினும் அவன் தனக்குத்தானே யஜமான் அல்ல, அவன் எந்த நிமிஷத்திலும் பிறர் தொழும்பன் ஆகி அவர்கள் ஏவியபடி தொண்டுசெய்ய வந்தாலும் வரும். இது அவன் கதி. ஒருவாறு எவர்க்கும் பணிந்து நடவாதிருக்க அவனால் மாளாது. ஊர் உலகத்தை அச்சமற்று எதிர்நின்று நிமிர்ந்து முகம்பார்க்க அவனுக்குத் துணிவு இல்லை; சாமகாலத்தில் அவன் கதி பிச்சை, அல்லது ஏழைகள் படி. வேலை சிறிதும் அகப்படாவிடில், வேறுவித வேலைத்துறைகளில் இறங்க அவனுக்கு நிர்வாகம் இராது; பாறையில் ஒட்டிய மட்டியைப்போல அவன் தன் ஊரில் கட்டுண்டிருப்பான், எழுந்து அயலூருக்குச் செல்லவுமாட்டான், பரதேசம் போகவுமாட்டான்.

சுவாதீனம் பெறுதற்கு மிதச்செலவுசெய்து பயில்வது ஒன்றே ஆவசியகம். மிதச்செலவு செய்யும் திறத்திற்கு மேலான தீரமும் வேண்டுவதில்லை, சிறந்துயர்ந்த சுகிர்தமும் வேண்டுவதில்லை; சாதாரண ஊக்கமும் மத்தியம புத்தியுடையோர்க்குள்ள திறமையும் அதற்குப் போதும். அடிப்படையாயிருக்கும் மிதச்செலவு என்பது குடும்ப விவகார ஆட்சி நிர்வாகத்திற்கு உதவும் கிரமமேதவிர வேறல்ல: அதன் தாற்பரியம் காரியபாகமும், கிரமமும், முற்புத்தியும் வீண்செலவு தவிர்த்தலுமே. 'மீந்த துணிக்கை ஒன்றும் கெட்டுப்போகாமற் சேர்த்து

வையுங்கள்' எனப் பரமகுரு திருவாய்மலர்ந்தருளிய வாக்கியத்தில் மிதச்செலவு செய்திறத்தின் சாரம் வெளியிட்டிருக்கின்றது. அவருடைய சர்வசக்தி சிறிய லௌகிகவஸ்துகளைச் சிறக்கணிக்கவில்லை; ஜனத்திரளுக்குத் தமது மட்டற்ற வல்லமையை வெளியிட்ட சமயத்திலும், எல்லோருக்கும் மிக வேண்டும் சூதானம் எனும் அர்த்தபுஷ்டியுள்ள பாடத்தை அவர் போதித்தார்.

அன்றியும் செலவுவரையறை என்பதற்குப் பின்னெல்லாம் பெறும்பொருட்டுத் தற்கால போகத்திற்கு இடங்கொடாதிருக்கும் மனவலி எனவும் அர்த்தம் உண்டு. இந்த ரூபமாகப் பார்க்குமிடத்தில் அவ்வலி மனம்போன போக்கைத் தடுக்கவல்ல விவேகாதிக்கமாம். செலவுவரையறை என்பதும் வேறு திரவியலோபம் என்பதும் வேறு: இதற்கு நியாயம்,—இல்லாதவர்க்கு ஏதும் கொடுத்துதவ எப்பொழுதும் நிர்வாகம் உண்டாவது செலவுவரையறைக்கே. அது பணத்தைத் தெய்வமென்று பாராட்டாது, நால்வருக்கும் பயன்படும் சாதனமென்று மதிக்கும். "நாம் பணத்தைச் சிந்தையில் அல்ல, சிரசில் வைத்துக்கொண்டு போகவேண்டும்" என டீன் ஸ்விப்டு மொழிந்த வாக்கியம் இதற்குத் திருஷ்டாந்தம். செலவுவரையறை அல்லது குடித்தனப்பாங்கு என்பது விவகார ஞானத்திற்குப் புத்திரி, இச்சையடக்கத்திற்குச் சகோதரி, ஸ்வாதீனத்திற்கு மாதா என்று சொல்லலாம். அது பாதுகாக்கும் தன்மையுள்ளது என்பது பிரத்தியக்ஷம்.—நெறிகுறியைப் பாதுகாப்பது, குடும்பசுகத்தைப் பாதுகாப்பது, தேசக்ஷேமத்தைப் பாதுகாப்பது. சுருக்கிச்சொல்லில், அது தன்முயற்சியின் உத்தம ஸ்வரூபங்களில் ஒன்று.

லௌகிகத்திற் பிரவேசித்தபொழுது ப்ரான்ஸிஸ் ஹார்னருக்கு அவர் பிதா சொல்லிய புத்திமதி:—"எவ்விதத்திலும் நீ சுகித்திருக்கவேண்டுமென விரும்புகிறேன். ஆனால் மிதச் செலவு செய்வது முக்கியமென்று நான் எவ்வளவு வற்புறுத்

திச் சொல்லினும் ஏற்குமேதவிர ஏற்காமற் போகாது. செலவுவரையறை யாவர்க்கும் வேண்டிய குணம்; ஆழ்ந்த அறிவு இல்லாத மனுஷர் அதை எவ்வளவு சிறக்கணித்தாலும், அது ஸ்வாதீனம் அடைவிப்பது நிசம். பெருமனதுள்ள பிரதிமனுஷனுக்கும் பிரதான தாற்பரியம் ஸ்வாதீனமே". இவ்வதிகாரமுகத்தில் எடுத்துக்காட்டிய பர்ன்ஸ் கவிஞர் செய்யுள் அடிகளின் பொருள் சரிதான். ஆனால் அவர் செய்யுள் நடை உயர்ந்து செய்யும் செயற்பாங்கு தாழ்ந்திருந்தது. அது அவருக்குக் குறைச்சல்தான்; அவர் சாதனையிலும் பாவனை நயந்திருந்தது. அவர் சாங்காலம் அடுத்துக் கிடந்தகிடையில், "ஐயோ! க்லார்க், எனக்கு மரணயாதனை தொடங்குகின்றது. பர்ன்ஸ்-உடைய மனைவி ஏழைவிதவை, கண்ணுக்குக்கண்ணான பிள்ளைகள் திக்கற்ற அநாதர்;—இதோ பெண் அழுதகண்ணீர்போல் என் பலம் ஒடுங்கியது. இந்தப் பாடு இனிப்போதும்;—எனக்குப் பாதி வியாதி இதே" என இஷ்டர் ஒருவருக்குக் கடிதம் எழுதினார்.

பிரதிமனுஷனும் தன் வரவிற்குச் செலவு குறைய ஜீவனம் பண்ணும் உபாயம் அறியவேண்டும். இவ்வாறு ஜீவனம் செய்வதே சத்தியத்தின் சாரமாம் - ஏனெனில், ஒருவன் செலவு தன் இயல்பிற்கு மிஞ்சாமல் யோக்கியத்தனமாய் ஜீவனம் செய்யானாகில், அவன் அயோக்கியத்தனமாய்ப பிறர்பொருளில், ஆதரவில் பிழைக்கவேண்டும். இது ஆவசியகம். தங்கள் விஷயத்தில் எண்ணாமல் எவ்வளவும் செலவுசெய்து, பிறர் சுகத்தை மறந்து தங்கள் போகத்தில்மாத்திரம் சிந்தனையாயிருப்பவர்களுக்குப் பணத்தின் அருமை பெருமை பெரும்பாலும் சமயம் மூர்ந்தபின் தெரியவரும். அந்த அழிப்பாளிகள் பிறவிக்குணம் உபகாரகுணமாயிருப்பினும், அறுதியில் கிரியைகெட்டவர்களாகும்படி நேரிடும். காலத்தைப் போலப் பணத்தையும் அவர்கள் வீணிற் போக்கிவிடுவார்கள்; இனிமேற் சம்பாதித்துத் தீர்க்கலாமென்று கடன்படுவார்கள்; திரவியம் தேடுமுன்னே தேட்டத்தைக் கணக்கிடுவார்

கள் ; இவ்வாறே கட்டுண்டவர்களாகிச் சடன்சுமை தலைக்கு ஏறி அழுந்துவார்கள். அதனால் அவர்கள் சுவாதீனமும் தன்னிஷ்டமும் கெட்டுப்போம்.

மிதச்செலவு செய்வது ஆவசியகமாம்பொழுது, சிறுக வரும் திரவியத்தில் அல்ல, சிறுக மிஞ்சிவைத்திருக்கும் திரவியத்தில் கண்ணாயிருப்பது உத்தமம் என்பது பேக்கன் பிரபுவின் நீதிவாக்கியம். அனேகர் வியர்த்தமாய்த் துர்வழிகளில் இறைக்கும் மீந்த பணத்தைப் பத்திரமாய்க் காப்பாற்றுவார்களானால், பெரும்பாலும் அது ஜீவன் உள்ளளவும் தாக்கற்றுப் பிழைக்கத்தக்க பெருந்தனத்திற்கு அடி ஆகும். இப்படிப் பணத்தை வீணிற் சிதைவுசெய்வோர் பெரும்பாலார் உலகம் தமக்கு அநியாயம் செய்ததென்று உதாசினம் சொல்லியும், தமக்குத்தாமே அறக்கொடிய சத்துருக்களாவார்கள். ஆனால், ஒருவன் தனக்குத்தானே நண்பனாகாதிருந்தால் பிறர் தனக்கு நண்பராவாரென்று இருப்பதெப்படி? பொருள்வரவு மிதமாயிருந்து முறைமையாய் ஜீவனம்செய்வோர் கையில் மடியில் பிறருக்குக் கொடுத்துதவ எப்பொழுதும் சிறிது பணம் இருக்கும்; உள்ள பொருள் அத்தனையும் சிந்தனையின்றிச் செலவழிக்கும் அழிப்பாளனோ எவருக்கும் உதவ ஒருபொழுதும் இடம்பெறான். ஆனாலும், உலோபியாயிருப்பது எளிய காரியமாகும். தானும் அநுபவியாது பிறருக்கும் கொடாதிருக்கின்ற லோபகுணத்திற்குப் பெரும்பாலும் இர்ஷ்டி குறுகிக் கருமச்சிதைவு உண்டாம். ஒரு பெனி மனம் உள்ளவன் ஒரு பொழுதும் இரண்டு பெனிக்கு உடையவனானதில்லையாம். அறுதியில் பெருமனதும் ஈகையுமே சத்தியத்தைப்போல உத்தமநெறியாம். "உவேக்பீல்ட் குரு" எனும் கிரந்தத்தில் மனக்கசிவுள்ள அயலானாகிய ப்லாம்பரோவை ஜென்கின்ஸன் பிரதிவருஷமும் யாதாயினும் ஒருவிதத்தில் ஏமாற்றியும், "நான் தரித்திரத்தை அடைந்து சிறையிருக்க ப்லாம்பரோவிற்கு வரவரச் செல்வம் முதிர்கின்றது" எனமொழிந்தான். உதாரத்தையும் சத்தியத்தையும் தலைமேற்

கொண்டு நடந்து பிரபலசித்தி பெற்றதற்கு விவகாரத்தில் மிகுதிரளாய்த் திர்ஷ்டாந்தம் காணலாம்.

"வெறும் பை நிமிர்ந்து நிற்கமாட்டாது" என்று ஒரு பழமொழி இருக்கின்றது. கடன்பட்டவனும் நிமிர்ந்து நிற்கமாட்டான். அன்றியும் கடன்பட்டவன் சத்தியவந்தன் ஆவதும் கஷ்டந்தான்; ஆனதுபற்றியே பொய்யைச் சுமக்து போகும் வாகனம் கடன் என்று சொல்லப்படும். கடன்பட்டவன் அதைச்சற்றுப் பொறுத்திருந்து வாங்கும்படி கடன் கொடுத்தவனுக்கு ஏதும் சாக்குப்போக்கு ஏற்படுத்தவும் சமயம் கண்டு இல்லாத பொய் புரட்டுக் கற்பித்துச்சொல்லவும் வேண்டிவரும். பலமான நிர்ணயம் செய்து பயில்வோனுக்கு முதலில் கடன்படாது விலகுவது எளிதே; ஆனால், முதல்முறை கடன் கேட்பவனுக்கு அது எளிதில் அகப்படுவதனால், மறுதரமும் கடன்படப் பெரும்பாலும் சோதனை உண்டாம். அப்புறம் தீவிரகதியாய் அந்தப் பாவி கடன் வலைக்குள் சிக்குண்டு சமயம் மூர்த்தியபின் எத்துணை வருந்தி முயன்றாலும் அவனுக்கு மீட்சியில்லாதேபோம். கடன்படும் மார்க்கத்தின் முதற்படி பொய்சொல்லும் மார்க்கத்தின் முதற்படிக்குச் சமானம்; பொய்யைப் பொய் தொடரும் வண்ணம் கடனைக் கடன் தொடர்ந்து கடன்படும் மார்க்கத்தில் வரவர முன்னேறுவதொழியப் பின்னிடைவது அரிதாகும். சித்திரகராகிய ஹேடன் தாம் முதலில் கடன்வாங்கின அன்றுதொட்டுச் சிறுமை அடைந்ததாகக் குறித்தார். "கடன்வாங்கித்திரிவோன் மனம் கலங்கித்திரிவான்" எனும் பழமொழி வாஸ்தவமென்று அவர் அனுபவசித்தமாய் அறிந்தார். அவருடைய தினசரிதைப்புஸ்தகத்தில் பதிந்திருக்கும் முற்குறியான வாக்கியம் இது:—"கடனும் கட்டுப்பாடும் இங்கே தொடங்கின; இந்தக்கட்டு அவிழ்ந்து நான் ஒருபொழுதும் விலகியதுமில்லை, இனி நான் உள்ளளவும் விலகுவதுமில்லை". பணமுட்டால் கடுமனத்துன்பம் உண்டாய் உழைக்கும் திறம் தீர்ப்பாய் இல்லாதொழிந்து அடுத்தடுத்துச்சிறு

மைப்படுவது எவ்வகையென்று அவர் தம்மைக்குறித்து எழுதிய சரித்திரம் வாசிப்பவர் மனம் மிகவுருந்த வெளியிடுகின்றது. இராணுவக் கலைச்சேவகத்தில் அமரும்பொழுது வாலிபன் ஒருவனுக்கு அவர் எழுதிப்புகட்டிய புத்திமதிகளை இங்கெடுத்துச் சொல்வோம்:—"கடன்படாமல் உனக்கு அமையாதாகில் எவ்வகைப்போகத்தையும் ஒருபொழுதும் கிரயத்திற்கு வாங்காதே, ஒருபொழுதும் பணம் கடன்வாங்காதே: அது இழிவு. ஒருபொழுதும் கடன் கொடுத்துதவாதேயென்று நான் சொல்லேன், ஆனால் உன்னைக் கடன்கொடுத்து உன் கடன் இறுக்க இயலாதிருப்பாயாகில், ஒருபொழுதும் கடன்கொடாதே; என்னதான் வந்தாலும் ஒருகாலும் கடன் வாங்காதே" ஏழை வித்தியார்த்தி ஆகிய பிக்டி தம்மிலும் ஏழைகளாகிய தாய்தந்தையரிடத்தில் வெகுமானம் முதலாய் வாங்க உடன்படவில்லை.

பாலியத்தில் கடன்படுவது நாசம் என்பது ஜான்ஸன்பண்டிதர் தாற்பரியம். இவ்விஷயத்தின் பெயரில் அவர் வாய்ச்சொல் கனங்கொண்டது, நினைவில் இருத்திக்கொள்ளத்தக்கது. அச்சொல் இது:—கடன்படுவது கேவலம் அசந்தர்ப்பத்திற்கு இடமென்று எண்ணிக்கொள்ளாதே; அது கடு உபத்திரவமென்றும் காண்பாய். தரித்திரமானது நன்மைசெய்யும் வழி வகை அனேகத்தை ஒழிவித்துத் தீமைக்கு இடங்கொடாது நிற்கும் தேகபலத்தையும் மனோபலத்தையும் மிகவும் ஒடுக்கும். ஆனதுபற்றி, சகித உபாயம் அனைத்தாலும் அதைத் தவிர்க்கவேண்டும். ... ... ஆகவே, எவனிடத்திலும் கடன்படாதிருப்பதே உன் முக்கிய விசாரமாயிருக்கக்கடவது. வறிஞனாயில்லையென்று நிர்ணயித்துக்கொள். உன் வசம் உள்ளது எம்மாத்திரம் ஆனாலும் சிறுகச் செலவழி. தரித்திரம் மனுஷர் சுகத்திற்கு மகாசத்துரு; அது ஸ்வாதீனத்தை நசிப்பது இன்னும், அது சில சுகிர்தங்களை அசாத்தியமாக்கி, மற்றவைகளை மிகவும் கஷ்டமாக்கும். மிதச்செலவு மனவமைதிக்கன்றிப் பிறர்க்கு உபகாரம் செய்வதற்கும் மூலமா

யிருக்கின்றது. பிறர் உதவி வேண்டும் ஒருவனும் பிறர்க்கு உதவ வல்லவனுகான்; தனக்குக் கண்டு தானம் வழங்கவேண்டும்''.

தன் கருமத்தை நேருக்குநேரே தானே பார்ப்பதும் ரொக்க வரவுசெலவுக்கணக்கு எழுதிவைப்பதும் பிரதிமனுஷனையும் கட்டுகின்ற கடமையாம். இவ்வண்ணம் எளிய கணக்குச் சிறிது பயின்று வருவது பெரும்பயன் விளைதற்கு இடமாமெனத் தோன்றும். நாம் வரவும் செலவும் சரிவர ஜீவனம் பண்ணுமல் வரவிற்குச்செலவு ஒருபடி குறைய ஜீவனம்பண்ணவேண்டும். இதுதான் புத்தி. ஆனால் இருமுனையும் சந்திக்கத்தக்க உபாயம் சூழ்ந்து ஜீவனம்செய்தாலே இது சாத்தியப்படும். இந்தக் கிரமப்படி செய்யவேண்டுமென்று ஜான் லாக் வற்புறுத்திப் புகட்டினுர். அவர் சொல்லியது, ''வரவுசெலவுக்கணக்கைக் கிரமமாய் எழுதிவைத்திருந்து நித்தமும் கண்ணெதிரில் காண்பதொன்று தவிர மற்றொன்றும் ஒருவனை அவன் வரவின் அளவிற்குச் செலவு உட்பட ஜீவனம் செய்யப்பண்ணுமெனத் தோன்றவில்லை''. உவெலிங்தன் ட்யூக் பட்டவர்த்தனர் தமது ரொக்கவரவு செலவுக்கணக்கு முழுதும் இட்டமாய் எழுதிவைத்திருந்தார். அவர் மெஸ். க்லீக்குக்குச் சொல்லியது: — ''என்பெயரில் எழுதிவரும் கணக்கெல்லாம் தவருமல் நானே கொடுத்துத் தீர்த்துவருகிறேன், யாவரும் இவ்வண்ணம் செய்யவேண்டுமென்று புத்தி சொல்லுகிறேன்; முன்னே எனக்கு அந்தரங்கமான வேலைக்காரன் ஒருவனை என் கணக்குத் தீர்க்க நம்பிவிட்டுவந்தேன். ஆனால், எனக்குச் செலவுகொடுத்த கணக்கு இரண்டொரு வருஷம் தீராதிருந்த கடன்காரன் ஒருநாட் காலையில் வந்து கணக்குத் தீர்க்கக்கேட்டபொழுது பிரமையடைந்தேன். வேலைக்காரனை நம்பும்படி என்னைப் பிடித்தவைத்தியம் அன்று விட்டது. இந்தப் பயல் கணக்குத் தீராமல் என் பணத்தைச் சொப்பிரயோஜனத்திற்காக வியாபாரத்தில் விட்டிருந்தான்''. கடனைச்சுட்டி அவர் ''அதி மனுஷனை அடி-

மைப்படுத்துகின்றது. பணமுட்டென்றால் இன்னதென்று நான் பலகால் அறிந்திருக்கிறேன்; ஆனால் ஒருபொழுதும் நான் கடன்பட்டதில்லை" என மொழிந்தார். தொழில் வரலாறுகளை நிர்வகிப்பதில் உவெலிங்கதனைப்போல உவாஷிங்டனும் அந்தனை அக்கறையுள்ளவர்தாம். அவர் அமெரிக்க ஐக்கிய பிரதேசத்தின் பிராஜாதிபதி உத்தியோகம் நிர்வகிக்கும் பொழுதும் தமது வரவிற்குச் செலவு மிஞ்சாவண்ணம் ஜீவனம்பண்ணத் தீர்மானித்திருந்தார். ஆனதுபற்றி, அவர் தம் வீட்டில் செல்லும் அற்பச் செலவையும் நுட்பமாய்ச் சோதனைசெய்வது தமக்கு நிந்தையென்று அசட்டையாய் விட்டுவிடவில்லை.

செயின்ட் வின்செண்ட் எர்ல் பிரபுப்பட்டம்பெற்ற ஜெர்விஸ் (Jervis) எனும் கடற்றளபதி இளம்பருவத்தில் தாம் பட்ட அவஸ்தைகளையும், பின்னும் பல நிர்ணயங்களோடு கடனில் இறங்காதிருக்க நிர்ணயித்ததையும் வயணமாய்ச் சொல்லியிருக்கிறார். அவர் சொல் இது:—"என் பிதா பெருங்குடும்பி. வரும்படி மிதம். லௌகிக வியாபாரம் தொடங்கிய பொழுது அவர் எனக்குக் கொடுத்த மூலதனம் இருபது பௌண்ட். கொடுத்தது எல்லாம் இம்மாத்திரந்தான். நான் நாட்படக் கடல்யாத்திரை செய்தபின் பின்னும் இருபது பௌண்டுக்கு உண்டி அனுப்பினேன். அவ்வுண்டி என்னிடத்திற்குத் திருப்பி அனுப்பிவிடப்பட்டது. பிதா இவ்வண்ணம் என்னைக் கண்டித்ததை நினைந்து எனக்கு மனமடிவு உண்டாயிற்று. இனிப் பணம் வந்துசேருமென்று உறுதி அறியாமல் ஒருபொழுதும் உண்டி அனுப்புவதில்லையென்று பிரதிக்கினைசெய்து அதை எப்பொழுதும் கைக்கொண்டு நடந்தேன். உண்டி திரும்பிவந்துசேர்ந்தவுடன் உணவுச் செலவைச் சுருக்கினேன். பந்திபோஜனத்தை நிறுத்திவிட்டுத் தனித்திருந்து கப்பலில் வரும் சம்பளத்தைச் செலவுசெய்தேன். அது செலவிற்குக் கண்டது; கிழிந்த வஸ்திரத்தை நானே தைத்து அழுக்குவஸ்திரம் நானே வெளுத்தேன்; மெத்தையுறையைப்

பிரித்து ஒரு சோடு காற்சட்டை தைத்தேன்; இவ்வித உபாயங்களால் மானம் காக்கத்தக்க அளவு பணம் சேர்த்துவைத்து செலவுக்கணக்கு எழுதத் தொடங்கினேன். அக்காலந் தொட்டு இந்நாள்வரையும் வரவிற்குச் செலவு மிஞ்சாமற் புத்தியாய் ஜீவனம்செய்துவருகிறேன்." ஜெர்விஸ் ஆறு வருஷகாலம் கடும்பசியுபத்திரவப்பட்டார்; ஆனால் அவர் சத்தியத்தைக் காத்து, தொழிலைச் சித்தியாகப் பயின்று, சாமர்த்தியத்தாலும் தைரியத்தாலும் ஓயாமற் படிப்படியாய் உயர்ந்து—உன்னத பதம்பெற்றார்.

இங்கிலாந்தில் மனுஷர் நாள்கழிக்கும் பதம் மிதமிஞ்சி உயர்ந்திருக்கிறதென்று மெஸ். ஹியூம் ஒருமுறை ஜனப்பிரதிநிதி சபையில் சொல்லச் சபையார் நகைத்தனர்; அவர்கள் நகைத்தும், அவர் சொல் குறிதப்பாதிருந்தது. மத்தியமஸ்தியுடைய ஜனங்கள் தங்கள் வரவிற்குச் செலவுமிஞ்ச நடப்பார்கள், அல்லது வரவும் செலவும் ஒப்ப நடப்பார்கள்: அவர்கள் ஒருவாறு செல்வரைப்போலச் சுகித்து வாழ்வோராக நடிப்பார்கள். அவ்வகை நடிப்பால் தேசத்திற்கெல்லாம் பழுது உண்டாகின்றது. சிறுவரைக் குலமக்களென வளர்த்துநிமிர்த்த அல்லது சிறுவருக்கு நாகரிகம் பயிற்ற யாவருக்கும் பேராசை உண்டு. ஆனால், அடிக்கடி அவர்கள் குலமக்களாவதொழிய நாகரிகர் ஆகிறதில்லை. அவர்களுக்கு நல்லாடை, நற்பாங்கு, ஜம்பம், காலக்ஷேபம் என்பவைகளில் நாட்டம் உண்டாகின்றது. குலமக்களுக்கு உரிய ஒழுக்கத்திற்கு இது உறுதியான அஸ்திவாரம் ஆகுமா, ஒருபொழுதும் ஆகாது; பின்னை இதனால் விளையும் சித்தி என்ன? என்னவெனில், இஞ்சிப்பணிகார இளந்துரைமக்கள் சேனைபெயர் உலகப்பரப்பில் அங்கங்கே போய்ச்சேர்ந்திருக்கிறார்கள். அவர்களைக் காண்பவர்களுக்கு ஆபத்துநேர்ந்து மாலுமிகள் கைவிட்டு யாவராவது சிறுபான்மை கடலிற் கண்டெடுக்கும் கலத்தின் அடியும் அதில் தப்பியிருக்கும் ஒரு குரங்கும் ஞாபகத்தில் வரும்.

எங்கெங்கே பார்த்தாலும் மனுஷருக்கு "நாகரிகர்" ஆகும் ஆசை அளவு கடந்திருக்கின்றது. பெரும்பாலும் சத்தியத்தை விரயம்செய்து கோலம் குலையாதிருக்கிறோம். நாம் செல்வர் அல்லாதிருப்பினும், காண்பவர் கண்ணுக்குச் செல்வராகத் தோன்றவேண்டுமென்றிருக்கிறோம். கேவலம் எளிய வெளித்தோற்றத்தில் கௌரவமாயிருப்பது எளிய கௌரவம். அப்படியாவது கௌரவமாயிருக்கவேண்டுமென்று விரும்புகிறோம். தெய்வம் சித்தம் இரங்கி நமக்கு அமைந்த ஸ்திதியில் பதைப்பற்று நாள்கழிக்கத்தக்க தீரம் நமக்கு இல்லை; உலகம் நகைக்க நாம் நமக்கு ஒரு நூதன நாகரிக ஸ்திதியை வருவித்து அதில் நாள்கழிக்கவேண்டுமென்றிருக்கிறோம். நாம் இப்படிச் செய்வதெல்லாம் நம்மைப்போலப் பதராகிய நாகரிகருடைய மனதிற்கு இதம் செய்யும்பொருட்டே. பெரியோர் நால்வர் கூடும் சபை எனும் அரங்கத்தில் முன்னிரை ஆசனங்களில் உட்கார மனுஷர் ஓய்வற்று எப்பொழுதும் திரண்டடர்ந்து இகலாடுகிறார்கள்; அச்சந்தடியில் அகப்பற்று நீக்கும் மேம்பாடான நிர்ணயம் அனைத்தும் காலால் மிதிபட்டு, சிறந்த குணம் அனேகம் தவறாமல் நசித்திறந்துபோகின்றன. லௌகிகவிர்த்தியென வினை தோன்றுவதின் பிரகாசத்தால் காண்பவர் கண்பொறியைக் கலங்குவிக்கும் இவ்வாசைப்பெருக்கம் அனைத்தாலும் விளையும் சேதம் எவ்வளவு, துன்பம் எவ்வளவு, கடன்முட்டு எவ்வளவு, இவைகளை விரித்துரைக்க நிமித்தம் இல்லை. விளையும் கேடுபாடுகளை வறிதெனத் தோன்றத் துணிவற்றுச் சத்தியம்தவறாத் துணியும் மனுஷர் செய்கிற தீர்த்த மாறுபாடுகளிலும் பேதைகளான குடும்பிகள் வெகு வெகுபெயர் செல்வர் ஆகும்படி சிந்தனையற்று இறங்காத்துறையில் இறங்கிப் பெரும்பாலும் முழுகி நாசமாய்ப்போவதிலும் பின்னும் ஆயிரக்கணக்கான விதங்களிலும் காண்கிறோம். காண்பவர் பரிதபிப்பது அத்தனையும் கருமம் சிதறுவார்க்காகவல்ல, கடனில் முழுகி நசிவார்க்காகவே.

காலஞ்சென்ற ஸ்ரீ சார்லஸ் நேப்பியர் (Sir Charles Napier) இந்திய சேனாதிபதி உத்தியோகம் கைவிடும் சமயத்தில் இந்திய ராணுவ அதிகாரிகளுக்குப் பிறப்பித்த சாதாரண கட்டளைப்பத்திரத்தில் வாலிப உத்தியோகஸ்தர் அநேகர் இயல்பிற்குமிஞ்சிப் பெருவாழ்வுவாழப் பதைத்து மானம் இழந்து கடனில் மூழ்கிப்போவதைத் தம் உள்ளம் அறிந்தபடி அச்சமற்று வற்புறுத்திக்கண்டித்தார். முக்காலே மூன்று வீசம் எவர் மனக்கண்ணுக்கும் மறைந்திருந்து அந்தப் பிரபலசாதனத்தில் ஸ்ரீ சார்லஸ் வலியுறுத்தித் தூண்டிக்காட்டிய தத்துவங்கள் இவை:—"சபைப்பழக்கம் முதிரப்பயின்ற குலமகன் குறி சத்தியம் இன்றி அமையாது". "கடனுக்குச் சாம்பேனும் பீரும் வாங்கிப் பருகுவதும், கடனுக்குக் குதிரைவாங்கி ஏறுவதும் படிக்காளி பண்பேதவிரக் குலமகன் பண்பல்ல". வரவிற்குச் செலவுமிஞ்ச வாழ்ந்து வாங்கின கடனைத் தீர்க்காமல் பெரும்பாலும் தம் வேலைக்காரர் கோர்ட்டு ஏறிக் கட்டளை பிறப்பிக்க வரப்பெறும் துரைகள் கமிஷன்பெற்ற பலத்தால் அதிகாரிகளாயிருந்தால் இருக்கலாமேதவிர, குலமக்களே அல்ல. நித்தமும் கடன்பட்டிருக்கும் சாதனையுள்ளவர்களுக்குக் குலமக்களுக்கு உரிய ரோஷமும் கெட்டுப்போம். ராணுவ உத்தியோகஸ்தருக்குப் போர்செய்யும் திறம் ஒன்றுமாத்திரம் இருப்பது போதாது: காளைத்தலை ஜாதிநாய் எதற்கும் இத்திறம் உண்டு. ஆனால் ராணுவஅதிகாரி தமது சொல்லை வழுவாமற் காத்துக்கொண்டாரா?—வாங்கின கடனைக் கொடுத்துத்தீர்த்தாரா?. குலமகன் நடைக்கும் ராணுவவீரன் நடைக்கும் அலங்காரமாய் விளங்கும் அபிமான லக்ஷணங்கள் பலவற்றுள் இரண்டு இவைகளேயென்று அவர் வற்புறுத்திமொழிந்தார். பிரித்தானியராணுவ உத்தியோகஸ்தர் எல்லோரும் பூர்வம் பேயார்ட் இருந்தபடி இருக்கவேண்டுமென்பது ஸ்ரீ சார்லஸ் நேப்பியர் பக்ஷம். அவர்கள் அச்சமற்றவர்களென்று அவர் அறிவார். நிந்தையற்றவர்களுமாயிருக்கவேண்டுமென்பது அவர் மனம். ஆனால், கடு ஆபத்

து நேரும் சமயத்தில் பீரங்கிவாயினின்று குண்டு கக்கினவண்ணமாயிருக்க, தகர்ந்த மதில்ஏறிநின்று பிராணனைப்பாராமல் பேராண்மைத்தொழில்செய்யும் திறமுள்ள அனேக வீரசூரராகிய வாலிபராணுவ உத்தியோகஸ்தர் இந்தியாவிலும் இங்கிலாந்திலும் இருக்கின்றனர்; இருந்தும் அற்ப விஷயஇன்பத்திற்குரிய சோதனைக்கு இடங்கொடாது நிற்கத் தக்க மனோதிரத்தை அவர்கள் சாதிக்கவல்லவர்களல்ல, அல்லது சாதியார்கள். இன்பத்திற்கும் துற்போகத்திற்கும் உரிய காலக்ஷேபங்களுக்கு வரவழைக்கப்படும்பொழுது "இல்லை", "அதற்கு என்னால் ஆகாது" என்று சுத்தவீரர் அடைவாகச் சொல்ல அவர்களுக்கு வாய்வாராது; கூட்டாளிகளால் நிந்திக்கப்படுவதிலும் இறப்பது வாசியென்று அவர்கள் எத்தனமாயிருப்பார்கள்.

வாலிபனுக்கு லௌகிக பிரயாணமார்க்கத்தில் இருமருங்கும் நெடுந்தூரம் சோதனைகாரர் நிரைந்துநிற்பார்கள். அவன் அவர்கள் சோதனைக்கு இடங்கொடுப்பானாகில், ஏறத்தாழ இழிவுறாதிருக்கமாட்டான். அவர்களைத் தீண்டினால், அவன் பிரகிருதியிற் புகட்டியிருக்கின்ற திவ்விய மின்னாதில் சிறிது அவன் அறியாவண்ணம் நீங்கிவிடும்; ஆண்மையோடு நிர்ணயசித்தனாய் "இல்லை" என்றுசொல்லிச் சொற்படிசெய்வதன்றி, அவர்களுக்கு இடங்கொடாது எதிர்த்துநிற்க உபாயம் வேறு இல்லை. நியாயங்களைச் சிந்தித்துச் சீர்தூக்கிப் பார்க்கப் பொறுத்திராமல் க்ஷணப்பொழுதில் நிர்மாணிக்க வேண்டும்; ஏனெனில், "சிந்திக்கும் ஸ்திரீ கெட்டாள்" என்றபடி சிந்திக்கும் வாலிபனும் கெட்டான். வெகுபேர் நிர்மாணிக்காமற் சிந்திக்கிறார்கள்; ஆனால் "நிர்ணயிக்காதிருப்பது நிர்ணயிப்பதே". "எங்களைச் சோதனைக்கு உட்படவிடாதிரும்" எனும் விண்ணப்பத்தில் மனுஷர் இயற்கை பூர்த்தியாய்த் தெரிகின்றது. ஆனால் வாலிபனுடைய பலத்தைப் பரீக்ஷிக்கச் சோதனை வரும்; அதற்கு ஒருமுறை இடங்கொடுத்தால், அப்பால் அதனோடு எதிர்க்கும் திராணி வர

வரக் குன்றும். ஒருமுறை இடங்கொடு, உன் மனோபலத்திற் சிறிது போய்விடும். ஆண்மையோடு எதிர்த்துநில், முதலாவது நிர்ணயம் ஜீவன் உள்ளளவிற்கும் உரந்தரும்; பின்னும் ஒருமுறை நிர்ணயம் செய்தால் அதே சாதனையாய்ப் போம். இளமையிற் பயிலும் சாதனைகளாகிய புறக்கட்டடங்களே அரணின் பலத்திற்கு நிலையாகவேண்டும்; ஏனெனில், இப்பிறவி எனும் யந்திரம் உள்ளிருக்கும் மஹாமூலதத்துவங்களைத் தேய்வுசிதைவின்றிக் காக்கும்பொருட்டு முக்கியமாய்ச் சாதனைகளின் மூலமாய் இயலவேண்டும். பெரும்பாலும் மனுஷருடைய நல்லொழுக்கம் வாஸ்தவமாய் அமைவது ஆயிரக்கணக்கான அற்ப லௌகிக கிரியைகளுக்குள் மெல்லென நுழையும் நற்சாதனைகளாலேயே.

பாடுபட்டு உழைப்பவர்களுக்கு விசேஷமாய் நேரிடும் பலமான சோதனைகளில் ஒன்றுக்குத் தாம் வாலிபராயிருந்தபொழுது நிர்ணயம்செய்து தப்பிக்கொண்ட வகை இன்னதென்று ஹ்யூ மில்லர் சொல்லியிருக்கிறார். அவர் கொல்லற்றுவேலை செய்யும்பொழுது இடைக்கிடை அவர் கூட்டாளிகள் சாராயம் பருகிக்கொண்டாடுவது வழக்கம். ஒருநாள் அவர் பங்குக்கு இரண்டு கிண்ணம் ஹ்விஸ்கிசாராயம் கிடைத்தது. அதை அவர் குடித்து வீடுசேர்ந்தபின் தமக்கு இஷ்டமாயிருந்த “பேக்கன் பிரபந்தம்” எனும் கிரந்தத்தை எடுத்து வாசிக்கத் திறந்தார். எழுத்துகள் அவர் கண்ணுக்குக் கூத்தாட்டம் ஆடின. அவருக்கு அர்த்தம் புலப்படவில்லை. இதைச்சுட்டி அவர் சொல்லியது;—“அப்பொழுது எனக்கு வந்துற்ற நிலைமை இழிவானதென்று என் மனதிற்பட்டது. எனக்குள்ள புத்தித்தரம் என் செய்கையால் அப்பொழுது குறைந்துபோயிற்று. அந்த நிலைமை நிர்ணயம் ஏதும் செய்ய மெத்தவும் அனுகூலமல்ல. அல்லாதிருந்தும், இனி ஒருபொழுதும் மதுபானவழக்கத்தில் இறங்கி வித்தியானுபோக சக்தியைக் கொள்ளைகொடேனென்று அந்நாழிகையிலேயே தீர்மானித்தேன்; ஈஸ்வரசகாயத்தால் அத்தீர்

மானத்தை நெகிழவிடாது சாதிக்கவல்லவனானேன்". பூலோகப்பிரயாணத்தில் பெரும்பாலும் ஒருவன் மார்க்கம் திரும்புகிற சந்திகளாகி அவன் பின்னொழுக்கத்திற்கு அஸ்திவாரம் போடுவன இவ்வகைத் தீர்மானங்களே. ஹ்யூ மில்லர் உற்றசமயத்தில் மனவலிமைசெலுத்தி அகலவிலகாதிருக்கச் சம்பவித்தால், இந்தப் பாரில் தாக்கிக் கடற்சேதப்பட்டுப் போவார். இதற்கு எதிரிடாவண்ணம் வாலிபர் ஆடவர் இருதிறத்தோரும் இடைவிடாமல் ஜாக்கிரதையாயிருக்கவேண்டும். வாலிபர் மார்க்கத்தில் எதிர்ப்படும் விக்கினங்களில் இது அறக்கொடியது, மிகுநாசமுள்ளது, தொலைப்பரிய துன்பம் செய்வது. "துர்ப்பழக்கம் எல்லாவற்றினும் பெருந்தகைமைக்குச் சற்றும் ஒவ்வாதது மதுபானவழக்கம்" என ஸ்ரீ வால்த்தர் ஸ்காட் சொல்லிவருவார். அம்மாத்திரமல்ல, அது காரியபாகத்திற்கும், மரியாதைக்கும், தேகசுகத்திற்கும் பொய்களவின்றி மானமாய் நாள்கழிப்பதற்கும் ஒவ்வாது. வாலிபர் ஆசையை அடக்கக்கூடாதபொழுது வெறுத்து விட்டுவிடவேண்டும். ஜான்ஸன் பண்டிதருடைய அநுபவமே அநேகருடைய அநுபவமாயிருக்கின்றது. தாம் பயின்ற பயிற்சிகளைச்சுட்டி அவர் "கேளும், நான் ஒழித்துவிட மாட்டேன், குறைத்து உட்கொள்ள என்றால் இல்லை" என மொழிந்தார்.

நாலு பெயர் நகைக்கத்தக்க ஒன்றைச் செய்யாதொழிவது நல்லதுதான். ஆனால் நாம் பயின்ற யாதொரு துர்வழக்கத்தை வலியுறுத்தி மல்லாடி வெல்வது இருவகை நியாயத்தைச்சார்ந்து-ஒரு நியாயம் உலகநிந்தை தவிர்த்து நடப்பது யுக்தம் என்பது, மற்றொரு நியாயம் தீமை அனைத்தையும் தீர்ப்பாய்த் தவிர்ப்பது தர்மம் என்பது. பின்குறித்த நியாயாதாரமே உத்தமதரம். மதுவிலக்குச் சங்கத்தில் சேர்வது முதலிய கையுதவிகள் சிலருக்குப் பயன்படவுங்கூடும். ஆனால் சித்திக்கும் சிந்தனைக்கும் செய்யும் செய்கைக்கும் உன்னதவிதி காட்டிச் சாதனைகளைச் சீர்ப்படுத்துவதுபோல மூலதத்துவங்களை உரப்பித்துச் சக்திசெய்ய வகைபார்ப்பது முக்

கியம். இதன்பொருட்டு வாலிபன் தன்னைத்தான் அறியவேண்டும், தன் நடைக்கிரமத்தைக் காவல்செய்யவேண்டும், தன் சிந்தனைகளையும் செய்கைகளையும் தன் விதியுடன் இணையிட்டுப்பார்க்கவேண்டும். தன்னை அறியஅறிய அவனுக்கு மேனுமேனும் மனத்தாழ்மை உண்டாம், ஒருவேளை தன் பலத்தில் அவனுக்குத் துணிவுகுன்றும். ஆனால் பின்வரும் உயர்ந்த பெரும்போகத்தைக் கட்டிக்கொள்ள இப்பொழுதுள்ள சிறிய போகங்களுக்கு இடங்கொடாது முரணுவதனால் பெறப்படும் சிக்ஷை மிக அரியதென்று எப்பொழுதும் காணப்படும். தற்பயிற்சியில் மேலான கிரியை அதே, ஏனெனில், "மெய்மகத்துவம் நம்மை மௌனமாய் வெற்றிகொள்வதனால் உற்பத்தியாகும். அது இல்லாவிடில் விஜயன் முதல் அடிமையே தவிர வேறல்ல."

திரவியோற்பத்திசெய்யும் பரமரகசியத்தை உலகத்திற்குத் தெரிவிக்கும்பொருட்டு உலகறியப்பெற்ற அனேக கிரந்தங்கள் எழுதப்பட்டிருக்கின்றன. ஆனால் இதில் அந்தரங்கம் ஒன்றும் இல்லை. சர்வதேசபழமொழிகளும் இதற்கு மெத்தவும் சாக்ஷிபகருகின்றன. "பென்னியை நீ காத்துக்கொள், பௌண்ட் தன்னைத் தானே காக்கும்." "முயற்சி நல்லதிர்ஷ்டத்திற்குத் தாய்" "பாடும் இல்லை, பயனும் இல்லை" "வெயர்க்காவிடில் இனிக்காது." "உழைப்பவர்க்கு ஊதியம் உண்டு." "பொறுமையும் முயற்சியுமுள்ளவனுக்குப் பூமி காணியாட்சி." "கடனில்முழுகி நித்திரைசெய்து எழுவதிலும் பட்டினியாய்ப்படுத்துறங்குவது வாசி" உலகத்திற் செல்வராகிவாழும் உத்தம வழிவகைகளைப்பற்றிப் பல தலைமுறையாரின் அனுபவத்தொகை அடங்கிய பழமொழித் தத்துவஞானத்தை உணர்த்தும் மாதிரிகள் இத்தன்மையானவைகளே. நாம் எழுதும் உபாயம் உற்பத்தியாக நெடுநாள்முந்தியே இந்தப் பழமொழிகள் மனுஷர் வாக்கில் வாலாயமாய் இருந்தன. தேசத்தில் வழங்கும் இதர பழமொழிகளைப்போல, முதலில் ஏற்பட்ட உலகநீதிச்சட்டம் அவைகளே. மேலும் அவைகள்

காலபரிசோதனைக்கு அசையாதிருந்தன. அன்றன்று அனுபவசித்தமாய் அறியும் அறிவு அப்பழமொழிகள் இருக்கிப்பலத்து உறுதியானவைகளென்று இன்னம் சாட்சியிட்டுவருகின்றது. முயற்சிப்பலத்தைக்குறித்தும், பணத்தைப் பயன்பெறச் செலவிடுவதைப் பற்றியும் வியர்த்தமாய் இறைப்பதைப்பற்றியும் ஸாலமோனின் நீதிமொழிகளில் ஞானம் நிறைந்திருக்கின்றது:—"வேலையிற்சோம்பன் பெரிய அழிப்பாளனுக்குச் சகோதரன்." "சோம்புற்றவனே, எறும்பினிடத்திற்குப் போ; அதன் மார்க்கத்தை நினைத்து அறிவடைந்திரு." "வறுமை வழிப்போக்கனைப்போலும் குறைபாடு ஆயுதபாணியைப்போலும் சோம்புற்றவனை வந்தடையும்" என்றும், "நேர்மைதன்றுது நித்தமும் முயற்சிசெய்பவனுக்கு அவன் கைப்பாட்டால் செல்வப்பொருள் பெருகும்" என்றும் பிரசங்கி சொல்லுகிறான். "வெறியனும் வயிறுதாரியும் வறிஞராவார்கள்; சோம்பன் கந்தைகட்டுவான்." "வேலையில் முயற்சியுள்ளவனைக் காண்கிறாயா? அவன் வேந்தர்முன் நிற்பான்." ஆறுதல் எல்லாவற்றிலும் மேலாக, "பொன்னிலும் ஞானம் அடைவது வாசி; ஏனெனில் மாணிக்கத்திலும் ஞானமே மேல். விரும்புமவை அனைத்தும் அதற்கு இணை ஆகா."

சாதாரண வேலைத்திறமையுள்ள எவனையும் கேவலமுயற்சியும் தேட்டாண்மையும் பெரும்பாலும் இடம்பொருள் ஏவல்முதலிய சுகசாதனங்களில் தாக்கற்றவனாக்கும். சகடவாளி முதலாகத் தன் பொருள்வளத்தைப் புத்திபூர்வமாய் நிர்வகித்து, வியர்த்தமாய்ப் பொருள்விரயமாகும். சிறு திறவுகளைக் காவல்செய்துவருவானானால், ஸ்வாதீனன் ஆகலாமே. காலுதுட்டுப் பெரிதல்ல, மிகவும் அற்பம், ஆனாலும் அற்பமென்றுசொல்லும் துட்டைச் செல்லும் துறை அறிந்து செலவிட்டுத் துட்டுத்துட்டாக மிச்சம் பிடித்துத் திரவியம் சேர்ப்பதனாலேயே ஆயிரம் பதினாயிரம் குடும்பங்களுக்குச் சுகம் உண்டாகிறது. ஒருவன் மெய்வருந்தி உழைத்துச்சிறுகத்தேடும் திரவியத்தைச் சிறிது சாராயக்கடையிலும் சிறிது

ஒரு துறையிலும் சிறிது மற்றொருதுறையிலும் கைநெகிழ்ந்துபோகவிடுவானானல் — தன் குடித்தனச்சுகம் விலங்குஜாதியைப்போலப் பாடுபடும் ஒருவன் சுகத்திற்கு மேற்பட்டதல்லவென்று காண்பான். ஆனல், துட்டுத்துட்டாகக் கையேறும் பணத்தைப் பத்திரப்படுத்திச் சிறிதை வாரவாரி தேசோபகாரசங்கதியிலாயினும் கஷ்டநிவிர்த்தியுறுநிதியிலாயினும் போட்டு, சிறிதைத் தனரக்ஷாசாலையிற் கட்டி மீந்த பணத்தைக் குடும்பக்ஷேம சம்ரக்ஷணைக்காகவும் பிள்ளைகளைப் பள்ளிக்கு வைப்பதற்காகவும் சூதானமாய் வைத்திருந்து செலவுசெய்ய மனைவி கையில் ஒப்பித்திடுவானானல், அற்பகாரியங்களில் இவ்வாறு சிந்தனையாயிருந்ததனல் தனக்குப் பொருள்வளம் மலிந்து குடும்பசுகம் பெருகி நாளைப் பிழைக்க வகை இல்லையே எனநினைந்துண்டாகும் மனக்கிலேசம் அற்று வாழத்தக்க பிரதிபலன் பெருக உண்டாமெனவிரைவிற் காண்பான். பாடுபடும் ஒருவனுக்கு உயர்பதவி பெறும் ஆசை பெருகி, வெறுந்தனத்திலும் மிகமேலான ஐஸ்வரியமாகிய மனோதைரியம் உண்டாமானல், அவன் தனக்கு உதவுவதுமன்றி, தான் இருக்கும் நாள் எல்லாம் தன் மார்க்கத்தில் பிறருக்கும் பயனுற உதவிபுரிவோன் ஆவான். தொழிற்சாலையில் உழைக்கும் சாமானியனுக்கும் இது சாத்தியமேதவிர அசாத்தியமல்லவென்பதற்கு மான்செஸ்தர் நகரத்து தோமாஸ் ரைட் (Thomas Wright) டின் குறிக்கொள்ளத்தக்க சரித்திரத்தைத் திருஷ்டாந்தமாய் எடுத்துக் காட்டலாம். அவன் வாரச்சம்பளத்திற்கு வார்ப்பிடவேலை செய்துவரும்பொழுது தோஷிகள் பலரைத் திருத்தி நல்வழிப்படுத்த முயன்றதுமன்றி, முயன்ற நற்கருமத்தைச் சிதறாமல் முடித்தான்.

சிறைநீங்கிவரும் தோஷிகள் அப்பால் திருட்டுப்புரட்டின்றி முறைமையாய் முயற்சிசெய்யும் சாதனையை அனுசரிக்க நேரும் தடை இன்னதென்று முதலில் தற்செயலாகத் தோமாஸ் ரைட்டின் சிந்தையில் பட்டது. சிறிதுகாலத்திற்குள்

இவ்விஷயம் அவன் சிந்தையிற் குடிகொண்டது. இக்கெடு தியைப் பரிகரிப்பதே உள்ளநாள் உள்ள மட்டும் அவன் முக்கிய தாற்பரியமாயிருந்தது. காலை ஆறு மணிதொடங்கி மாலை ஆறு மணிவரைக்கும் அவன் வேலைசெய்தும், இடையில் அவனுக்கு ஒழிவுகாலம் இருந்தது; முக்கியமாய் ஞாயிற்றுக்கிழமை — இவ்வொழிவுகாலத்தை அவன் தண்டனைபெற்ற கைதிகளுக்கு உபகாரம்செய்வதிற் போக்கினான். அக்காலத்தில் அவ்வகுப்பார் குறையை நினைப்பவர் இல்லை. தினம் ஒன்றுக்குச் சில நிமிஷமானாலும் சீராய் முயற்சிசெய்தால் எத்தனை எத்தனையோ கருமங்களைச் சாதிக்கலாம்; பாடுபட்டுப் பிழைக்கும் இம்மனுஷன் நினைத்த கருமத்தை நெகிழவிடாமற்செய்து பத்துவருஷகாலத்தில் குறையாமல் தோஷிகள் முந்நூறுபெயரை அவர்கள் பயின்ற துன்மார்க்கத்தினின்று விலக்கி நன்னெறிப்படுத்தினான்! கேட்பவர் இதை எளிதில் நம்பார். அவனை மான்செஸ்தர் நகரத்துத் தோஷிகளின் கர்மப்பிணி போக்கிய வைத்தியனென்று யாவரும் நன்கு மதிக்கும்படி யாயிற்று. குருமுதலிய எவரொவரும் செய்து சிதறிய கருமத்தை தோமாஸ் ரைட் பெரும்பாலும் சாதித்தான். அவன் பொல்லாப்பிள்ளைகளை இவ்வாறு நல்வழிக்கு வருவித்துத் தாய்தந்தையரிடத்திற்கு அனுப்பினான்; அவன் முயற்சியற்றிருக்கச் சம்பவித்தால் பொல்லாப் பிள்ளைகளாகிய புத்திரர் புத்திரிகள் வெகுபெயர் இல்லாப்பிள்ளைகளாய்ப் போய்விடுவார்கள். சிறைநீங்கி வெளிப்பட்ட கைதிகள் வெகுபெயர் பொய் களவு மறந்து அடங்கியிருந்து முயற்சிசெய்துபிழைக்கும்படி அவன் உபாயம் சூழ்ந்து செய்தான். அவன் செய்த கருமம் எவ்விதத்திலும் எளிதல்ல. அதற்குச் சென்றசெலவு ரொக்கமும் காலமும் மனவலியும் புத்தியும், எல்லாவற்றிலும் மேலாக நல்லொழுக்கமும், நல்லொழுக்கத்தால் உண்டாம் ஊர் அபிமானமுமாம். குலம்கெட்டவர்களாகிய இவர்கள் பலருக்கு ரைட் வார்ப்பிடவேலை செய்து பெற்ற அற்பசம்பளத்தைக்கொண்டு உதவிபுரிந்தான். இது

மிகவும் அதிசயம். இவ்வேலை செய்துவரும்பொழுது வருஷவாரி அவன் வரும்பணம் சராசரி 100 - பௌண்ட் காணுது. இதன் ஆதரவாலேயே அவன் இந்த நன்மை எல்லாம் செய்தான். மனுஷர் ஒருவர்க்கொருவர் இரங்குவது கடன். அவன் இறக்குமிஞ்சத் தோஷிகளுக்கு இரங்கக்கடனுளியல்ல. அல்லாதிருந்தும் அவன் அவர்களுக்கு முக்கியமான சகாயம் செய்யவல்லவனானதுமன்றி, தன் குடும்ப சம்ரக்ஷணையும் செய்து, அதனுடன் செல்வைச் சுருக்கியும் புத்தி பூர்வமாய் நாள்கழிந்தும் சிறிதுபணம் மிச்சம்பிடித்து நெருங்கிவரும் தள்ளாத பருவத்திற்கு உதவுமென்று சேர்த்துவைத்தான். பிரதிவாரமும் அவன் தன் வருமானத்தை அந்தந்தச் செலவிற்குப் பதறுமற் சிந்தித்து அளவறிந்து விபாகித்தான்; ஜீவனத்திற்கு இன்றி அமையாத அன்னவஸ்திராதிகளுக்கு இம்மாத்திரம், வீட்டுக் குடிக்கூலிக்கு இம்மாத்திரம், உபாத்தியாயர்சம்பளம் இம்மாத்திரம், ஏழைகளுக்கும் இல்லாதவர்களுக்கும் இம்மாத்திரம் என்று கணக்குப்பிரித்து, பிரித்தவரையறை தவறுமல் நிர்ணயப்படி செய்துவந்தான். இவ்வகைச் சாதனங்களால் இவ்வெளிய தொழிலாளன் தன் பெருங்கருமத்தைச்செய்து நாம் சுருக்கிச்சொல்லிய சித்திகள் பெற்றான். அவன் சரித்திரம் ஒருவனுக்குள்ள நிர்ணயபலத்தையும், கருத்தாகவும் முயற்சியாகவும் பிரயோகிக்கும் சிறிய சாதனங்களின் சக்தியையும், எல்லாவற்றினும் மேலாய் மனவலியும் இடம்பாத நேர்மையுள்ள ஒருவன் ஒழுக்கம் பிறர் ஒழுக்கத்தையும் நடையையும் தன் வசப்படுத்தும் திராணியையும் சிந்தையில் அழுந்தத்தெளிய விளக்கும் அதிசய திருஷ்டாந்தங்களில் ஒன்றென்பது மெய்யே.

நிலத்தைப் பயிரிடுவதிலானாலும், தொழிற்கருவி செய்வதிலானாலும், கடையில் விலைபொருள் விற்பதிலானாலும் முறைமையான முயற்சித்துறை அனைத்திலும் கௌரவமே தவிர நிந்தை ஒன்றும் இல்லை. வாலிபனானவன் அளவுகோல் கையாடினாலும் கையாடலாம், நாடா அளந்தாலும் அளக்கலாம்;

இப்படிச் செய்வது மானபங்கமல்ல. ஆனால் அளவுகோலைப் போல அவன் தன் மனதைக் குறுகி நாடாவைப்போல் ஒடுங்க விடுவானானால் அது அவனுக்கு நிந்தையாம். "முறைமையானதொழில் உள்ளவர்கள் அல்ல, இல்லாதவர்கள் நாணக்கடவர்கள்" - புல்லர். "சரீரவிர்த்தியானாலும் சரி மனோவிர்த்தியானாலும் சரி, சர்வவிர்த்தியின் கதியும் மதுரமாம்". ஹால் அத்தியக்ஷர். எளிய தொழில் செய்து உயர்ந்தவர்கள் தாம் எதிர்நின்று மேற்கொண்ட இடர்களை நினைந்து நாணவேண்டுவதில்லை, நெஞ்சம் பூரிக்கவேண்டும். அமெரிக்க பிரஜாதிபதி ஒருவரைத் தமது குலவிருது சித்திரித்த கவசம் என்னவென்று எவரோ கேட்க, அவர் வாலிபத்தில் மரம் தறித்துப் பிழைத்ததை நினைவுகூர்ந்து "மார்ச்சட்டைக்கையுறை ஒருஜதை" என்று உத்தரம் சொன்னார். நிஸ்பீவின் அத்தியக்ஷராகிய ப்லெச்சர் இளைஞராயிருக்கையில் மெழுகுவர்த்தி செய்து விற்றுப் பிழைத்தவர். ஒருநாள் பிரான்சிய வைத்தியர் ஒருவர் இந்த வழிச்சொல்லி அவரை இகழ்ந்தார். அதுகேட்டு அவ்வத்தியக்ஷர் "என்னைப்போல நீர் எளியோனாகப் பிறந்ததுண்டானால் இன்றளவும் மெழுகுவர்த்தி செய்து விற்றுக்கொண்டுதான் வருவீர்" என்று உத்தரம் சொன்னார்.

தனம் சேர்க்கும் தாற்பரியத்திலும் மேலான தாற்பரியம் ஏதுமின்றித் திரவியம் தேடும் மனோற்சாகத்தைப் பார்க்கிலும் சாதாரணமானது ஒன்றும் இல்லை. உடலும் உயிரும் ஒத்து இந்த முயற்சியைச் சிரத்தையாய்ச் செய்துவருபவன் செல்வனாகாமற்போவது அரிது. இதற்குப் புத்தியால் ஆகும் உதவி இல்லை: தேடும்பணத்திற் குறையச் செலவிடு; இனியோடு இனிசேர்; பணத்தைச் சிக்கெனத்தேடிக் காப்பாற்று; இப்படிச் செய்வாயானால் பொன்மலை வரவர உயரும். பரீஸ்நகர வர்த்தகனாகிய அஸ்தர்வாலட் ஆதியில் வறிஞன். அவன் அன்றன்று சாயரக்ஷை ஒரு சாராயக்கடைக்குப் போய் ஒரு பைண்ட் பீர் குடிப்பான். அவனுக்கு இராத்திரிக்கு ஆகாரம் அதுதான். பீருக்குப் போயிருக்கும்பொழுது கைக்கு எட்டும்

கார்க்கு குச்சு எல்லாவற்றையும் எடுத்து அங்கியுறைக்குள் வைத்துக்கொள்வான். இந்தப்பிரகாரம் அவன் எட்டுவருஷம் கார்க் எடுத்துவைத்திருந்து விற்றுத்தேறின பணம் எட்டு ஞாயிடாலர். அவன் தேடிய தனத்திற்கு அஸ்திவாரமாக இட்ட முதல் அதே——பெரும்பாலும் அவனுக்குப் பணம் சேர்ந்தது சில்லறைவியாபாரத்தால்; சாங்காலத்தில் அவன் வைத்த திரவியம் முன்பின் முப்ப துலக்ஷம் ப்ராங்கு. பணம் தேடும் முயற்சியில் இவ்வகை நிர்ணயத்தால் விளையும் சித்திக்கு மனதிற்படத்தக்க திருஷ்டாந்தம் ஒன்று ஜான் பாஸ்தர் எடுத்துக்காட்டியிருக்கிறார். வாலிபன் ஒருவன் தன் பிதிரார்ஜிதத்தை எல்லாம் போக்கிரித்தனமாய்ப் பாழில் இறைத்து அழித்து அறுதியில் திக்கற்றவனாகித் துன்புற்றான். அவன் தன்னை மாய்த்துக்கொள்ள நினைந்து வீட்டை விட்டு வெளிப்பட்டு ஒரு மேட்டிற்போய்த் தரித்துநின்றான். அம்மேட்டில் நின்றுபார்க்க, முன் அவனுக்கு உள்ள பூஸ்திதிகள் நன்றாய்த் தெரிந்தன. அவன் அங்கு உட்கார்ந்து சிறிதுவேளை சிந்தனைசெய்து, அந்தப்பூஸ்திதியைத் திரும்பவும் கைவசமாக்கிக்கொள்ளச் சங்கற்பித்து எழுந்தான். எழுந்து திரும்பி வீதியிற் போம்பொழுது ஒரு வீட்டுக்கு எதிரில் வீதித் தளத்தில் ஒரு வண்டி நிலக்கரி கொட்டியிருக்கக் கண்டு, அதைக் கூலிக்கு உள்ளே எடுத்துக்கொண்டுபோய்ச் சேர்க்க அமர்ந்தான். அவ்வேலை செய்து அவன் பெற்ற கூலி ஐந்தாறு பென்ஸ். அதனுடன் சிறிது ஆகாரமும் உபகாரமாய்க் கேட்டு வாங்கிப் புசித்தான். புசித்துக் கூலிப்பணத்தை வைத்திருந்தான். இப்படிக் கூலிக்குச் சுமந்து சுமந்து சிறிது பணம் சேர்த்தபின் விலை அறிந்து சில மாடு வாங்கி லாபத்திற்கு விற்றான். இப்படி முதலில் அற்பவியாபாரம்செய்து பணம் சேரச்சேரப் பெருவியாபாரத்தில் இறங்கித் தனிகனானான். கடைசியில் முன்உள்ள பூஸ்திதியும் வேறு ஸ்திதியும் தேடி முதிர்ந்தலோபியாகி இறந்தான். பிரேதம் க்ஷேமிக்கப்பட்டபின் வெறும் மண்ணுடம்பு மண்ணோடு சேர்ந்தது. இத்

தலோபிக்கு உதாரமதி இருந்ததுண்டானால் இவன் செய்த சங்கற்பம் இவனைத் தன்னைப்போலப் பிறர்க்கும் உபகாரியாக வல்லவனாக்கினாலும் ஆக்குமே. ஆனால் இவன் இருப்பு இறப்பு இரண்டும் இழிவாய்ப்போயின.

பிறருக்கும் விருத்ததசையில் எவரையும் சாராமற் சுகித்திருக்க நமக்கும் பொருள் தேடி வைப்பது நமக்குக் கௌரவம். அது உத்தமமென்று மிகவும் மெச்சத்தகும்; ஆனால், வெறுமுகாந்தரமின்றிச் செல்வனாகும் ஆசையால் திரவியம் சேர்ப்பது அற்பமனமும் லோபகுணமுமுள்ளவர்கள் பண்பு. புத்தியுள்ளவன் விபரீதமாய்ப் பணம்சேர்க்கும் வழக்கத்தை முதிரவிடாமல் தடுக்கும்பொருட்டே மிகவும் அவதானமாய்த் தன்னைத்தான் காத்துக்கொள்ளவேண்டும்: அல்லாவிடில், வாலிபத்தில் கேவலம் காரியபாகமாயிருந்தது விருத்தாப்பியத்தில் லோபகுணமாய் முதிரினும் முதிரும்; முன்பு செய்கடனாயிருந்தது பின்பு தீங்கானாலும் ஆகும். "தீங்கிற்கு மூலம்" பணஆசையேதவிரப் பணம் அல்ல. பணஆசை மனதை ஒடுக்கிச் சுருக்கி உபகாரகுணத்திற்கும் கிரியைக்கும் இடவு இல்லாதிருக்கும்படி அடைத்துப்போடும். ஆனது பற்றியே ஸ்ரீ வால்த்தர் ஸ்காட் இயற்றிய நாடகம் ஒன்றில் ஒருவன் "உருவிய கத்தியால் மாய்ந்ததேகத்திலும் பணத்தால் மடிந்த ஆத்மாக்கள் அநேகம்" எனமொழிவதாக எழுதுகிறார். ஒருவன் தன் சுகத்திற்காகமாத்திரம் செய்யும் வேலை அவனை இயக்கியவண்ணம் இயங்கும் யந்திரத்திற்கு ஒப்பாக்கும். இது அவ்வகை வேலையின் குறைகுற்றங்களில் ஒன்று. வேலைக்காரன் வண்டிச்சக்கரத்தைப்போல எப்பொழுதும் நடத்திச் செல்வான். அதற்கு அப்பால் அவன் பெரும்பாலும் பாரான். அவன் தன் சுகத்தைமாத்திரம் நாடியிருப்பானானால், தன் சுகத்திற்கு உதவும் அளவன்றி அதற்கு மிஞ்சி இதரமனுஷரை நினையான். இவ்வகை மனுஷர் எழுதிவைத்திருக்கும் கணக்குப்புஸ்தகத்தில் எதாயினும் ஒரு ஏட்டை எடுத்துப்பார்வையிடுவாயானால், அதில் அவர்கள் சரித்திரத்தைக் காண்பாய்.

தனசம்பத்தைக்கொண்டு அளவிடமிடத்தில் லௌகிகசித்தி எவரையும் மயக்கத்தக்கதென்பதற்குச் சந்தேகம் இல்லை; லௌகிகசித்தியைச் சிறு மனுஷரும் எறத்தாழ வியந்து நயந்துகொள்வது இயற்கை. ஆனால், சலியாமுயற்சியையும் புத்திக்கூர்மையையும் கைச்சமர்த்தையும் துணிவையும் சாதகம் பண்ணிச் சமயங்கண்டு கருமமுடிக்க எப்பொழுதும் ஜாக்கிரதையாயிருக்கும் மனுஷர் பூலோகத்தில் விர்த்தியடைந்தாலும் அடைவார் – விர்த்தியடைந்தேவருகிறார். அடைந்தும், உயர்ந்த ஒழுக்கம் அவர்களுக்குச் சிறிதும் இல்லாமலும் சுத்த சகுணம் அனுவத்தனையும் இல்லாமலும் இருக்கக்கூடும். பணம் தேடும் வித்தைக்கு உயர்ந்த வித்தை ஒன்றையும் நினையாதவன் திரவியவானானாலும் ஆவான், ஆயும் அக்காலம் எல்லாம் அவன் மிகு வறிஞனாகவே இருப்பான். ஏனெனில் செல்வப்பொருள் ஒருவன் சற்பாத்திரத்திற்குச் சாட்சியேயல்ல. மின்மினிப்பூச்சியின் ஒளியில் அதன் புழுவடிவு வெளிவருவதுபோல, செல்வத்தின் பளபளப்பால் செல்வனுடைய தகைமையின்மை பெரும்பாலும் தோன்றும். அதன் பயன் மற்றொன்றும் இல்லை.

அனேகர் திரவிய ஆசைக்கு அடிமைகளாக மனம் பொருந்தி இடங்கொடுக்கும் வகை மனுஷர் உருவிற்கு நிந்தையாய் உருவெடுத்த குரங்கின் ஆசைப்பெருக்கத்தை நினைப்பூட்டுகின்றது. அல்ஜியர்ஸ் நகரத்தில் கபீல் கிருஷிகர் சுரைக்காயில் குரங்கின் கை நுழையத்தக்க துவாரம் அறுத்து அதற்குள் அரிசி சிறிது போட்டு அச்சுரைக்காயை ஒருமரத்தில் அசையாது பொறுத்திருக்கவைத்துக்கட்டுவார்கள். இராத்திரிகாலத்தில் குரங்கு அம்மரம் ஏறித் துவாரத்திற் கையிட்டு அரிசியை எடுத்துக் கையை இழுக்கப்பார்க்கும். கையோ மாட்டிக்கொள்ளும். அதை உபாயமாய் இழுக்கக் குரங்குக்குப் புத்தி இல்லையே. ஆகவே நாடியபொருள் கைக்குள் சிக்கியும் தப்ப வகையற்ற பேதைக்குரங்கைக் பொழுதுவிடியுக்தனையும் மரத்தில் நின்று அவதிப்படவிட்டுக் கிருஷிகர் போய்

அகப்படுத்திக்கொள்வார்கள். இச் சிறு கதையால் அறியக்கூடிய புத்தி மனுஷருக்கு வியகாரத்தில் விஸ்தாரம் பிரவர்த்திக்கத்தக்கது.

முழுக்கூறாய்ப் பார்க்குமிடத்தில் திரவியசக்தி அளவிற்கு அதிகம் மதிப்பிடப்படுகின்றது. தேச க்ஷேமத்திற்காகச் செய்திருக்கின்ற பெரிய காரியங்கள் செல்வவரால் அல்ல, பலர் கூடி மெய்யெழுதிக் கொடுத்ததனாலுமல்ல, பெரும்பாலும் சிறுகத் திரவியபலமுள்ள மனுஷராலேயே சாதிக்கப்பட்டன. இங்கிலாந்துமநம் பூலோகத்தில் பாதிக்குமிருக்கா அபிவிருத்தி செய்யப்பட்டது வறிஞரில் வறிஞராகிய மனுஷரால்; புத்திசக்தியில் மிகுந்தவர்கள், மறைபொருளைக் கண்டு வெளியிட்டவர்கள், நூதன வித்தைகளை உபாயம் சூழ்ந்தறிந்தவர்கள், வித்துவர்கள் எல்லாரும் மிகு திரவியமுள்ளவர்களே. அவர்களில் பலர் தாரதம்மியம் சொல்லில், கைப்பாடுபட்டுப் பிழைப்பவர்களிலும் உயர்ந்த ஸ்திதியில் உள்ளவர்களல்ல. எப்பொழுதும் இப்படித்தான் இருக்கும். ஐஸ்வரியம் பெரும்பாலும் முயற்சிக்குத் தூண்டுகோலாகவல்ல, தடையாயிருக்கிறது, செல்வத்தால் சுகம் உண்டாவதுபோலப் பலருக்குத் துக்கமும் உண்டாகின்றது. பெற்றோரால் திரவியம் சுதந்தரிக்கும் வாலிபனுக்குத் தன்முயற்சி அற்பமும் இல்லாமலே சகல போகமும் உண்டாம்; அவனுக்கு விரைவில் போகம் தெவிட்டிவிடும்; ஆசைகூற அவனுக்கு இல்லாதது ஒன்றும் இல்லையே. வருந்தி மல்லாட விசேஷமுகாந்தரம் ஒன்றும் இல்லாததனால் அவனுக்குப் பொழுதுபோகாமல் சுமைபோலப் பொறுக்கும்; லோகாசாரம் மதாசாரம் இருவித ஆசாரத்திலும் அவன் தூங்குகிறான்; ஜனசங்கத்தில் அவன் நிலை பெரும்பாலும் பெருக்குகீறில் மிதக்கும் பலகால்மச்சத்தின் நிலைக்கு உயர்ந்ததல்ல.

"காலம் கொல்வதொன்றே அவன் வேலை, அது பயங்கரமான வேலை, அலுப்பு உண்டாகும் துன்பம்"

ஆனாலும், தகுதியான சிந்தையால் ஏவப்படும் தனவான் ஆண்டகைமைக்கு அயோக்கியமென்று சோம்பலை வெறுப்பா

ன்; அன்றியும் திரவியமும் சொத்துமுடையவர்களைச் சேரும் பாரம்பழிகளை நினைப்பானானால் தனக்குத் தாழ்ந்த நிலையில் இருப்பவர்களிலும் தான் அதிகம் உழைப்பது கடனென்று உணர்வான். ஆனாலும் எவ்விதத்திலும் உலகவிவகாரம் இதல்லவென்று ஒப்புக்கொள்ளவேண்டும். "எனக்கு வறுமையையாவது செல்வத்தையாவது கொடாதிரும்; எனக்கு ஏற்கும் உண்டி கொடுத்து என்னைப் போஷித்தருளும்". ஆகர் என்பவன் செய்த பூரணவின்னப்பத்தில் விளங்கிய பொன்போலும் மத்தியமஸ்திதி இது. நாம்மாத்திரம் இதை அறிவோமானால் எவற்றிலும் உத்தமபதவி இதே. பார்லிமெந்து சபையின் ஓர் அவயவமாயிருந்து காலஞ்சென்றுபோன ஜோஸெப் ப்ராதர்ட்டன் மான்செஸ்தரில் பீல் உத்தியானத்தில் தமது கோரியில் வரையும்படி சிறந்த வாக்கியம் ஒன்றைக் குறித்தார். அவ்வாக்கியம் இது:—"உடைமைமிகை அல்ல, வறுமைக்குறையே என் செல்வம்." இம்மொழி அவர் விஷயத்தில் அணுவும் பிசகின்றி உண்மையாயிருந்தது. அவர் ஆதியில் சவுளி நெசவுச்சாலையில் தொழில் பயின்றவர். அந்தத் தாழ்வில் தாழ்வான ஸ்திதியிலிருந்து தேசோபகாரியாகத்தக்க உன்னதஸ்திதிக்கு அவர் உயர்ந்தது அற்புதமாகவல்ல, சாதாரணமான நேர்மை, தொழில்முயற்சி, காலநிஷ்டை, அகப்பற்றுநீக்கல் எனும் இவைகளைச் சாதித்தே. சாங்காலமனைவும் பார்லிமெந்து சபைக்குப் போகாதிருக்கும்பொழுது மான்செஸ்தரில் ஒரு சிறு தேவாலயத்தில் அவர் பிரசங்கம் செய்து வருவார். அவர் தெய்வம் தொழும் ஆலயம் அதே, "மனுஷராற் காணப்படுவதல்ல," அவர்கள் தம்மைப் புகழ்வதல்ல, மிகவும் சிறிய எளிய கடமைகள் முதலாக அன்றன்று செய்தற்குரிய கடமை அனைத்தையும் கபடமின்றி நேர்மையாய் உண்மையாய் உள்ளன்போடு நெஞ்சறிய நிறைவேற்றுவதே அவர் நாடிய மகிமையென்று எல்லாவற்றிலும் அவரோடு ஊடாடியவர்களுக்குத் தோன்றும்படி நடந்தார்.

"கன்னியம்" என்பது உத்தம அர்த்தத்தில் நன்று. கன்னியபுருஷன் எண்ணத்தக்க யோக்கியதையுள்ளவன், திரும்பிப் பார்க்கத் தகுதியானவனென்று அதற்கு அர்த்தமாகிறது. ஆனால் காண்பார்க்குச் சம்பிரமமாய்த் தோன்ற வாழும் கன்னியம் இருக்கின்றதே-அது எந்த அர்த்தத்திலும் திரும்பிப்பார்க்கத் தக்கதல்ல. குணவானாகிய தரித்திரன் குணங்கெட்ட தனிகனைப்பார்க்கிலும் மிகவும் உத்தமன், அதிக கன்னியபாத்திரன். நாகரிகம் பூண்டு வஸ்திரபூஷணாதிகள் தரித்து வாகனம் ஏறும் சூதனிலும் தாழ்மையும் அடக்கமுமுள்ள சாமானியன் வாசி. ஒருவன் நிலைமை யாதாயிருப்பினும் நிறை குன்றாத கல்விப்பொருள் வைப்பு உள்ளமனமும் லோகோபகாரமான அபிப்பிராயம் நிறைந்த ஒழுக்கமும் சாதாரண லௌகிக கன்னியத்தைப்பார்க்கிலும் மிகவும் மேலானவைகளே. மனுக்குலத்திற்குப் பாங்கான நெறியில் நின்று பயின்று கூடுமளவிற்கு சரீரத்தையும் மனத்தையும்—மனத்தையும் ஜீவசாட்சியையும் இதயத்தையும் ஆத்மாவையும் தேற்றித்தெளிவித்து விர்த்திசெய்வதே இப்பிறவியின் உன்னத தாற்பரியமாம். இதுவே கருமம்: மற்றெல்லாம் இக்கருமம் முடிக்கும் சாதனமென்று எண்ணவேண்டும். ஆகவே, ஒருவன் மிகுந்த இன்பமும், மிகுந்த தனமும், மிகுந்த பலமும், உன்னத பதமும், மிகுந்த கனமும் கீர்த்தியும் பெற்று வாழும் வாழ்வல்ல, மிக்க ஆண்மை பெற்று பிறர்க்கு உதவும் மிக்க உபகாரமும் செய்கடமையும் செய்து வாழும் வாழ்வே மிகவும் அனுகூலமான வாழ்வு. பணம் தன் நிலையில் பலம் என்பது மெய்; ஆனால் அறிவு, தேசோபகாரம், சன்மார்க்கம் இவைகளும் பலந்தான், மிகவும் மேலான பலம். கல்லிங்வூட் பிரபு (Lord Collingwood) இஷ்டர் ஒருவருக்கு எழுதிய கடிதத்தில், "மற்றவர்கள் தர்மச்சம்பளம் வாதிட்டுக் கேட்கட்டும். நானோ, வறுமை எனும் அனைத்தையும் கீழ்ப்படுத்த வகைபார்த்துப் பணமின்றிச் செல்வனாக மாட்டேன். எனது சுகத்தைப் பாராட்டி என் தேசத்திற்குச் செய்யும்

உபகாரங்களை மறப்படுத்தாவண்ணம் புத்தியாயிருப்பேன். ஸ்காட் * கிழவனும் நானும் முன்னிலும் அதிக செலவின்றிக் கோவிஸ் கிளைத்தோட்டம் செய்து வரமாட்டோம்" என்று எழுதினார். மற்றொரு சமயத்தில் அவர் "நான் அதது செய்வதற்கு முகாந்தரம் உண்டு. அம்முகாந்தரங்களை இப்படி நூறு பென்ஷன் கொடுத்தாலும் விடேன்" என மொழிந்தார்.

திரவியம் சம்பாதித்திருந்தால் சிலர் "பெரியோர் சபையிற் சேர" வல்லவராவாரென்பது மெய்தான். ஆனால் அச்சபையில் மதிப்பு உண்டாவதற்கு அவர்களுக்குக் கல்வியோக்கியதை, சுசீலம், தயை, தாக்ஷிண்யமுதலிய உத்தமகுணங்கள் இருக்கவேண்டும். இல்லாவிடில், அவர்கள் ஐஸ்பரியவான்களாயிருப்பதொன்றொழிய அவர்களில் மற்றொரு விசேஷமுமில்லை. குபேர தனமுள்ளவர்கள் சிலர் இப்பொழுது பெரிய மனுஷர் சபையில் இருக்கிறார்கள். இருந்தும், அவர்களை எண்ணுவாரும் இல்லை, மதிப்பாரும் இல்லை. ஏன்? அவர்கள் பணப்பைகளே தவிர வேறு விசேஷம் ஒன்றும் இல்லை. அவர்கள் பலம் ரொக்கப்பெட்டி அம்மாத்திரந்தான். நால்வர் கூடும் சபையில் குறிக்கொள்ளத்தக்கவர்கள்—ஜனமதத்திற்கு வழிகாட்டி ஆளுகிறவர்கள்—செய்கருமத்தில் சித்தியடைந்து தமக்கும் பிறர்க்கும் உபகாரிகளாவோர் ஆவசியகமாய்த் திரவியம் மிக்கோர் அல்ல, களங்கமற்ற நெறியுடையோர், சிட்சையின்றா பண்பட்ட அனுபவசாலிகள்,

* ஸ்காட் கிழவன் அவர் தோட்டக்காரன். கல்விங் ஆட் பிரபுவின் மனதிற்கு இதமான காலக்ஷேபம் தோட்ட வேலை. திரபல்கார் யுத்தம் முடிந்து சிறிது நேரத்திற்குள் அவரைப்போல அட்மிரல் பதவியில் உள்ள அதிகாரி ஒருவர் அவரைக் காணப்போய்த் தோட்டம் எங்கும் சுற்றிப் பார்த்துத் திரிந்து கடைசில் ஒரு ஆழ்ந்த கிடங்கின் அடியில் இறங்கிநின்று அவரும் ஸ்காட்டும் மிகுமுயற்சியாய்த் தோண்டிக்கொண்டிருக்கக் கண்டார்.

சற்குணத்திற் சிறந்துயர்ந்தோர். தோமாஸ் ரைட்டைப் போல வறிஞனும் தனக்குள்ள பூலோகச்செல்வம் பூச்சியமாயிருப்பினும் உண்பட்டவனாயிருந்து, காலத்தை வீணிற் சிதைக்காமல் நற்செய்கைகளிற் போக்கி, தன்னால் இயன்றமட்டும் ஏற்குமாறு உள்ளநாள் உள்ளளவும் நல்வழியில் நிற்பானாகில், மற்றொரு விசேஷமுமின்றி உலகத்தில் விர்த்தி அடைந்து பையையாகக் குவித்த பணமும் பூஸ்திதியுமுள்ள மனுஷனை அற்பமும் பொறாமையின்றிச் சிறக்கணிக்க மாட்டுவான்.

௧௧-ம். அதிகாரம்.

தன்னைத்தான் பண்படுத்தல்.

“பிரதி மனுஷனுக்கும் இருவிதக் கல்விப்பயிற்சி உண்டு, ஒன்று பிறர் கற்பிக்கத் தான் கற்றுக்கொள்வது, அதினிலும் முக்கியமான மற்றொன்று தனக்குத்தானே கற்பிப்பது” கிப்பன் (Gibbon.)

“இடர் எய்தும்பொழுது இதயம் குன்றி, புயலுக்குத் துவண்டு வணங்குவான் உண்டா? அவன் ஒன்றும் சாதிக்கமாட்டான். சத்துருஜயம் செய்யச் சங்கற்பித்திருப்பவன் உண்டா? அப்பெயர்ப்பட்டவன் செய்யும் கருமம் ஒருபொழுதும் சிதறாது”—ஜான் ஹண்டர் (John Huuter.)

“புத்தியும் பிரவிர்த்தியுமுள்ளவர்கள் தமக்கு நேரிடும் அருந்தடைகளைக் கண்டு துணிவு குன்றாமல் எதிர்நின்று அடியறத் தொலைவித்துக் காரியஜயம் பெறுவார்கள். கஷ்டத்தையும் விக்கினத்தையும் கண்டவுடன் சுத்த மதிகேடும் சோம்பும் நடுங்கி ஒடுங்கித் தமக்கு அச்சம் தரும் அசாத்தியத்தைத் தாமே உண்டாக்கிக்கொள்ளுகின்றன” ரோ (Rowe.)

"பிரதி மனுஷனும் கற்கும் கல்வியில் உத்தமபாகம் தனக்குத் தான் கற்பிக்கும் கல்வியே" என ஸ்ரீ உவால்த்தர் ஸ்காட் மொழிந்த இம்மொழியை காலஞ்சென்ற ஸ்ரீ பெஞ்ஜமின் ப்ருடி நினைந்து இன்புற்று, தமது தொழிலை உபாத்தியாயரின்றித் தாமே கற்றுக்கொண்ட சந்தோஷத்தைப்பற்றித் தம்மைத்தாம் வாழ்த்துவார். ஆனால் இலக்கணவிலக்கியங்களிலானாலும், சாஸ்திரங்களிலானாலும், வித்தைகளிலானாலும் பிரபலரான மனுஷர் எல்லாரும் இவ்வண்ணம் தமக்குத் தாம் கற்பித்தவர்களே தவிர மற்றப்படி அல்ல. கருவிநூற்பாடசாலைகளிலும் உயர்ந்த கல்விச்சாலைகளிலும் கற்ற கல்வி ஆகக் கூடிக் கல்வியின் ஆரம்பமே. பிரதானமாய் அது மனத்தைப் பண்படுத்தி இடையறாது எப்பொழுதும் கருத்துக் கூர்ந்து கல்விகற்க வழக்கப்படுத்துவதனால் அருங்கல்விதான். பிறர் நமக்குள் செலுத்துவது எப்பொழுதும் நமக்கு இரவற்சொத்து, நாமே ஜாக்கிரதைபூண்டு சலிப்பறமுயன்று சம்பாதிக்கும் சொத்தோ நமது சொத்து. வருந்தி உழைத்து வசப்படுத்தும் அறிவு நமது உடைமை ஆகும்—முழுதும் நமது சொந்தச் சொத்தாகும். அது அதிகமாய்த் துலங்கிச் சிலையில் எழுத்துப்போல் எந்நாளும் இதயத்திற் பதிந்திருக்கும்; இவ்வாறு சம்பாதித்த கல்விப்பொருள் மனம் எனும் சாசனத்தில் நிலைபெறப் பதிவுசெய்யப்படும். பிறர் புகட்டிய கல்வி ஒருபொழுதும் இப்படி ஆகாது. இவ்வகையாய்த் தன்னைத்தான் பண்படுத்தல் பலத்தை வருவித்துச் சௌரியத்தைப் பெருக்கும். ஒரு பிரசினையை விலயனம் செய்ய, அப்பால் அதன் உதவியால் மற்றொன்றை எளிதில் நிர்வகிக்கத்தக்க வல்லமை உண்டாம்; இவ்வண்ணம் கல்வியறிவு அந்தக்கரணசக்தி ஆகும். நாமே பிரவர்த்தியோடு செய்யும் முயற்சிதான் முக்கியம்; எவ்விதச் சகாயமும், எந்தெந்த நூலும், உபாத்தியாயரும், முகபாடம்செய்த எத்தனை பாடமும் இருந்தாலும் நாம் ஒருபொழுதும் அம்முயற்சியை வேண்டுவதில்லையென்று விட்டுவிடவல்லவராவதில்லை.

தன்னைத்தான் பண்படுத்துவதும், தனது அந்தக்கரணங்களைப் பிரவர்த்தியோடு சாதனைசெய்து கல்விப்பொருள் சம்பாதிக்க வித்தியார்த்தியை உற்சாகப்படுத்துவதும் ஆவசியகமென்று உத்தமதரத்து உபாத்தியாயர்கள் மற்றெவரினும் அதிக விரைவில் ஒப்புக்கொண்டார்கள். வாயாற்சொல்லி உணர்த்துவதிலும் மனதைப் பண்படுத்துவது வாசியென்று உறுதியாய் நம்பி, அவர்கள் தாம் செய்யும் தொழிலில் தம்மாணுக்கரையே வருந்தி உழைப்பவர்களாக்கப் பார்த்தார்கள்; இவ்வண்ணம், அவர்கள் கல்விகற்பிக்கும் தொழிலைச் சிறிதுசிறிதாகப் புகட்டும் அறிவை மாணுக்கர் தாம் ஒருமுயற்சியும் செய்யாதிருந்து உட்கொள்வதைக்காட்டிலும் அதிகம் உயர்ந்த தொழில் ஆக்கினார்கள். பெருந்தகைமையுள்ள ஆர்னல்ட் பண்டிதர் இந்தத் தாற்பரியத்தைச் சிந்தையில் இருத்தியே உழைத்தார்; தாம் மற்றொன்றும் செய்யாமல் மாணுக்கருக்கு வழிகாட்டி, பக்குவம்சொல்லி, உற்சாகம்கொளுத்தி, அவர்களைத் தேற்ற, அவர்கள் தங்களைச்சார்ந்து, தாங்கள் செய்யும் முயற்சியினாலேயே தங்கள் அந்தக்கரணசக்தியை விர்த்தி செய்யும்படி அவர் அவர்களுக்கு வருந்தி உணர்த்தினார். "சிறுவன் ஒருவனைக் கிட்டியசமயத்தில் தருமுயற்சிசெய்து பயன்பெறும் ஆசை சிந்தையில் சிறிதுமின்றிச் சுகித்துவாழ அக்ஸ்போர்ட்டுக்கு அனுப்புவதிலும், அன்றன்று ஆகாரத்திற்கு வருந்தி உழைக்க வன்டீமன்ஸ் லாண்டுக்கு அனுப்புவது மெத்தவும் உத்தமமென்று எண்ணுகிறேன்" என்று அவர் மொழிந்தார். பின்னொரு சமயத்தில் அவர் "மெய்யாய் வியந்துகொள்ளத் தகும் ஒன்று இப்பூவுலகில் உண்டானால், அது புத்திசக்தி இயற்கைவிவேகம் குன்றியவர்கள் மனநேர்மையாய் உண்மையாய் சிரத்தையாய்த் தங்கள் புத்தியைப் பண்படுத்திவரும்பொழுது அவர்களைப் பண்டிதராக்கியருளும் தெய்வஞானத்தைக் காண்பதே" என உரைத்தார். இக்குறியுள்ள வித்தியார்த்தி ஒருவனைச்சுட்டிப் பேசும்பொழுது அவர் "குல்லாவும் கையுமாய்நின்று அவனைக்குறித்து உறுதிமொழி சொல்

வேன்" என மொழிந்தார் ஒரு சமயத்தில் லேல்ஹாமில் சற்று மந்தபுத்தியுள்ள சிறுவன் ஒருவனுக்குக் கற்பிக்கும்பொழுது, ஆர்னல்ட்பண்டிதர் சற்று உறைக்கப்பேசினார். சிறுவனுக்கு அது பொறுக்கவில்லை. அவன் அவர் முகத்தை ஏறிட்டுப்பார்த்து "ஏன் ஐயா கடுத்துப்பேசுகிறீர்கள்? இது சத்தியம், என்னால் ஆனமட்டும் பாடம் படித்துவருகிறேன்" என்றான். அதற்குப்பின் வெகுவருஷகாலமாய் ஆர்னல்ட் இக்கதையைத் தம் பிள்ளைகளுக்குச் சொல்லிவருவார். கதையோடுகதையாக, அவர் "என் ஆயுசுகாலத்தில் ஒன்றும் ஒருபொழுதும் என் மனத்தை அவ்வளவு தாக்கவில்லை" என்றுசொன்னார்.

தாழ்ந்த ஸ்திதியில் இருந்து சாஸ்திரக்கியானத்திலும் இலக்கணவிலக்கியப் பயிற்சியிலும் முதிர்ந்துயர்ந்தவர்களென்று மேலே எடுத்துக் காட்டிய பல திர்ஷ்டாந்தங்களால் தேகசிரமம் உன்னத மனோவிர்த்திக்கு ஒரு விதத்திலும் ஒவ்வாதிருக்கவில்லையென்று வெளிப்படையாய்த் தோன்றும். மிதஉழைப்பு சௌக்கியத்திற்கு அனுகூலமும் நரதேக உறுதிக்கு இணக்கமுமாயிருக்கின்றது. கல்வி மனத்தைப் பண்படுத்துவதுபோல உழைப்பு தேகத்தைப் பண்படுத்தும்; ஒவ்வொருவனுக்கும் அவகாசமான வேளையிற் செய்ய ஏதாயினும் ஒருவேலையும், ஒவ்வொருவனும் வேலைசெய்யச் சிறிது அவகாசமும் இருப்பதே எந்தெந்தத் தேசத்தார்க்கும் உத்தம நிலையாம். வேலையின்றி எப்பொழுதும் அவகாசமுள்ளவர்களும் சிறுபான்மை அலுப்புத் தவிர்க்கும் உபாயமாகவும், பெரும்பாலும் அடக்க முடியாத ஜன்ம இயற்கைக்கு இதஞ்செய்யும் பொருட்டாகவும் ஒருவாறு அமஞ்சிக்கு வேலை செய்வார்கள். சிலர் இங்கிலாந்தில் நாட்டகத்தில் நரிவேட்டையாடப்போவார், சிலர் ஸ்கொத்திலாந்தில் மலைகாட்டில் காட்டுக்கோழி வேட்டைக்குப் போவார், பலர் வேனிற்காலந்தோறும் ஊர் உலாவித்திரிந்து ஸ்வித்ஸர்லாந்தில் மலையேறப் போவார். ஆனதுபற்றியே தேச பாடசாலைகளில் சிற்றோடம் செலுத்தல், ஓடல், பந்தடித்தல்,

மல்லாடல் எனும் விளையாட்டுகள் ஏற்பட்டிருக்கின்றன. அவைகளில் கல்விகற்கும் வாலிபர்கள் சூழ்ந்தும் அப்பொழுதே இத்தனை சௌக்கிய வளமாய்த் தேகபலத்தையும் மனோபலத்தையும் விருத்திசெய்துவருகிறார்கள். உவெலிங்டன் ட்யூக் பிரபு இளமையில் தமது காலம் மிகுதியாய்க் கழிந்த ஈத்தன் வித்தியாசாலையைச் சார்ந்த விளையாட்டுத் தரையில் ஒருநாள் பிள்ளைகள் வெவ்வேறு ஆட்டம் ஆடிக்கொண்டிருந்ததைப் பார்த்து, "உவாட்டர்லூ சண்டை ஜெயித்தது இங்கேதான்" என்று சொன்னார்.

தானியேல் மால்த்தஸ் (Daniel Malthus) என்பவர் தம் மகன் வித்தியாசாலையில் இருக்கும்பொழுது அறிவை விருத்தி செய்வதில் மிகவும் ஜாக்கிரதையாயிருக்கும்படி அவனைத் தூண்டினார். அன்றியும் தேகத்திற்கு வலிமை தரத்தக்க விளையாட்டுகள், மனதின் உழைப்புத்திறத்தை நன்றாக நிலைநிறுத்திக்கொள்ளவும், கல்வியின்பத்தை அனுபவிக்கவும் உத்தம சாதனமென்றுசொல்லி அவற்றை விட்டுவிடாமல் பயின்றுவரக் கற்பித்தார். "எவ்வகை அறிவும், இயற்கை செயற்கை இருவகைப் பொருளுடன் பயிலும் எவ்வகைப் பயிற்சியும் உன் புத்திக்கு விநோதமாவதுமன்றி வலிமையும் உண்டாக்கும். பந்தடிப்பதும் கைகால்களின் முயற்சியால் அவ்வாறே பயன்படுமென்று எண்ணி இன்பம் பூரித்திருக்கிறேன்; தேகப் பயிற்சிகளில் நீ தேறுவதைக் காண விரும்புகிறேன். ஒருவன் மெய்வருந்தி உழைக்கும்பொழுதுதான் மனதின் போகங்களில் உத்தமமும் மிக்கஇதமுமான பாகம் நன்றாய் அனுபவிக்கப்படுகிறதென்று எண்ணுகிறேன்" என்று அவர் மொழிந்தார். கைப்பாடும் மெய்ப்பாடும் படுவதனால் விளைகின்ற மிகச் சிறந்தபயன் இன்னதென ஜெரிமி டெய்லர் (Jeremy Taylor) எனும் மஹாதேசிகர் சுட்டிமொழிந்திருக்கிறார். அவர் வாய்மொழியாவது:—"சோம்பலைத் தவிர்த்து உனக்குள்ள ஒழிவுகாலம் எல்லாம்பயன்பட வருந்தி உழை; அப்படியில்லாமல் மனம் முயற்சியின்றித் தேகம் சுகித்திருக்குமானால், அக்கால

த்தினை சந்து பொக்கைகளன்றி கெட்டவாசைகள் எளிதில் நுழையும்; உண்ண உடுக்கக் குறையின்றிச் சுகித்துச் சோம்பியிருக்கும் எவனும் சமயத்தில் ஆசாபாசத்திற்கு உட்படாமல் சுத்தனாயிருந்ததில்லையே; உழைப்பு அனைத்திலும் மெய்வருந்தி உழைக்கும் உழைப்பே மிகப் பயன்படுவதும் தீவினை அகற்ற உதவுவதுமாம்.” என மொழிந்தார்.

வாழ்நாளில் காரியசித்தி உண்டாவதற்கு முக்கியகாரணம் தேகசௌக்கியமே. பெரும்பாலும் மனுஷர் இப்படி நினைக்கிறதில்லை. இந்தியாவில் ஹாட்ஸன் குதிரை ராணுவகுப்பில் இருந்த ஹாட்ஸன் என்பவன் இங்கிலாந்தில் இருந்த தம் இஷ்டர் ஒருவருக்கு “நான் சரீரசௌக்கியம்பெற்று இந்தியாவில் விர்த்தியடைவேனாகில், அந்தவிர்த்திக்குக்காரணம் நன்றாய் ஜீரணமாவதேயென்று எண்ணுகிறேன்” எனக் கடிதம் எழுதியனுப்பினார். எந்தத்தொழிலிலும் இடையறாது உழைக்கத்தக்க வல்லமைக்குப் பெரும்பாலும் இதே ஆதாரமாகவேண்டும்; அதுபற்றியே, கல்விமுயற்சிக்கும் ஆவசியகமாய்த் தேகசுகத்தைப் பேணிக்கொள்ளவேண்டியிருக்கின்றது. பெரும்பாலும் வித்தியார்த்திகள் மனக்குறை அடைந்து துக்கித்துச் செயலொழிந்து மனோராச்சியம்செய்ய நேர்வது காண்கிறோம்; ஒருவேளை தேகப்பயிற்சியைப் பராமுகமாய் விட்டுவிட்டதே இதன் காரணமாயிருக்கலாம். இந்த நேர்பாடுள்ளவர்களுக்கு உலகவாழ்க்கை துன்பமாயிருக்கும், யாவரும் நடக்கிற வழியில் செய்கிற தொழிலில் வெறுப்பு உண்டாம். இவ்வாறு நேரும்தன்மைக்கு இங்கிலாந்தில் பைரன்சத்தமென்றும், ஜர்மனியாவில் உவெர்தர்சத்தமென்றும் சொல்வார்கள். அமெரிக்காவிலும் இந்த இயற்கை உற்பத்தியாவது கண்டு சானிங் என்கிற வேதாந்தியாபகர் (Dr. Channing) “நமதுதேசத்து வாலிபர் வெகுபேர் பைரனை எனும் பாடசாலையிற் பயின்று முதிர்கிறார்கள்” எனமொழிந்தார். வாலிபருக்கு உண்டாகிற இந்தப்பசலை ரோகத்திற்கு ஒரேபொரு

மருந்து உண்டு - அது தேகாப்பியாசம். தேகாப்பியாசம் என்பது உழைப்பும் வேலையும் தேகப்பயிற்சியுமே.

வாலிபத்தில் வலியத் தன் தலைமேற்கொண்டு கைப்பாடுபடுவதனால் விளையும் பயனை ஸ்ரீ ஐஸாக் ந்யூற்றன் (Sir Isaac Newton) உடைய பால்ய சரித்திரத்தைக்கொண்டு தெளியக் காட்டலாம். மற்றவர்களோடு ஒப்புடையாய் பார்க்குமிடத்தில் அவர் சற்று மந்தகுணமுள்ள வித்தியார்த்தியா யிருந்தும், மரம்-அரிவாள் -சம்மட்டி-கைக்கோடாரி இவைகளை ஓயாமற் கையாடுவார்; விடுதி அறையில் கொட்டாப்புளி சம்மட்டி கொட்டி அடித்து விநோதமான காற்று யந்திரம், வண்டி, காற்றுவிசை யந்திரங்கள், இவைகளைச்செய்தவண்ணமா யிருப்பார். சற்றுப் பருவம் ஏற ஏற, தமது இஷ்டர்களுக்குச் சிறு பீடம், போஜனபாத்திர பீடம் இவைகளைச் செய்து கொடுப்பது அவர் மனதிற்கு ஆனந்தமா யிருந்தது. விரகு அறியாச் சிறு பருவத்தில் ஸ்மீற்றன் (Smeaton), உவாட் (Watt), ஸ்டீவின்ஸன் (Stephenson) என்பவர்களுக்கும் இவரைப்போலத் தொழிற்கருவிப் பிரயோகத்தில் அத்தனை கைவளம் உண்டு. அவர்கள் இளமையில் இவ்வகையாய்த் தம்மைத்தாம் பண்படுத்தா திருப்பார்களானால் ஆடவர்களான பொழுது இத்தனை அருந்தொழில்களைச் சாதிப்பது சந்தேகமே. இதன் முற்பக்கங்களில் விவரணமாய்ச் சொல்லிய சிற்பருசக்தரும் கைத்தொழில் வல்லோரும் இளமையிற் பயின்ற பயிர்ச்சியும் இவ்வகைப் பயிற்சிதான். அவர்கள் சிறுபருவத்தில் நித்தமும் கைவேலை செய்து பயின்றதனால், அவர்கள் உபாயமும் அறிவும் விவகார யோக்கியதைக்கு நன்றாய்ப் பண்பட்டன. கைப்பாடுபட்டுப் பிழைக்கும் தரத்தோரா யிருந்தவர்களும் தாம் உயர்ந்து மற்றும் கல்விப்பொருளை நாடிக் கருத்தால் உழைக்கத் தொடங்கிய பொழுது, அவ்வுழைப்பிற்கு இளமையிற் பயின்றபயிற்சியால் உண்டாகும் அநுகூலத்தைக் கண்டார்கள். தாம் கற்றுத்தேற வல்லவராதற்குச் சரீர கஷ்டப்படுவது அவசியகமென்று கண்டதாகவும், அதனால்

தமது தேக சவுக்கியத்தையும் மனதின் சவுக்கியத்தையும்
நாடி இடையிடையே ஒரு முறைக்கு இருமுறை மும்முறை
பாடசாலையில் கல்வி கற்பிக்கும் முயற்சியையும் கற்கும்
முயற்சியையும் விட்டு, மீளவும் அரி தாங்கும் தோல் கட்டிக்
கொண்டு கொல்லுலைக் களத்திற்கும் கருமான்பட்டடைக்கும்
வேலைசெய்யப்போனதாகவும் இலைஹூ பரித் (Elihu Barritt)
என்பவர் சொல்லுகிறார்.

வாலிபருக்குத் தொழிற்கருவிகளைக் கையாடப் பயிற்றுவத
னால் அவர்களுக்குச் சாதாரணமான தொழிற்பயிற்சி உண்டா
வதுந்தவிர், கைப்பழக்கம் நன்றாய் உண்டாகும். சுகத்திற்கு
அநுகூலமான வேலை செய்து அதில் அவர்களுக்கு மெத்தவும்
கொண்டாட்டம் உண்டாம். கண்பார்த்துக் கையாடிச் செய்
பவைகளில் கருவி கரணங்களுக்கு அதிக பழக்கம் உண்டாம்.
யாந்திரிகத்தில் தொழிற் பிரயோகத்திற்கு வேண்டு மளவிற்
குச் சிறிது பரிசயம் உண்டாம். தமக்கும் பிறர்க்கும் உபகா
ரிகளாகும் திறமை உண்டாம். அதுவுமின்றித் தேகமுயற்சி
செய்துகொண்டு வரும் வழக்கம் அவர்களை விட்டு நீங்காது
நிலையாக நிற்கும். முக்கியமாய்ப் பாடுபட்டுப் பிழைக்கும் மனு
ஷர் இளமையில் யாதாயினும் ஒரு கைத்தொழிலை மெய்வரு
ந்திப் பயிலாமல் தீராது,—இப்படிப் பயிலப்பயிலக் கைச்சா
துரியமும் தேகசக்திப் பிரயோகமும் அவர்களுக்குச் சுவாதீ
னமாம். இந்த நலம் செயலற்று வீண்பொழுது போக்குவார்
க்கு இல்லவே இல்லை. மனுஷர் கைப்பாடுபட்டுப் பிழைக்கும்
தொழிலைச் சேர்ந்த முக்கியமான கேடு ஒன்று உண்டு.
அது அவர்கள் மெய்வருந்தி உழைப்பதல்ல, பெரும்பாலும்
நீதி அநீதிகளைப் பகுத்தறிவதற்கும் அறிவு விருத்தியாவதற்
கும் உரிய கருவிகரணங்களைப் பயிற்சியின்றி விட்டு எப்பொ
ழுதும் தேக உழைப்பு ஒன்றைமாத்திரம் அநுசரித்து வருவ
தே. கைப்பாடுபடுவது இழிவென்று இளமையில் பிறர் சொ
ல்லக் கேட்டிருப்பதனால், செயல் ஒழிந்திருக்கும் வாலிபர்
கைப்பாடு படாமல் தொழில் அறியாத மூடராக வளருகிறார்

கள்; தரித்திரர் மெய்வருந்தி உழைக்கும் தொழிலை மாத்திரம் செய்து பெரும்பாலார் கேள்வி முறையின்றிக் கல்லாத மூடரா யிருக்கின்றார்கள். ஆனால், தேகப்பயிற்சி அல்லது தேக உழைப்பு, புத்திப்பயிற்சி என்னும் இவ்விரண்டும் சேர்ந்திருக்குமானால், மேற்குறித்த இருவகைக் கெடுதிகளையும் தவிர்ப்பது சாத்தியமெனத் தோன்றுகிறது. இவ்வாரோக்கியமான வித்தியாபிவிர்த்திமுறை வரவர அநுசரிக்கப்படுவதைக் குறிப்பிக்கும் திருஷ்டாந்தங்கள் உலகத்தில் அங்கங்கு பலவிடங்களில்உண்டு.

கல்விகற்றுத் தெளிந்து தொழில்செய்வோராகிய பண்டிதர், தர்ம சாஸ்திரிகள், வைத்தியர் என்பவர்களுக்கும் அவரவர் தொழிலிற் சித்திபெறுதற்குப் பெரும்பாலும் தேக ஆரோக்கியமே ஆதாரமாயிருக்கின்றது; டைம்ஸ் பத்திரிகைக்குவிஷயங்கள் எழுதிவந்த ஒருவர் இம்மாத்திரத்தில் விடவில்லை, "நமது பெரியோரது பெருந்தன்மைக்குப் புத்திசாமர்த்தியம் எப்படியோ அப்படியே தேகசாமர்த்தியமும் ஏதுவாயிருக்கின்றது" என மொழிந்தார். சித்தி பெற நாம் தர்மசாஸ்திரிக்கும் நீதிசாஸ்திரக்ஞனுக்கும் நன்றாகப் பண்பட்ட மனதைப்போலவே ஆரோக்கியமான உச்சுவாச நிச்சுவாச உபகரணமும் இன்றியமையாதிருக்கின்றது. ஏனெனில், உச்சுவாச நிச்சுவாசங்களால் சுவாசாசயம் செம்மையாய் சுத்தமாகிச் சரீரத்தில்உள்ள ரத்தமெல்லாம் நன்றாய்க்காற்றுடனல்லது, மூளை வலிவாக வேலைசெய்வதற்கு முக்கியாதாரமான உயிர்வலிமை உறுதியாய் உண்டாவதில்லை. தர்மசாஸ்திரியானவன் ஜனம் அடர்ந்து கூடி வெப்பம் மிகுந்த தர்மசபைகளில் நியாயவாதம் செய்து செய்து அந்த மார்க்கமாய் உயர்பதம் அடைவான். நீதிசாஸ்திரத்தில் தலைவன் ஆனோன் வெகு பெயர்கூடிய ஜனப்பிரதிநிதிகள் சபாலயத்தில் களைப்புப் பசைப்பு பாராட்டாமல் எடுத்த விஷயத்தை நெடுநேரம் வாஞ்சையோடு வாதிக்கவேண்டும். ஆனதுபற்றி, ஓய்வின்றி

எப்பொழுதும் வாதப்பிரதிவாதம் செய்யும் தார்மசாஸ்திரியும்,
பார்லிமெண்டு சபையில் நிறை தொழில் செய்துவரும் ஜனப்
பிரதி நிதி சிரேஷ்டனும் மிகுந்த மனோபலத்தை மாத்திர
மேயன்று ; அதைப்போல் அநேகம்பங்கு அதிகமான தேக
பலத்தையும் சுறுசுறுப்பையும் மிகவும் அற்புதமான வகை
யாக வெளியிடவேண்டி வருகிறது. இவ்வகையான அரிய சக்
திகளை மிக வியக்கத்தகும் அளவிற்கு விளக்கிய ப்ரௌஹம்
(Brougham), லிண்ட்ஹர்ஸ்து (Lyndhurst), கம்பெல்
(Campbell), பீல் (Peel), க்ரேஹம் (Graham), பால்மர்
ஸ்தன் (Palmerston), இவர்கள் எல்லோரும் நல்ல தேகதார்
ட்டியம் உடையவர்களே.

எடின்பர்க் வித்தியாசாலையில் இருக்கும்பொழுது ஸ்ரீ உவா
ல்ந்தர் ஸ்காட்டிற்கு "க்ரீக் மடையன்" என வசைப்பெயர்
வழங்கிவந்தது. ஆயினும், அவர் மூடவனாலும் சிறந்த சரீ
ரசவுக்கிய முடையவரா யிருந்தார். த்வீட் நதியில் மீன்பிடிக்
கும் திறத்தில் கதித்த செம்படவனுக்குச் சரியாகவே அவர்
நாளும் ஈட்டியால் மீன்வேட்டை ஆடுவார். யாரோவில் உள்
ள எந்த வேட்டைக்காரனுக்கும் இணையாகவே அடங்காக்கு
திரையை ஏறி அடக்குவார். பிற்காலத்தில் வித்தியாவிரதரா
யிருக்கும்பொழுதும் ஸ்ரீ உவால்ந்தருக்கு வேட்டையில் வி
ருப்பம் கெட்டுப்போகவில்லை ; அவர் முன்னேரம் முயல்வே
ட்டை ஆடுவார். உவில்ஸன் பண்டிதர் நன்றாய்த் தேர்ந்த மல்
லர் ; அவர் சாதுரிய வேகத்திலும் கவிபாடும் வேகத்திலுமன்
றி, சம்மட்டி அடிக்கும் திறத்திலும் மிக்கவர். பர்ன்ஸ்
என்பவர் பாலியத்தில் முக்கியமாய் எழும்பிப்பாய்வதிலும்,
பெருங்கல்லைத் தூக்கி எறிவதிலும், மல்லாட்டத்திலும் குறி
க்கொள்ளத் தக்கவரா யிருந்தார். நமது ஆசிரியர்கள் சிலர்
இளமையில் தேக பலம் அதிகரித்தவரா யிருந்தார்கள். இ
சாக் பாரோ என்பவர் சார்ட்டர் ஹௌஸ் பாடசாலையில்
இருக்கும்பொழுது கைக்குத்துச் சண்டைக்காரனென்று பெய
ரெடுத்தவர் ; சண்டையில் பல நாள் அவருக்கு மூக்கு உடை

க்கு உதிரம் பெருகியது உண்டு. அன்டரூ புல்லர் என்பவர் இளம் பருவத்தில் ஸோஹம் என்னும் ஊரில் விவசாயக்காரன் ஒருவனுக்கு கையாள் வேலை செய்து வரும்பொழுது முக்கியமாய்க் குத்துப்போர்க் கைச்சமர்த்திற்காகப் பிரக்கியாதி பெற்றார்; ஆதாம் க்ளார்க்கு சிறுவனாயிருந்தபொழுது பெருங்கற்களைப் பெயர்த்து உருட்டிக்கொண்டு போவதில் பலசாலியெனப் பெயர்பெற்றார். இது ஒன்றொழிய அவரிடத்தில் வியக்கத்தக்கது மற்றொன்றும் இல்லை. இத்தப்பலம் ஒரு வேளை பிற்பாடு அவர் ஆடவரானபொழுது உயர்ந்த அபிப்பிராயங்களை உருட்டி வெளியிடுவதிற் காட்டிய பலத்திற் சிறிதின் மர்மமாயிருந்தாலும் இருக்கும்.

இவ்வண்ணமாக வித்தியார்த்திகளை கல்வி பயிற்சிக்குத் தேகசுகம் எனும் இவ்வுரமான அஸ்திவாரம் போடுவது ஆவசியகமாயிருப்பதுமன்றி, கருத்துச்செலுத்தும் சாதனையைப் பயிற்சிபண்ணுவது கூடச் சிறிதும் இன்றியமையாததெனச் சொல்ல வேண்டும். "உழைப்பு அனைத்தையும் வெல்லும்" எனும் தத்துவம் முக்கியமாய் அறிவின் வெற்றி விஷயத்தில் மெய்ப்படுகின்றது. கல்விப்பொருள் சம்பாதிக்கச் செல்லுமார்க்கத்தில் அச்சம்பாத்தியத்திற்கு வேண்டிய பாடுபட்டுக் கற்கும் சமஸ்தரும் பேதமின்றித் தடையறச் செல்லலாம்; அன்றியும், மனவுறுதியுள்ள வித்தியார்த்தி மேற்கொண்டு நிர்வகிக்கக்கூடாத மிகுந்த வருத்தமொன்றும் இல்லை. கஷ்டப்பட மனங்கொள்வார்களானால், எந்தப்பொருளையும் எட்டிப்பிடிக்கப் போதுமான நீண்ட கையுடையவர்களாகக் கடவுள் அவர்களை இவ்வுலகிற் சிருஷ்டித்து அனுப்பியிருக்கிறார் என்று சாத்தார்தன் பண்பு விளங்க மொழிந்திருக்கிறார். வேலையிலன்றிக் கல்வியிலும் உற்சாகமே பெரிது. அனல் எழ உழைக்கும் உழைப்பு வேண்டும்; சூடு இருக்கும்பொழுதேயன்றிச் சூடு பிறக்குமளவும் நாம் இரும்பை அடிக்கவேண்டும். கிட்டும் சமயத்தைத் தப்பவிடாமல் கருத்தாய் முயன்று, சோம்பற்றோர் வீணேசெல்ல விடும் சிறுசிறு ஒழிவுகாலத்தை விட்டு

விடாமல் வேலைகளில் நோக்கமும் உற்சாகமும் கடைப்பிடிப்புமுடையோரா யிருப்பவர்கள் தம்மைத்தாம் பண்படுத்தும் முயற்சியில் சாதிப்பது இவ்வளவென்று சொல்ல நம்மாலில்லை. அதை நினைக்க ஆச்சரியம் உண்டாகின்றது. இதற்கு இரண்டொரு திருஷ்டாந்தம்,—பெர்குஸன் (Ferguson) மேட்டு மலைநாட்டில் ஆட்டுத்தோல் அங்கி போர்த்துக்கொண்டிருக்கையில் வானத்தைப் பார்த்துக் ககோள சாஸ்திரம் கற்றார். ஸ்டோன் (Stone) அங்கங்கே நடைகாலில் தோட்ட வேலை செய்து வரும்பொழுது கணிதம் கற்றார். ட்ரூ (Drew) பழம் பாதரட்சை தைக்கும்பொழுது ஒழிவு கண்டு தத்துவ சாஸ்திரத்தில் உன்னதத் துறை பயின்றார்; மில்லெர் (Miller) தினக்கூலிக்குக் கல்லு வெட்டிப் பிழைக்கும்பொழுது பூமி தத்துவ சாஸ்திரம் கற்றுக்கொண்டார்.

மேற்சொல்லியபடி ஸ்ரீ யோசுவா ரேனல்ட்ஸ் (Sir Joshua Reynolds) முயற்சியின் வலிமை உள்ளூற நம்பினார். ஆனதுபற்றி, இடைவிடாது எப்பொழுதும் பொறுத்து உழைக்கும் திராணியை மாத்திரம் சாதனைசெய்து வருவார்களானால் எல்லாரும் சிறந்து உயர்பதம் பெறலாம் எனும் பட்சத்தை அவர் கொண்டாடினார். (உண்டவன் உரஞ்செய்வான் என்பது போல) உழைத்தவன் உயர்பதவிடம் ஆவான். ஒருவன் சாஸ்திரங்களில் தேர்ச்சிபெறுவதற்கு அவன் மெய்வருந்தி உழைக்கும் அளவே அளவன்றி வேறு அளவு இல்லை என்பது அவர் கோள். கல்வியாலும் உழைப்பாலுமன்றி, ஈச்வர உபதேசத்தால் எதும் நடக்குமென்று அவர் நம்புவதில்லை. "படும்பாட்டுக்கு பிரதிபலனாகவன்றி மற்றபடி உயர்பதவி மனுஷருக்கு ஒருபொழுதும் அமைவதில்லை. உனக்குப் புத்தி வைபவம் மிகுந்துண்டானால், முயற்சி அதைப் பின்னும் விர்த்திபண்ணும்; உன்விவேக சாமர்த்தியம் மிதமானால் முயற்சி அக்குறையைத்தீர்க்கும். துறை அறிந்து திறம் தெரிந்து உழைக்கும் உழைப்பிற்கு அமையாததும் ஒன்றும் இல்லை, அதுவின்றி

அமைவதும் ஒன்றும் இல்லை." என்று அவர் சொல்லுகிறார். இவரைப்போல ஸ்ரீ பௌவல் பக்ஸ்டனுக்கும் (Sir Fowell Buxton) வித்தியாப்பியாச பலத்தின் அபேக்ஷை மிகுதி: பிறர் ஒருநாழிகை நேரம் செய்யும் தொழிலைத் தாம் இருநாழிகை இருமடங்கு வருத்திப் பயின்றால் அவர்களைப்போலத் தாமும் சாதிக்க மாட்டோமோ என்று அவர் அவையடக்கமாய் நினைத்தார். சாதாரண சாதனங்களையும் அசாதாரண முயற்சியையும் அடுத்து எதையும் சாதிக்கலாகுமென்று அவர் மிக உறுதியாய் நம்பியிருந்தார்.

ராஸ் பண்டிதர் (Dr. Ross) சொல்வதாவது:— 'இனி மேல் விசேஷ விவேகிகளென்று உலகம் ஒப்புக்கொள்ளத் தக்க சிலரை என் காலத்தில் அறிந்திருக்கிறேன். அவர்கள் எல்லோரும் பாட்டாளிகள், வருந்தி உழைப்பவர்கள், சுறுசுறுப்புள்ளவர்கள். சிறந்த விவேகம் அதன் செய்கையால் அறியப்படும்; செய்கை இல்லா விவேகம் கூட நம்பிக்கையும் ஊமைகண்ட கனவுமாம். ஆனால் அருந்தொழில்கள் எண்ணத்தாலாவது ஆசையாலாவது சாதிக்கத் தக்கவையல்ல, நீடித்து வருந்தி உழைக்கும் உழைப்பின் பயனாக விளைவன...... பெருந்தொழில் ஒவ்வொன்றும் ஆரம்பத்தில அதிகமாக வருந்தி முடிக்கப்பட்டதேயாம். ஒன்று எளிதாகுவது உழைப்பால். எளிதெனத் தோன்றுவதெல்லாம் ஆதியில் அரிதாயிருந்ததே தவிர மற்றப்படியல்ல. நாய்நடை முதலாய் அவ்வாறே. தக்ஷணமே தீப்பொறி கக்கும் கண்ணும், இடியொனா உத்கிருஷ்டமான சித்தவிருத்திப் பிரவாகத்தை இறைக்கும் வாக்கும் உடையோனாகிக் கேட்டவரை அசதியில் பிரமிக்கச்செய்து அரிய ஞானத்தாலும் வாய்மையாலும் உயர்வு பெறும் சபாபண்டிதன், நினைத்த கருமம் நெஞ்சம் சுடுக்கப் பலகாற் சிதறியும் பதைக்காமல் பொறுத்து, சொன்னதை காத்தலும்பேற மேலு மேலும் சிந்தனைசெய்து இந்த நுட்பத்தைப் பயின்றவனேயன்றி வேறல்லன்' எனக்கூறினார்.

செய்வதைத் தீர்ப்பாகச் செய்வதும் திருந்தச் செய்வதும் கற்கும் தொழிலில் கண்ணும் கருத்துமாய்க் குறிக்கவேண்டிய பரமார்த்தங்களாம். தம் மனதைப் பண்படுத்த விதி குறிக்கும் பொழுது பிரான்சிஸ் ஹார்னர் என்பவர் (Frncis Horner), எதாயினும் ஒரு துறையில் தீர்ந்த பண்டிதனாகும் பொருட்டு அத்துறை ஒன்றையே இடையறாது கருத்தாய்ப் பயின்று வருவது முக்கியமென்று வலியுறுத்தினார். இந்த அபிப்பிராயத்தோடு அவர் சில புஸ்தகங்களைமாத்திரம் வாசித்து, வெள்ளாடு தழைகறிப்பதுபோல அடிக்கொரு புஸ்தகம் மேலெழுந்த வாரியாக வாசிக்கும் வழக்கத்தை எவ்விதத்திலும் அனுகவிடாது எதிர்த்து நின்றார். எவனுக்கும் அறிவின் அருமை பெருமைக்கு இலக்கு, முக்கியமாய் அதிகம் அறிந்திருப்பது அல்ல; அறிந்ததை நல் விஷயங்களில் பயன்படுத்த வல்லவனாயிருப்பதே. ஆகவே மிகுந்த வெள்ளறிவிலும் வழுவறப் பூர்த்தியாய்க் கற்றறிந்த சொற்பமான கல்வியே விவகாரத்தில் எப்பொழுதும் அரிய கல்வியென்று காணப்படுகின்றது.

இக்னேஷஸ் லாயோலா (Ignatius Loyola) வின் நீதி வாக்கியங்களில் ஒன்று "ஒருவேளைக்கு ஒருவேலை பணிக்காய்ச் செய்பவன் எல்லாரைக்காட்டிலும் அதிகம் செய்கிறான்" என்பது. நமது யத்தனங்களை மிதமிஞ்சி இடம்பெறப் பெருக்குவதானல், நமது பலம் தவறாமல் இளைத்து நமது விர்த்திக்கு விகாதம் உண்டாக, புத்தி சஞ்சலப்படுவதும் செய்தொழில் அற்பமாதலும் நமது வழக்கமாய்விடும். ஸேண்ட் லீனார்ட்ஸ் பிரபு (Lord St. Leonards) தாம் கல்வி பயின்று வந்த வகையை ஒரு முறை ஸ்ரீ பௌவல் பக்ஸ்தனுக்கு அறிக்கை செய்து தமக்குக் காரியசித்தி விளைந்த மார்க்கத்தை இதன் அடியில் வருவாறு விளக்கினார். அவர் வாய்மொழி:— "தர்ம சாஸ்திரம் வாசிக்கத் தொடங்கும்பொழுது நான் சம்பாதிக்கும் ஒவ்வொரு கல்விப்பொருளையும் பூர்த்தியாய் என் சொந்தமாக்கிக் கொள்ளவும், ஒன்றை அரைகுறையின்றிக்

சாதிக்கிற வரையில் ஒருபொழுதும் மற்றொன்றில் பிரவேசியாதிருக்கவும் நிர்ணயித்தேன். நான் ஒரு வாரத்தில் வாசிப்பதை என்னுடன் பரீக்ஷை கொடுக்க எத்தனித்தவர்கள் பலர் ஒரு தினத்தில் வாசிப்பார்கள்; ஆனால் பன்னிரண்டாம் மாச முடிவில் என் கல்வியறிவு அன்று கற்றதுபோல நெஞ்சில் அழுந்தி யிருக்க, அவர்கள் கற்றதெல்லாம் ஞாபகத்தில் இல்லாமற் போய்விடும்.”

ஒருவனைப் பண்டிதன் ஆக்குவது அவன் கற்ற கல்வியளவுமல்ல, வாசித்த கிரந்தங்களின் அளவுமல்ல; பின்னென்னவெனில், கற்றகல்வி தாம் விரும்பிய காரியசித்திக்கு ஒத்திருத்தலும், ஒரு விஷயத்தைச் சிந்திக்கும்பொழுது சிந்தைசிதறாமல் அதிற் குவிந்திருத்தலும், மனம் முழுதும் ஒற்றவழியில் இயலுமாறு அமைப்படப்பெற்றி வருவதுமேயாம். அபர்நீதி (Abernethy) என்பவர் தமது சிந்தை தெவிட்டும் மட்டும் ஒன்று உண்டெனவும், அது கொள்ளும் அளவிற்கு மிஞ்ச யாதாயினும் ஒன்றைத் தாம் அதிற் புகட்டினால், புகட்டிய பொருள் மற்றொன்றும் செய்யாமல் முன் அங்கிருந்தவொரு பொருளைத் தவறாமற் பெயர்த்துப் புறம்பேற்றுமெனவும் தாற்பரியம் கொண்டனர். “ஒருவன் செய்ய விரும்புவதைத் தெளிய அறிந்திருப்பானானால், அதைச் செய்து முடிக்கத் தகும் சாதனங்களைத் தெரிந்து கொள்ளாவிடில் அவன் வழுவுவது அரிது” என அவர் வைத்தியநூல் கற்பதைக் குறித்து மொழிந்தார்.

மிகக்குறிப்பான நோக்கத்தோடும் ஊக்கத்தோடும் பயின்றுவரும் கல்வியே மிகப் பயன்படும் கல்வி. நாம் யாதாயினும் ஒரு கல்வித்துறையில் தேர்ந்த பண்டிதராவோமாயின், அந்தத்துறை நமக்கு எந்த நிமிஷத்திலும் விசேஷமாய் உதவும். ஆகவே, கல்வியறிவின்றிக் கேவலம் கிரந்தங்களை வைத்திருப்பதும் அல்லது சமயத்தில் இன்ன விஷயம் இன்ன கிரந்தத்தை வாசித்தால் தெரியுமென்று அறிந்திருப்பதும் போதாது. எண்ணத்திற்கு விவகாரஞானம் நாம் செல்லும் இடத்தே

றும் நம்மைவிட்டு நீங்காதிருந்து சமயத்தில் நமக்குக் கையுதவியாக வேண்டும். கையில் ஒரு காசும் இல்லாமல் வீட்டில் பெருநிதி சேர்த்து வைத்திருப்பது போதாதல்லவா? அவ்வண்ணமே எத்தருணத்திலும் வியவகாரத்திற்குச் சித்தமாகக் கல்வி எனும் வழங்கு நாணயத்தை நாம் செல்லும் இடந்தோறும் கட்டிவைத்துக் கொண்டு போக வேண்டும். இல்லாவிடில் அது செலவிற்கு வேண்டும் சமயத்தில் நாம் சக்தியற்றவர்கள் ஆவோம்.

வேலையிலன்றித் தன்னைத்தான் பண்படுத்துவதிலும் சித்த நிர்ணயமும் தீவிரத்தன்மையும் வேண்டும். இஷ்டப்பிரகாரம் செய்ய இளைஞருக்கு ஆமளவிற்கு இடங்கொடுத்து, தன்பலம் கொண்டு அம்பலம் ஏறவேண்டும் எனும் மொழிப்படி தமது பலமே தமக்குத் தஞ்சமென்றிருக்கப் பழக்குவதனால், இக்குணங்களை அவர்களிடத்தில் முதிரச் செய்யலாம். தகுமளவிற்குமிஞ்ச வழிசொல்லிக் கொடுப்பதும், கட்டுப்பாடு பண்ணுவதும் தன்முயற்சிப்பழக்கம் உண்டாவதைத் தடுக்கும். அவை நீந்தப் பயின்றவர்களுக்குக் கக்கத்திற் கட்டிய ஜலப்பைகளைப் போலும். தம்முடைய திறமையில் தமக்கு நம்பிக்கையில்லாமையே அவரவர் விர்த்திக்குச் சாதாரணமாய் மனுஷர் நினைத்திருப்பதைப்பார்க்க மிகப் பெருந்தடையாகின்றது. உலக வியவகாரத்தில் உண்டாகும் அபஜயங்களிற்பாதி, குதிரை பாயும்போழ்து கடிவாளத்தை இழுப்பதுபோல், ஒரு வேலையைத் துவக்கிச் செய்யும்போது மத்தியில் ஊக்கத்தைக் கைவிடுவதனாலேயே உண்டாகிறதென்று சொல்லுகின்றனர். தமது திறமையே தமக்குத் தஞ்சமென்று கடைப்பிடித்திருப்பதனால் காரியசித்தி உண்டாயிற்றென்று ஜான்ஸன் பண்டிதர் சொல்வது வழக்கம். தன் திறமையையாவது யோக்கியதையையாவது பாத்திரத்தின் திறம் தெரிந்து தகுமாறு மனதில் மதிப்புக்கொள்வது உண்மையான அடக்கத்திற்கு ஏற்காதென்று சொல்லக்கூடாது; முழுதும் ஏற்கும். தமது யோக்கியதையையும் பூரணமாக மதித்திருக்கலாம்,

அதனேடுவிஷயமும் நன்ருய்ப்பொருந்தி யிருக்கவேண்டும். சன
னங்களுக்குமுன் பொய் என் றின்றுபோட்டு அதைமுழுவெ
ள்ளைத்தோன்றுவிப்பதுபோல், தம்மிடத்தில்யோக்கியதை
யொன்றுமில்லாமலிருக்கும் யோக்கியதையுள்ளவர்கள்போலப்
பாவித்து மோசம்போகிறவர்களும் உண்டென்றும், யோசித்
துப்பார்க்கையில், தமக்கு உண்மையாய் உள்ள யோக்கியதை
யி னிடத்தில் நம்பிக்கை யில்லாமையும், தம்பலங்கொண்டு
அம்பல மேறலாகுமெனும் நெஞ்சுறுதி யில்லாமையும், அது
காரணமாகச் செய்தொழிலில் ஊக்கமில்லாமையும் ஆகிய
இக்குறைவுகளே அநேகருடைய விருத்திக்குத் தடையா யிரு
க்கின்றனவென்று காணப்படுகின்றன. இப்படி முயற்சி
குன்றி ஒன்றும் தலைக்கட்டாமல் யிருப்பதுபற்றியே எதுவும்
அதிகமாகச்சொல்லப் புகவில்லை.

தம்மைத்தாம் பண்படுத்துவதனுல் விளைகின்றபயனைப்பெ
றப் பெரும்பாலோர்க்குச் சாதாரணமாய் விருப்பம் இல்லாதி
ருக்கவில்லை. ஆயினும் அதைக்கொள்வதற்கு இன்றியமையாத
விலையாகிய கட்டுப்பாட்டைச்செலுத்த முயலவேணுமென்றுநிசம்
அவர்களுக்கு மனம் இல்லை. "கல்விகற்பதிலுள்ளபேராவலே
இக்காலத் தவர்களுக்கு மிகுந்த பைத்தியமாயிருக்கிறது."
எனஜான்ஸன் பண்டிதர் தமதுகாலத்து மனுஷரைச் சுட்டி
மொழிந்த அபிப்பிராயம் இக்காலத்திலும் மனுஷர் இயற்
கைக்குப் பொருந்தமா யிருக்கின்றது. கல்விக்கு ராஜமார்க்
கமொன்று ஏற்பட்டிருக்கிறதென்பதை நாம் நம்பாதிருந்தா
லும், உலகத்தார் பலரும் விரும்பியிருக்கிற மார்க்கத்தைத்
திடமாய் நம்பியிருப்பதாகத் தோன்றுகிறது. கல்விப்பயி
ற்சி விஷயத்தில் வருத்தப்படாமல் கற்பதற்கு உபாயத்தை
அநேகர் தேடுகிறார்கள்; சாஸ்திர விஷயங்களைக் கற்கக் குறு
க்குவழி தேடுகிறார்கள்; இங்கிலீஷ் பிரஞ்சு லத்தீன் முத
லிய அன்னிய பாஷைகளையும் பத்து பன்னிரண்டு பாடத்தில்
அல்லது உபாத்தியாயா சகாயமின்றிக் கற்கிறார்கள். இவற்
றைப்போதிக்கையில், வினைச்சொற்களையும் பெயர்ச்சொற்களை

யும் கற்பித்துத் திண்டாட்டம் உண்டாக்குவதில்லையென்று வாக்குறுதிபெற்று உபாத்தியாயர் ஒருவரை அமர்த்திய ஒரு சிமோட்டிக்கு அவர்கள் சரியென்னலாம். அந்தப்பெண் கற்ற விதமாகவேகற்றுப் பலர் சிற்றறிவு சம்பாதிக்கிறார்கள்; சொற்பமான சில பிரசங்கங்களை மட்டும் கேட்டு ரசாயனவித்தைகற்கிறார்கள். அந்தப்பிரசங்கங்களில் உல்லாசம் பிறக்கக் காட்டப்படுகிற சில பரீக்ஷைகளில், நகை யெழுவாயு எனச் சங்கேதம் வழங்கும் யவக்ஷார குணிதவாயுவைப் பூரகஞ் செய்து, பசுமைநிறமான நீர் செம்மைநிறமான நீராக மாறுவதையும், அமிலகாரத்தில் பிராக்கினி எரிவதையுங்கண்டு அம்மட்டில்தாம் நாடிய சிற்றறிவு பெறுகிறார்கள். ஆயின், ஒன்றும் அறியாதிருப்பதிலும் இச்சிற்றறிவு வாசியானாலும் ஆகுமெனினும், இது ஒன்றுக்கும் உதவாது. இவ்வாறே, தாம் செய்யும் விநோதகாலக்ஷேபத்தை வித்தியாப்பியாசமென்று பெரும்பாலார் வீணே நினைத்துக்கொள்ளுகிறார்கள்.

வருந்திப் படிக்காமல் இப்படி எளிதில் கல்விப்பொருள் சம்பாதிக்க வாலிபர் முயல்வது ஒருபோதும் வித்தியாப்பியாசமாகாது. ஏனெனில், அதில் மனம் சென்றாலும் அதனால் மனதிற்குக் கல்விச்செல்வம் சேருகிறதேயில்லை. அது அந்தச்சமயத்திற்கு உற்சாகம் கொடுத்து ஒருவகை மனக்கூர்மையையும் விதரணையையும் உண்டாக்குமெனினும், அது வீண்மனக் களிப்பாகுமேயன்றி உலகவியாபாரங்களுக்கு உபயோகமான சிறந்த யுக்தி ஆலோசனைகளையும் உயர்ந்த அபிப்பிராயங்களையும் உண்டாக்குவதில்லை; ஆதலால், அது உறுதியானபயன் ஒன்றும் தராது. இவ்வாறு கற்குமிடத்தில், அறிவு நீர்மேல் எழுத்துப்போல் நெஞ்சில் நிலையற்று வீண் மனக்களிப்புமாத்திரமேயாம்; உள்ளபடி பார்த்தால் அது புத்தியைக் கெடுக்கத்தக்கதேயன்றி வேறல்ல. திடமானமுயற்சியாலும் சுதந்தரசக்தியாலும் தானே வெளிவரத்தக்கதான வெகுபெயருடைய மனதின் நற்குணங்களெல்லாம் இவ்வகையான நடக்கைகளால் முழுதும் அடங்கிப் பின்பு வெளிப்படத் திறமையற்ற

வைகளாகிவிடும். ஆயினும் ஒவ்வொருவேளை அசதியில் நேரும் ஆபத்து உபத்திரவம் முதலியவற்றால் அவை தட்டி எழுப்பப்படும். நன்றாய் அடங்கிக்கிடக்கிற நிர்குணத்தை எழுப்பிவிடுமானால் அவ்வேளைக்கு அந்த உபத்திரவத்தை நிக்கிரகமென்று நினைக்கக்கூடாது; அனுக்கிரகமென்றே நினைக்கவேண்டும்.

விநோதமாயே விஷயங்களை அறியப்பயின்ற வாலிபர் வருந்தி முயன்று கற்கவேண்டி வரும்பொழுது அதை நாட்டமின்றி விரைவில் தள்ளிவிடுவார்கள். அறிவையும் கல்வியையும் வேடிக்கையாய்ப் பயின்றதனால் அவர்கள் அவ்விரண்டையும் பரிகாசம் செய்துவிடப் பின்னடையார்கள். இவ்வண்ணம் மனதின் நிலை சிதறிக் காலம் ஏற ஏற அவர்கள் புத்தி வீரியத்தையும் சொரூப பலத்தையும் சுத்தமாய ஒடுக்கிவிடும். “வெவ்வேறுவிதமான கிரந்தங்களை வாசிப்பது புகைச்சுருட்டுப்பிடிப்பதுபோல மனோபலத்தைக் குன்றுவிக்கும். மன முயற்சியின்றி அடங்கியிருக்க விரும்புவோர்க்கு அது ஒரு பக்குவந்தான். அது சோம்பு தனத்திலும் முதிர்ந்த சோம்பு. மற்றெவ்வகைச் சோம்பலாலும் விளையும் துர்ப்பலத்திலும் அதனால் விளையும் துர்பலம் அதிகம்” என ராபர்ட்ஸன் என்பவர் மொழிந்திருக்கிறார்.

இந்தத் துர்க்குணம் வரவர முதிர்ந்து, பற்பல கெடுதிகளை விளைவிக்கின்றது; இதனால் விளையும் கெடுதிகளுள் மிகவும் அற்பமானது மதிக்குறைவாம்; மிகப்பெரியது விடாமுயற்சியாய் உழைக்க விருப்பமின்மையும், புத்தித்தரம் தாழ்ந்து தளர்வதுமாம். நாம் பகட்டாயல்லாமல் உண்மையாய் அறிவுடையோராக விரும்பினால், ஜாக்கிரதையாய் முயற்சிசெய்து வரவேண்டும்; நம் முன்னோர்போல் விட்டுவிடாது எப்பொழுதும் கருமத்தில் கண்ணும் கருத்துமா யிருக்கவேண்டும். ஏனெனில், உழைப்பே தொன்றுதொட்டு இன்றளவும் இனிமேலும் அரும்பெறல் அனைத்தையும் தப்பாமற் தேடிக்கொடுக்கத்தக்க முதற்பொருளாயிருக்கின்றது. சித்த நிர்ணயத்தோடு

உழைத்து அதனால் விளையும் பயனைப் பொறுமையோடு எதிர்பார்த்திருப்பது நமது பாரமென்று நாம் திர்ப்திகூர்ந்திருக்க வேண்டும். சிறந்த பெருமைகள் அனைத்தும் தாமதமாயே உண்டாகும்; ஆயினும் உண்மையாய் ஆஸ்தையோடு உழைப்பவனுக்குக் கருதியபயன் தகுதியான காலத்தில் கிடைப்பதற்கு ஐயம் இல்லை. ஒருவன் அனுதினமும் செய்துவரும் எவ்வகைத்தொழிலிலும் விடாமுயற்சி அமைந்திருக்குமானால், அது சிறந்த மகத்துவமும் உபயோகமுமுள்ள பல விஷயங்களிலும் மனதைச் செலுத்தி, அவைகளில் தன் திறமைகளை உபயோகிக்கத்தக்க வழியில் வரவர அவனைக் கொண்டுபோய் விடும். அவ்வளவோடு நின்றுவிடாமல் பின்னும் நாம் உழைத்துக்கொண்டே வரவேண்டும்; ஏனெனில், தன்னைத்தான் பண்படுத்தும்வேலைக்கு ஒருபொழுதும் ஒழிவில்லை. "உழைப்பதே ஆரோக்கியமாயிருப்பதாம்" எனக்கேக்குகவிஞர் கூறியிருக்கிறார். "எடுத்தாளாது வைத்துத் துருப்பிடித்துப் போவதிலும் எடுத்தாண்டு தேய்கடையாய்ப் போவது வாசி" எனக் கம்பர்லாந்து அத்தியக்ஷர் மொழிந்தார். "இளைப்பாறியிருக்க நமக்குப் பிற்காலத்தில் ஒழிவு யதேஷ்டமாய் உண்டல்லவா?" என்று ஆர்னால்த் என்பவர் உரைத்தார். "வேலையற்றிருப்பதால் விளைவது நோய்" என்பது, மௌனியென்று சிறப்புப்பெயர் வழங்கிய உவில்லியம் என்பவருடைய தோழராயும், மனவலியுடன் நித்தியமும் உழைக்கும் பிரகிர்தியுள்ளவராயும் இருக்கும் அல்டிகோ மார்னிக்ஸ் என்பவர் கைக்கொண்ட நீதிவாக்கியமாம்.

நமக்குக் கிடைத்த சக்திகளை நாம் எப்படி உபயோகிக்கிறோமோ, அதற்குத் தக்கபடியே நமக்குக் கவுரவமுண்டாகும். தனக்குக் கிடைத்த புத்திசாமர்த்தியம் ஒன்றாயினும் அதை ஒருவன் சரியாகப் பிரயோகிப்பானானால், அவ்விதமான பத்து புத்திசாமர்த்தியமுள்ளவனைப் பார்க்க அவன் அதிகமாய்ப்பெருமைபெறுவதற் குரியவனாவான். இரண்டு சக்தி ஒருவனுக்குப் பிதிரார்ச்சிதமாய்க் கிடைத்தால் அதில் எப்படி

அவனுக்கு ஒருமேன்மையுமில்லையோ அப்படியே சிறந்த புத்திசாமர்த்தியங்கள் இயற்கையாய் அமைந்திருப்பதிலும் ஒரு மேன்மையுமில்லை. அந்தப் புத்திசாமர்த்தியங்களை எப்படி உபயோகிக்கிறோமோ, அந்தப் புலமையை எவ்விதமாய்ப் பண்படுத்துகிறோமோ அதைக்கொண்டுதான் அவற்றின் மேன்மையை அறியவேண்டும். ஒரு உபயோகமுமின்றிக் கல்விப் பொருட் பெருஞ்செல்வத்தை மனது விசேஷமாய்த் தேடி வைத்துக்கொண்டிருப்பது கூடுமானதுதான். அவ்வறிவு, நன்மைக்கும் விவேகத்திற்கும் துணையாகி நல்லொழுக்கத்திற்குதவாதிருக்குமாயின், இருந்தும் இல்லாததுபோலவே. "சமஸ்தமான அறிவும் முறைமையாய்ப் பயின்ற மனது என்னும் நிலத்தில் நன்றாக வேரூன்றி அதன் சாரத்தை உண்ணும்படி செய்யவேண்டும்; அப்படிசெய்யாவிட்டால் மனதைப் பண்படுத்துவது அதற்கு நாசமாகவே முடியும்." எனப் பெஸ்தலோசி வற்புறுத்திக் கூறினார். அறிவானது, இவ்வுலகில் வழக்கும் அற்பமான அக்கிரமங்களுக்கு உடன்படவொட்டாமல் ஒருவனை விலக்கிக் காக்குமென்றாலும், உண்மையான நீதியொழுக்க முதலியவைகளால் பத்திரமாய்க் காக்கப்பட்டாலன்றி, சுயப்பிரயோஜனமான பெரிய துர்மார்க்கங்களினின்றும்விலக்கிக் காக்கமாட்டாது. ஆனதுபற்றியே கல்வியில் நன்றாய்த் தெளிந்தும் ஒழுக்கத்தில் மிகவும் குறைவுள்ளவர்களாயும், பாடசாலைப் படிப்பு பூரணமாயிருந்தாலும் வியவகாரஞானம் சிறிதுமில்லாதவர்களாயும், நாம் பார்த்து அனுசரிக்கத்தக்க நல்லொழுக்கமுள்ளவர்களாயிருக்கவேண்டுவது போக நாம் கண்டஞ்சி ஜாக்கிரதையாயிருக்கவேண்டிய துர்ப்பொழுக்கமுள்ளவர்களாயும் அங்கங்கே அநேகரைக் காண்கிறோம். "புத்திமான் பலவான்" என்று அடிக்கடி பழமொழி வழங்குகிறதென்றாலும், அந்தப் புத்தியை நல்வழியிற்கொண்டு திருப்பாவிட்டால் அது சிறிதும் பலமாகமாட்டாது; மேலும் தீயோர்களைப் பின்னும் கொடியவர்களாக்கி உலகத்திற்கே அபாயம் விளைவிப்பதாகும்.

இக்காலத்திய கல்விப்பயிற்சியின் மேம்பாட்டை நாம் மிகவும் பெருமைப்படுத்திப் பேசலாம்; மேலும் புஸ்தகசாலைகளும், தர்மசாஸ்திரங்களும், விநோதப்பொருட்காட்சி சாலைகளும் அநேகமிருப்பதனால் அதைக் கண்டு நமது கல்விப்பயிற்சி விசேஷமாய்ப் பெருகுகிறதென்று நாம் நினைக்கவுங்கூடும். ஆயினும், இவ்வகையான சாதனங்கள் அவனவன் உயர்ந்த கல்வித்துறைகளில் தன்னைத்தான் பண்படுத்திக்கொள்வதற்குத் துணையாயிருப்பதுபோலவே பெரும்பாலும் அதற்கு இடையூறாகவும் முடியும். பொருளுள்ளவர்களெல்லாரும் எப்படிப் பெருங்கொடையுள்ளவர்களாவதில்லையோ அப்படியே விசேஷமாய்ப் புத்தகங்களைக் கையாள்பவர்களும் வித்வான்களாகமாட்டார்கள். நாம் சுலபமாகவே எதையும் பெறுவதற்குவேண்டிய சாதனங்கள் நமக்கு விசேஷமாய்க் கிடைத்திருந்தாலும், தியானம், விடாமுயற்சி, உழைப்பு இவையாகிய பழைய வழியைப் பிடித்துச் சென்றாலல்லது அறிவும் விவேகமும் ஒருபோதும் நமக்குச் சுவாதீனமாகமாட்டா என்பது நிச்சயம். கல்விக்குவேண்டிய கருவிகளை மட்டும் கையாள்வது வேறு; படிப்பைப்பார்க்கிலும் பெருமைபெற்றதான சிந்தையால் அடையத்தக்க அறிவும் விவேகமும் வேறு. படிப்பாவது, பெரும்பாலும் பிறருடைய கருத்துகளைக் கேட்டுத் தெரிந்துகொள்வதேயொழிய வேறல்ல. ஏனெனில், ஒன்றைப் படிக்கும்போது படிப்பவன் புத்தி புதிதாய் ஒருவேலையுஞ் செய்வதில்லை. ஆகலால் நமது படிப்பு, சிறிதளவேனும் மனதைத் திருத்தித்தெளிவிக்காமலும், ஒழுக்கத்தை உறுதிசெய்யாமலும், க்ஷணப்பொழுது இதமாய் உள்ளக்கிளர்ச்சி தரும் ஒருவிதமான மதுபானஞ்செய்வது போலாகின்றது. இவ்வாறே அநேகர், வீணாய்ப் பொழுது கொல்லும் எளியவேலை செய்துவருங் காலத்தில், தங்கள் மனதைப் பண்படுத்துகிறதாகச் சொல்லிப் பாசாங்குசெய்து திரிகிறார்கள். ஆயினும் அதிலும் இழிதொழில் செய்யப் புகாமல் அந்தமட்டிலாவது அவர்களைக் காக்கிறதேயென்று

அப்பொழுதுசொல்லும் வேலையைப்பார்த்தும் நாம் சந்தோஷிக்கவேண்டுவதுதான்.

மேலும் புத்தகங்களைப் படித்துவரும் அறிவு வெகுவாய் விலைபெற்றதாயிருந்தாலும் புத்தகப்படிப்பாகவே முடிகிறது; அநுபவத்தால் வரும் அறிவு விவேகமாக முடிகிறது. எட்டுக்கல்வி அளவற்றிருப்பதும் சரி, அநுபவம் சிறிதளவிருப்பதும் சரி. ஏட்டுச்சுரைக்காய் கறிக்கு உதவாதல்லவா? "நம்மை நேராகவாவது பரம்பரையாகவாவது யோக்கியர்களாயும் உபகாரிகளாயும் எவ்விதத்திலும் செய்யமாட்டாத படிப்பு எவ்விதமான படிப்பானாலும், அவையாவும் அயலார் பிரமிக்கத்தக்க ஒருவகை விசித்திரமான சோம்பலேயன்றி வேறல்ல. அவ்விதமாக நாம் சம்பாதிக்கின்ற அறிவும் யாவரும் அங்கீகரிக்கத்தக்கதான ஒருவகை அறியாமையேயன்றி மற்றொன்றுமல்ல" எனப் பாலிங் பிரோக் என்பவர் மொழிந்திருக்கிறார். அதுமுழுதும் உண்மையானதுதான்.

நல்லநூல்களை வாசிப்பது நமக்குப் பயன்பட்டு ஞானத்தை விருத்திபண்ணுமாயினும், மனதைப் பண்படுத்தும் விஷயத்தில் பத்தோடு பதினொன்றாவதாயிருக்கிறதேயன்றி மற்றப்படியில்லை; நல்லொழுக்கமுண்டாகும் விஷயத்திலோ நல்ல அநுபவமும் உதாரணமும் உதவுவதுபோல அவ்வளவு ஒருபோதும் உதவுவதில்லை. இங்கிலாந்தில் பிரஜைகள் நூல்பயிலத் தொடங்குவதற்கு வெகுகாலம் முன்னமே ஞானமும், பராக்கிரமும், இருதயசுத்தியுமுள்ளவர்கள் பலர் இருந்தார்கள். மாக்னா சார்ட்டா என்னும் மஹாசுதந்தரபத்திரம் பெற்றுக்கொண்ட பிரஜைகள் அப்பத்திரத்தில் கையெழுத்துப்போடத் தெரியாமல் கைகாட்டிவைத்தவர்களே. கடிதத்தில் எழுதப்படும் வரிவடிவெழுத்தை அறியும் வித்தையில் சிறிதும் வல்லவரல்லாதிருந்தும், அவற்றுள் குறித்த விஷயங்களை அவர்கள் நன்குணர்ந்து குணதோஷங்களை விசாரித்துத் தாஷ்டிகமாய் வாதாடினார்கள். கல்லாதவர்களாயி

னும் உயர்ந்த ஒழுக்கத்திற்கு மேல்வரிச்சட்டமாகவிளங்கிய மனுஷரால் இவ்வண்ணம் அங்கிலேயர் சுதந்தரத்திற்கு அஸ்திவாரம் இடப்பட்டது. ஆதலால் மனதைப் பண்படுத்துவதின் முக்கியமான நோக்கம், கேவலம் பிறருடைய கருத்துகளைக்கொண்டு நம்மனதை நிறைத்து, நமது முயற்சி சிறிதுமின்றி அயலாருடைய கல்வியறிவைக் கற்றுக்கொள்வதன்று; நமது புத்தியையும் நன்றாய் விகாசப்படுத்தி, ஜீவகாலத்தில் நாம் செய்யும்படி நேரிடுகிற பலவித வேலைகளையும் செம்மையாய்ச் செய்து உலகத்திற்கு உபகாரிகளாக்கிக் கொள்ளவேண்டுமென்பதே. மிக்க ஊக்கமும் உற்சாகமுமாய் உழைத்து உலகத்திற்கு உபகாரிகளான பலரும் வெகுவாய்ப் படிப்பில் தேர்ச்சிபெறாதவர்களே. பிரிந்திலி, ஸ்மீன்ஸன் இவர்களுக்கு நல்ல வயதுவந்து பெரியோர்களாகிற வரையில் எழுதப் படிக்கக்கூடத் தெரியாது. ஆயினும் சிறந்த செயல்களைச்செய்து இருவரும் இருபதுபேருக்குச் சமானமாய்க் காலங்கழித்தார்கள். ஜான் ஹண்டர் என்பவருக்கு இருபதுவயதுவரையில் எழுதப் படிக்கத் தெரியாதென்றாலும் தச்சுவேலை பயின்ற எவனுக்கும் இளைக்காமல் மேஜை நாற்காலிகள் செய்ய வல்லவராயிருந்தார். தேகதத்துவ சாஸ்திரத்தில் மஹாபண்டிதராயிருந்த ஒருவர் வித்தியார்த்திகளுக்குப் படிப்பு சொல்லும்பொழுது, ஒரு விஷயத்தில் ஏதோ ஒரு பாகத்தைச் சுட்டி, "இதை நான் ஒருபொழுதும் வாசிக்கவில்லை. உங்கள் தொழிலில் வல்லவராக விரும்பினால் நீங்கள் கற்கவேண்டிய விஷயம் இதுவே" என்று உரைத்தார். அக்காலத்து வித்துவான் ஒருவர், வழங்காதொழிந்த லத்தீன் கிரீக் பாஷைகள் தனக்குத் தெரியாதென்று தன்மேல் யாரோ தோஷம்சொன்னதைக்கேட்டு, "வழங்காதொழிந்தபாஷை வழங்குகிறபாஷை இவை ஒன்றிலும் காணப்படாத தேகதத்துவங்களையெல்லாம் நான் இவருக்குக் கற்பிக்கமாட்டுவேன்" என்று சொன்னார்.

ஆதலால், அறிவுவேண்டுவது அவசியமென்றாலும், ஒருவன் விசேஷமாயறிவதே முக்கியமன்று; அவ்வறிவின் நோக்கமும் பிரயோஜனமுமே முக்கியமாம். விவேகத்தை விருத்தி பண்ணி, ஒழுக்கத்தைச் சீர்ப்படுத்தி, நம்மை முன்னிலும் மிக்க யோக்கியர்களாயும், ஐக்கியமுள்ளவர்களாயும், பிறர்க்கு உபயோகமானவர்களாயும், ஈவிரக்கமுள்ளவர்களாயும், விசேஷ சாமர்த்தியமும் உலகத்தில் எவ்வகைச்சிறந்த காரியத்தையும் விடாமுயற்சியாய்ச் செய்து முடிக்கவேண்டுமென்கிற ஊக்கமும் உள்ளவர்களாயும் ஆக்குவதே அறிவின் நோக்கமா யிருக்கவேண்டும். நீதிநெறியைக் கவனியாமல் இவ்விதமான புத்தி வைபவத்தைமாத்திரம் வியந்து விருத்திசெய்யும் வழக்கத்தை ஒருதரம் கையாளப்புகுந்தால், அவர்கள் இழிவென்னப்படும் அனைத்திற்கும் செல்லும் பெரும் பாதையில் அடிவைத்தவர்களென்றே சொல்லவேண்டும். சமயக்கோள், ராஜநீதி முதலியவைகள் நீதிநெறியைக்கொண்டு அமைந்தவையே யன்றி வேறல்ல. பிறரிருந்த ஸ்திதியையும் செய்த செயல்களையும் குறித்து எழுதிவைத்திருப்பவைகளைப் படித்துச் சிந்தனைசெய்வதுமாத்திரமே போதுமென்று திருப்தியடைந்திருக்கக் கூடாது; நாமும் அவ்விதமான ஸ்திதிக்குவந்து அவ்வகைச்செயல்களைச் செய்ய முயலவேண்டும். நமது உயர்ந்த அறிவு ஒழுக்கத்திலும், உயர்ந்த யுக்தி ஆலோசனைகளெல்லாம் காரியத்திலும் உபயோகமாக வேண்டும். "நான் என்றும் சாதிக்கக்கூடியமட்டும் சாதித்தேன்; இதற்கு மிஞ்ச எவர்க்கும் அவசியமில்லை" என ரிக்டர் சொன்னவளவாவது நாமும் சொல்லத் திறமையுள்ளவர்களாகவேண்டும். தனக்கு இயற்கையாயமைந்த சக்தி சாமர்த்தியம் இவைகளுக்குத் தகுந்தபடி தெய்வசகாயத்தைக் கொண்டு தன்னைத்தானே நன்றாய்ப் பண்படுத்தி நல்வழிப்படுத்துவது எவர்க்குங் கடமை.

தன்னைத்தானே சிக்ஷித்துக்கொள்வதும் தன்னைத்தானே அடக்கி ஆள்வதுமே அப்பியாசஞானம் உண்டாவதற்கு முத

ற்காரணமாம். இவற்றிற்கெல்லாம் மூலாதாரம் தன்மானமென்பது; தன்மானமாவது, தன் பெருமையைத் தானறிந்திருப்பதாம். ஒருவனுக்குக் கோரிக்கையென்பது இதனின்றுமே உண்டாகின்றது. கோரிக்கையானது அதிகாரத்துக்குத் தோற்றமும் காரியசித்திக்குத் தாயுமாம். அப்படி சிறந்த கோரிக்கையுள்ளவனிடத்தில் அற்புதமான வரப்பிரசாதமிருக்கிறதென்றே சொல்லவேண்டும். "என் கௌரவத்தை நான் மதித்து விருத்தியடைய முயல்வது இவ்வுலகில் நான் கைக்கொள்ளத்தக்க சிறந்த தருமமாம். இவ்வுலகத்தார் எல்லோரும் சேர்ந்து ஓருடல்; நான் பருத்த அவ்வுடலின் பிரதானமான ஓர் அவயவமாயிருத்தலால், என் தேகம் மனம் இயற்கையறிவு இவைகளை இழிவுபடுத்தாமலும் நாசஞ்செய்யாமலு மிருப்பது உலகத்திற்கும் உலக நாதனை கடவுளுக்கும் எனது செய்கடனும். என் உடலின் அவயவங்களை என்னால் இயன்றமாத்திரம் நன்றாகப் பூர்த்திபண்ணப் பாத்தியப்பட்டிருக்கிறேன். நான் எனது இயற்கையில் உள்ள துர்க்குணங்களைத் தடுப்பதுமாத்திரமேயன்றி நற்குணங்களையும் விருத்திபண்ணவேண்டும். தன்மானத்தைப்போலவே பிறர்மானத்தையும் பாராட்டுவது என்கடமை. பிறரும் அப்படியே என்னுடைய கௌரவத்தைப் பாராட்டக் கடவர்கள்" என்று மிகவும் அடக்கமுடையவனும் எடுத்துரைக்கலாம். ஆகவே அன்னியோன்னிய அபிமானமும் நடுவுநிலையும் ஒழுங்குபாடும் ஏற்பட, தேசச்சட்டம் அதற்கு எழுத்து மூலமான ஒரு சாசனமும் உத்தரவாதபத்திரமும் ஆகின்றது.

தன்மானம் என்பது ஒருவன் தரித்துக்கொள்ளத்தக்க மிகச் சிறந்த வஸ்திரமும், தன்னைத்தான் விசேஷமாகப் பெருமைப்படுத்திக்கொள்ளும்படி ஈசுவரகடாக்ஷத்தால் இருதயத்தில் உதிக்கத்தக்க உயர்ந்த அபிப்பிராயமுமாம். "தன்பெருமையைத் தான்மதித்திருப்பதே சிறந்தது" என்பது பிதாகரஸ் என்பவருடைய அருமையான நீதிவாக்கியங்களுள் ஒன்றும். இந்த நீதியை மனதிற்கொண்டு நடப்பவர்களுக்குத் தேகம்

மனம் இரண்டும் ஒருபோதும் கெட்ட நினைவு துராசை முத
லியவைகளால் அசுத்தப்படா; நித்தமும் லோகவியவகாரத்
தில் இந்த அபிப்பிராயத்தைத் தழுவிநடந்தால் இதுவே சுத்
தம், காம்பீரியம், நிறை, நீதிநெறி, பக்தி எனும் சுகுண மனை
த்திற்கும் மூலமா யிருப்பதாகத் தோன்றும். "இருதயசுத்தி
யோடு நடந்தெரிந்து நம்மை நாம்கௌரவப்படுத்துவது, யா
வரும் வியக்கத்தக்கதான அருந்தொழில் அனைத்தும் முடிப்ப
தற்கு ஆதாரமான அடிநிலைகளிலும் ஊற்றுக்கண்ணுமென்று
எண்ணிக்கொள்ளலாம்" என மில்டன் கவிவாணர் மொழிந்
தார். தன்னைத்தானே இழிவாய் நினைப்பது, பிறர்மதிப்பில்மா
த்திரமே யன்றித் தன் மதிப்பிலும் தாழ்ந்துபோவதாம். சிந்
தனையெப்படியோ அப்படித்தான் செய்கையும். இழிவானவை
களையே எண்ணிக்கொண்டிருப்பவன் ஒருபோதும் உயர்பதம்
பெறமாட்டான். உயர்பதம் பெறவேண்டுமானால் உள்ளக் கரு
த்துகளும் உயர்ந்தேயிருக்கவேண்டும். எளியார்க்கெளியனும்
இதை முறைமையாய் நினைத்து அநுசரித்து வருவானானால்,
தடையின்றி உயர்ந்தெழுவான். தன்மானமாத்திரம் ஒருவ
னுக்கு இருக்குமானால், தரித்திர ஸ்திதியும் மேன்மைபெற்
றுச் சிறப்பாய் விளங்கும். ஏழை யொருவன், துராசைகள்
பல சூழ்ந்துகொள்ளும்பொழுதும் நெறி விலகாது நேராய்
நின்று இழிந்த செயல்செய்ய உடன்படாதிருப்பானாயின்
அதைவிட அற்புதக்காட்சி வேறென்ன?

மற்றொருநோக்கமுமின்றி உலகத்தில் தான் விருத்தியடை
யவேண்டுவதற்குமாத்திரம் முக்கியசாதனமாய் எண்ணி ஒரு
வன் தற்பயிற்சி செய்வானானால், அவ்வெண்ணமே அப்பயிற்
சியை இழிவுபடுத்துவதாம். இந்நோக்காய்ப் பார்க்குமிடத்
தில், காலம் உழைப்பு எனும் மூலதனத்தை வித்தியாப்பியாச
த்திற்காக வைப்பது ஒருஉத்தமமான உபாயமென்பதற்கு ஐய
மில்லை. அறிவுதெளிந்தவன் எந்த ஜீவனோபாய மார்க்கத்தி
லும் காலதேச வர்த்தமானங்களுக்கு ஏற்றபடி அறிந்து நடக்
கவல்லவனாவான். திருத்தமாய்த் தொழில்செய்யும் விதம்

மதுவும அவனை புத்தியில் தோன்றும். எல்லாவிஷயத்திலும அவன் விசேஷ கெட்டித்தனமும் சமர்த்தும் கருமமுடிக்கும் திறமையும் உடையவனாவான். சரீரமும் மனமும் ஒத்து உழைப்பவன் தன்வேலைகளைத் தெளிவாய்ப் பார்க்க வல்லவனாவான். அவனுடைய சாமர்த்தியம் விருத்தியாவது அப்போது அவனுக்கே நன்றாய்த் தெரியும். இதுவே மனிதர் மனதிற் பிறக்கும் அறிவுகளெல்லாவற்றுள்ளும் மிகுந்த உல்லாசந்தரும் அறிவுபோலும். தன் முயற்சியின் வலிமை வரவர விருத்தியாகும். ஒருவனுக்குத் தன்மானம் இருக்குமளவிற் கேற்றபடி அற்பவிஷயங்களிலுள்ள துராசைகளை விலக்க அவனுக்குத் திறமையுண்டாகும். அப்பொழுது ஊராரையும் அவர்களுடைய செய்கைகளையும் பார்க்கப் புதுமையான ஒருவகைவினோதம் உண்டாகும். மேலும் பிறரிடத்தில் ஈவிரக்கமும் அனுதாபமும் அதிகமாகி, அவருடைய நன்மைக்காகவும் தன் சொந்தநன்மைக்காகவும் வருந்தி உழைக்க விருப்பமுண்டாகும்.

ஆயினும் மேலெடுத்துக்கூறிய பல திருஷ்டாந்தங்களில் விளங்கியபடி தற்பயிற்சியால் மேன்மையே கிடைக்குமென்பதில்லை; சில விஷயங்களில் கிடைக்காமலிருந்தாலும் இருக்கும். மனிதர்களுள் பெரும்பாலார் எவ்வளவு சிறப்பும் நாகரிகமும் பெற்றிருந்தாலும், ஜீவனோபாயத்திற்கு வேண்டிய சாமானியத் தொழில்முயற்சி செய்துவராமல் தீராது. ஒரு ஊரார்க்காயினும் தேசத்தார்க்காயினும் மனம் எவ்வளவு பண்பட்டிருப்பினும், அவர்கள் தவறாமல் செய்யவேண்டிய தினவேலையை ஒழித்திருக்க அவர்களாலாகாது. ஆனால் ஒன்று, உயர்ந்தோர் இழிந்தோர் ஆகிய யாவரும் சிறப்பித்து வியக்கத்தக்க உயர்ந்த அபிப்பிராயங்களைக்கொண்டு அவற்றிற்கேற்றபடி அந்த உழைப்பின் தரத்தையும் உயர்த்தலாம். வறிஞனா யிருப்பதே ஒரு குறைவன்று; ஒருவன் எத்தனைவறிஞனும் தணிந்தவனுமா யிருப்பினும், அவன் ஒதுங்கும்குடிசை எத்தனை அலங்கோலமாயிருப்பினும், ஆதன தத்துவங்

கலை நுணுக நினைத்தறியவல்ல பண்டிதர், அவனை வீடு தேடிப்போய்க் கண்டு அவனுடன் உட்கார்ந்து அவ்வேலைக்குத் தோழமை கொண்டாடத்தக்க பெருமை பெற்றிருக்கவும் கூடும். இவ்வாறே நலந்தெரிந்து நல்ல கிரந்தங்களை வாசிப்பதனால் உண்டாகும் கல்விப்பயிற்சியானது மிகுந்த மனவெழுச்சிக்கும் தன்னறிவு தன்முயற்சி இவைகளால் திருந்தி விருத்தியடைவதற்கும் ஏதுவாகி நற்குணம் நன்னடக்கை இவைகளை மெத்தெனவே நன்றாய்ப் பழக்குவித்து எப்போதும் நற்பயனை விளைவிக்கும். வித்தையில் தம்மைத்தாம் பண்படுத்துவோர்க்குச் செல்வப்பொருள் சேராதிருப்பினும், உயர்ந்த அபிப்பிராயங்களெல்லாம் தற்செயலாய்த் தோன்றும்படியாகும். பிரபு ஒருவர் ஒரு சமயத்தில் ஒரு பண்டிதனைப்பார்த்து, "இத்தனை சாஸ்திரங்களைக் கற்று நீர் பெற்ற பயன் என்ன?" என்று இகழ்ச்சியாய் வினவ, அந்தப் பண்டிதர் "மற்றொருபயனும் இல்லாவிடினும் என்னிடத்தில் இந்தக்கல்வி ஒன்றிருப்பது எப்போதும் ஆயிரம் பண்டிதர்கூடி இருப்பதுபோல் இருக்கின்றது" என மறுமொழி பகர்ந்தார்.

ஆயினும் அநேகர், தாம் படும் பாட்டிற்கு விரைவில் விர்த்தியடைவது தகுதியென்று எண்ணங்கொண்டு, அத்தனை விரைவில் விர்த்தியடையாமையால் நிராசைகொண்டு தம்மைத் தாம் பண்படுத்தும் முயற்சியில் நிரம் குன்றிப்போகும் இயற்கையுள்ளவர்களாயிருக்கிறார்கள். அவர்கள் விதையை நட்டு அந்தக்ஷணமே அது முளைத்து வளர்ந்து பெரு விருட்சமாகிப் பலிக்கவேண்டுமென்று எதிர்பார்ப்பவர்களே யன்றி வேறல்ல. அவர்கள் கல்வியைக் கடையிற்கொண்டு விற்கும் சரக்கென நினைத்து, நினைத்தபடி அது விலைப்படாததனால் விசனமுற்றார்கள்போலும். நார்போர்க்கில் ஒரு பாடசாலையிலே மாணாக்கர்களின் தொகை விரைவிற் குறைந்துபோவது கண்டு உபாத்தியாயர் அதன்காரணம் ஏதென்று விசாரித்தவளவில், கல்வி தம்மைத் தலையெடுக்கப்பண்ணும் என்று காத்திருந்த தாய்தந்தையர் அநேகர், அது தமக்கு ஒரு

விரத்தினும் பயன்படவில்லை என்று கண்டு, இனிக் கல்வியைக்குறித்துச் சிரமப்படுவது வீணென்று பிள்ளைகளை நிறுத்திக்கொண்டதாகத் தெரியவந்ததென மேஸ். த்ரெமென்ஹீயர் என்பவர் 1840-1-ம் வருஷத்துக் கல்வி யறிக்கைப்பத்திரம் ஒன்றில் சொல்லுகிருர்.

கல்வியில் தம்மைத்தாம் பண்படுத்துவதைக் குறித்து இவ்வகை இழிந்த எண்ணங்கள் இதர ஜனங்களுக்குள் பின்னும் அதிகமாகத் தலைப்பட்டு, எப்பொழுதும் உலகத்தில் ஏறத்தாழ வழங்கும் லோக வியவகாரத்தைப்பற்றிய கெட்ட அபிப்பிராயங்களால் உறுதிப்படுகின்றது. கல்வியில் தேர்ச்சிபெறுவது ஒழுக்கத்தை உயர்த்தி ஆத்தும ஞானத்தை விகாசப்படுத்துவதற்காகவென்று எண்ணுமல், உலகத்தில் உயர்பதம்பெற்று மற்றவர்களைப் பார்க்க மேன்மைபெறுவதற்கு ஏற்ற சாதனமென்ருவது, வித்தியா கோலாகலத்திற்கும் விநோதத்திற்கும் சாதனமென்ருவது எண்ணுவது அதை மிகவும் சிறுமைப்படுத்துவதாம். இதைச் சுட்டி பேக்கன் சொல்லிய வாக்கியமாவது:—“கல்வி யறிவானது லாபம் அடைவதற்காவது பொருள் விக்கிரயம்செய்வதற்காவது வழங்கும் கடை அல்ல, சிர்ஷ்டிகர்த்தாவினுடைய மகிமைகளையும், லோகோபகாரமான விஷயங்களையும் நிறைத்துக்கொள்ளத்தக்க பெருங் களஞ்சியமாம்” என்பதே. ஒருவன் தன் நிலையை உயர்த்தவும் உலகத்தில் தான் சிறப்படையவும் பிரயாசப்படுவது மிகவும் சிறந்ததென்பதற்கு ஐயம் இல்லை. ஆயினும் தன் ஆத்துமாவைத் தான்கெடுத்து இப்படிச்செய்யலாகாது. மனதை உடலுக்கு வெறுந்தொழும்பனுக்குவது, செய்யத்தகாத ஈனமான வேலை செய்விப்பதுபோலாம். அறிவினுலன்றி, முக்கியமாய்ப் பழக்கத்தாலும், விடா முயற்சியாலும், வேலைக்கிரமமுழுதையும் அவதானிப்பதனுலுமே பெறத்தக்க இவ்வுலகப் பயன்களைப் பெறத் தவறிப்போவதைக் கண்டு, இதென்ன துரதிர்ஷ்டமென்று தமது விதியை வெறுத்துச் சிணுங்கிப் புலம்பித்திரிபவர் அநேகர் உண்டு. அது அவர்கள்

அற்ப புத்தியும், எப்போதும் விசாரப்படுகிற தன்மையும் உடையவர்களென்பதை விளக்குகிறதேயன்றி வேறல்ல. தம்மைப் புத்திமதி கேட்கவந்த இஷ்டர் ஒருவருக்கு ராபர்ட் ஸௌதி (Robert Southey) என்பவர் ஒரு நற்போதனை போதித்திருக்கிறார். மேற்சொன்ன துர்க்குணமுடையோர்களைத் திருந்தச்செய்வதற்குத் தகுந்த நற்போதனை அந்த வாக்கியங்களைவிட வேறில்லை. அவர்சொன்னதாவது :—"உபயோகப்படுவதாயிருந்தால் நான் உனக்குப் புத்திசொல்வேன் ; ரோகிகளாகவே இருக்க விரும்புவோரைக் குணப்படுத்த ஒரு வகையுமில்லை. நல்லவனுக்கும் விவேகிக்கும் சிலவேளை இவ்வுலகவியாபாரங்களில் கடுப்புமுண்டாகும்; சிலவேளை அதை நினைத்துப் பச்சாதாபமும் உண்டாகும்; இவ்வுலகில் தான் செய்யவேண்டிய கடமைகளைச் சரியாகச் செய்து முடித்தவன் எவனுக்கும் உலக வியாபாரங்களில் ஒருபொழுதும் மனக்குறை உண்டானதில்லை. தேக சுகமும் கண்ணும் கையும் அவகாசமும் கல்வியும் உள்ள ஒருவனுக்கு இவ்வுலகில் எதாயினும் ஒரு குறை யிருக்குமானால், சர்வசக்தனாகிய கடவுள் இவ்வரமனைத்தையும் அபாத்திரனுக்குக் கொடுத்திருக்கிறானென்று சொல்லவேண்டுவதேயன்றி வேறில்லை" என்றார்.

கற்ற கல்வியை அக்கிரமமாய்ப் பிரயோகிக்கிற வழி மற்றொன்று உண்டு; அதாவது, அதை புத்தியின் கோலாகலத்திற்கும் விநோதத்திற்கும் மாத்திரமே சாதனமாக உபயோகப்படுத்துவதாம். இக்காலத்தில் அநேகர் இதே எண்ணங்கொண்டு நடக்கிறார்கள். ஒரு பயனுமின்றி அற்பமான மனக்கிளர்ச்சிகொண்டு திரிகிற பைத்தியம் அநேகருக்கு உண்டு. சாதாரணமான புத்தகப்படிப்புகளில் இப்பைத்தியம் பலவிதமாக வெளிப்படுகின்றது. அநேக சித்திரவிசித்திரங்களும் விநோதமும் பகிடியுமுள்ளவைகளாயும், அவற்றோடு கொச்சைப்பேச்சுகளும் உலகநீதி தெய்வநீதி இவை அனைத்தையும் மீறிய பல திருஷ்டாந்தக்கதைகளும் அமைந்தும் இருக்கின்ற புத்தகங்களையும் பத்திரிகைகளையுமே இக்காலத்தவர் அநேக

மாக விரும்புகிறார்கள். இதைக்குறித்து டக்லஸ் ஜெரோல்ட் (Douglas Jerrold) என்பவர் ஒரு சமயத்திற் சொல்லியதாவது:— "எல்லாவற்றையும் பார்த்து ஓயா தெப்பொழுதும் வெடிக்க நகைத்து உலகத்தாரெல்லாம் அலுத்துப்போவார்கள்போலும். ஆயினும் கடைசியாய் இம்மையில் யாவரும் கருத்தாய்க் கவனிக்கத்தக்கது ஒன்று உண்டு. மனுஷர் சரித்திரமுழுதும் வேடிக்கைக்கதையாவது அசாத்தியம். சிலர் பருவதம் முதலிய விஷயங்களைப்பற்றி வேடிக்கையாய் எழுதுவார்கள் என்பது வாஸ்தவமே. அங்கிலேய சரித்திரநாடகம், அலப்ரொட் ஆக்கியம், ஸ்ரீ தோமாஸ் மூர் டங்கிடி, அவர்புத்திரி அவர் பிரேதத்தின் தலையைக் கேட்டு வாங்கித் தன் பிரேதப்பெட்டிக்குள் தன் மார்பில் அதைத் தழுவி அணைத்துக் கொண்டமாதிரியாய் எழுதிய விகடக்கூத்து என இவ்வகை விபரீத புத்தகங்கள் உண்டாயிருக்கின்றன வல்லவா? நினைத்துப்பார்க்கையில் இத்தன்மையானவைகளால் உலகத்தார்க்குக் கொடிய மனநோய் உண்டாகுமேயன்றி வேறில்லை" என்றார். இதைப்பற்றி ஜான் ஸ்தர்லிங் (John Sterling) சொல்லியதாவது:— "சமாசாரபத்திரிகை, கற்பிதகதை முதலியவை இக்காலத்தவர் அனைவர்க்கும் ஒருவகைக் கொள்ளைநோய் முதலியவைபோலாம். மனது நிலைப்படாதவர்களுக்கு இவை மிகக் கொடிய உபத்திரவங்களாம். மேலும் அவை நன்னீரைப் பழுதாக்குகிற தவளைபோலவும், நமது சபாலயங்களில் வேதனைசெய்யும் மூட்டைப்பூச்சி முதலிய போலவுமிருக்கின்றன" என்றார்.

சிறந்தபண்டிதர்கள் செம்மையாய் எழுதிய கதைகளை உழைப்பவர்கள் இளைப்பாற்றியாகவும், சிறந்த பெருங்காரியங்களைச் செய்வோர் தடாற்றியாகவும் வாசிப்பது மனதிற்குமேலான இன்பமேயாம். இவ்வகையான படிப்பில் முதியோர் இளையோர் ஆகிய அனைவரும் அபிலாஷை கொள்வது இயற்கை. அதைத் தகும் அளவிற்கு அனுபவிப்பது கூடாதென்று நாம் சொல்ல வரவில்லை. ஆனால் பலர் செய்

யும்வண்ணம் தங்கள் காலங்களையெல்லாம் வெகுவாய் அப்படிப்பட்ட புத்தகங்களிலே கழிப்பது வீணுகக் காலம் கழிப்பதினும் மிகக்கொடியதாம். அதனால் நமக்குக்கெடுதி விளைவதற்கு ஐயம் இல்லை. எப்போதும் விடாமல் விசித்திரமான கற்பிதகதைகளை வாசிப்பவன் கெட்ட எண்ணங்களுக்குப் பெரும்பாலும் இடங்கொடுத்து வருவதனால், இன்மையும் ஆரோக்கியமுமுள்ள மனம் மாறுபட்டுத் திரிந்துப் போகுமென்று அஞ்சுவதற்கு மெத்தவும் ஏது உண்டு. "துக்க நாடகம் கேட்க நான் ஒருபொழுதும் போகிறதில்லை; அது என் நெஞ்சத்தைத் தாக்கித்தாக்கி மிகவும் வருத்துகின்றது" என உல்லாச புருஷர் ஒருவர் ஒருமுறை எடுத்துரைத்தார். கட்டுக்கதைகளைப் படிப்பதனால் உண்டாகும் மனவுருக்கம் முதலியவைகளால் அதற்கேற்ற செயல் ஒன்றும் உண்டாவதில்லை; அதனால் இருதயத்தில் இரக்கம் துக்கம் முதலியவை உண்டானாலும் அவற்றால் நமக்கொரு சுகந்தாழ்வுமில்லை, கஷ்டநஷ்டமுமில்லை; ஆகவே, எஃகு தேயத்தேய அதன் தன்மைமாறி அதிற்பிராணபதமா யிருக்கும் விசை எப்படி கெட்டுப் போகிறதோ, அப்படியே அளவிற்கு மிஞ்சி அநேகமுறை கட்டுக்கதைகளைப் படித்து வழக்கப்பட்ட இருதயமும் நாளளவிலே தன் இயற்கைகுலைந்து உண்மை இன்னதென்பதைச் சிறிதும் அறிய வல்லமையற்றதாகி விடுகிறது. "இவ்விதமான பழக்கமுள்ளவர்களுடைய மனதில் நற்குணங்களை விளக்கத்தக்க விஷயங்களை எவ்வளவுபோதித்தாலும், அவை அம்மனதிற்கு ஒரு நன்மையும் விளைவிப்பதில்லை; அதற்குமாருக ஒருவேளை அவன் நெஞ்சைக் கன்னெஞ்சாக்கி வரவர மேலுமேலும் உணர்ச்சியற்றதாகப் பண்ணினாலும் பண்ணும்" என பட்லர் என்னும் அத்தியக்ஷர் சொல்லுகிறார்.

விநோதங்களை மிதமாக விரும்புவது எவர்க்கும் அநுகூலமானது; அதை யாவரும் கொண்டாடலாம். அளவுகடந்து விநோதங்களை விரும்புவது அனைவர்க்கும் கெடுதியாக முடியும். ஆதலால் அதற்கு இடங்கொடாமல் அனைவரும் மிக்க

அவதானமா யிருக்கவேண்டும் "விளையாட்டின்றி எப்பொழுதும் உழைத்தமணியமா யிருப்பன் மந்தனாய்ப் போவான்" என்ற நீதிவாக்கியம் பலவாக வழங்குவதுண்டு ; ஆயினும் உழைப்பற்று ஓயாமணியமாய் விளையாடிக் கொண்டிருப்பது இம்மாத்திரமல்ல, இன்னும் அதிக கெடுதி விளைவிக்கும். இன்பம் அநுபவிப்பதற்கே உள்ளம் உடன்பட்டுப்போமாறல், இளைஞருக்கு மிகுந்த கேடு விளைக்கத்தக்கது அதைவிட வேறு இல்லை ; அவர்களுடைய மனதின் உத்தம குணங்கள் பழுதாய்ப்போம் ; சாதாரணமான இன்பங்களில் ரசம் தோன்றாது ; பேரின்பங்களைப் பெறவேண்டுமென்னும் ஆவல் முற்றும் அடங்கிப்போம். கடைசியில் வாழ்நாளுக்குரிய வியாபாரங்களையும் கடமைகளையும் செய்யும்படி நெருங்கி வரும் பொழுது சாதாரணமாய் அவர்களுக்கு வெறுப்பும் உபேக்ஷையும் உண்டாகும். தம்மை மிஞ்சிக் கைப்பொருளையும் தேகபலத்தையும் போக்கடிப்பவர்கள், ஜீவசக்தியைப் பாழ்படுத்தி இளைப்புறுவித்துச் சிறந்த சவுக்கியங்கள் உண்டாவதற்கு வேண்டிய வழிகளைப் போக்கடித்துக் கொள்கிறவர்களேயன்றி வேறல்லர். இப்படி தாங்கள் தலையெடுக்க வேண்டிய காலத்தை வீணில் முன்னதாய்க் கழிப்பவர்களுக்கு நல்லொழுக்கமும் புத்தியும் ஒருபோதும் செம்மையாய்ச் செழித்தோங்கமாட்டா. இளம் பருவத்தைச் சிற்றின்ப போகங்களில் பாழிலே சிதைத்துப் போக்கடித்த மனுஷனைப் பார்க்கிலும், வெள்ளைமனம் இல்லாத குழந்தையும், கற்புநிலையில்லாத கன்னிகையும், உண்மையில்லாத சிறுவனும் அதிகமாய்ப் பார்த்துப் பரிதபிக்கத் தக்கவர்களல்ல. "எனது இளம்பருவமானது பிற் பருவங்களுக்குரிய சுதந்தரங்களை முன்னமே பெரும்பாலும் அபகரித்து என் பிராணசக்திகளின் அதிக பாகத்தை அநியாயமாய் அழித்துவிட்டது." என மிரொபோ (Mirabeau) தம்மைக்குறித்துச்சொன்னார். நாம் ஒருவனுக்கு இன்று செய்த பழி நாளைத்திரும்பி நமக்கு வருவதுபோல, பாலியத்தில் செய்த பாவச்செயல்கள் விருத்தாப்பியத்தில்

வந்து நம்மை வாதிக்கும். "வாலிபத்தில் ஒருவருக்கு இயற்கையாய் அமைந்த வலிமையானது விருத்ததசை ஆமளவும் நேரிடும் பல அதிக்கிரமங்களுக்கும் ஈடுகொடுக்கும்." என பேக்கன்பிரபு மொழிவது, சரீர சம்பந்தமும் தரும சம்பந்தமுமான ஒரு சத்தியத்தை விளக்குவதா யிருக்கின்றது. இதை நாம் இவ்வுலக நடக்கையில் எவ்வளவு சீர்தூக்கிப் பார்ப்பினும் ஏற்குமே தவிர ஏற்காமற்போகாது. "நான் இவ்வுலக வாழ்க்கைப் பெறுவதற்கு மிகவும் அதிகமான கிரயத்தைச் செலுத்துகிறேன்; இது உள்ளதென்று நம்பு. 'நமது வாழ்நாள் நமக்குச் சுவாதீனமல்ல வென்பது வாஸ்தவமே. ஆதியில் அதைத் தெய்வம் நமக்குக் கைம்மாறின்றித் தருவதாக நடித்துப் பின்பு கிரயக்கணக்கு எழுதி அனுப்புகின்றது." என்று இத்தாலியனாகிய ஜியஸ்தி (Giusti) என்பவன் தன் இஷ்டன் ஒருவனுக்கு எழுதியனுப்பினான். தமது தேக சவுக்கியத்தைத் தாமே போக்கிக் கொள்வது வாலிபர்களுக்கு மிகவும் கேடுகெட்டமதிக் கேடேயாயினும், தமக்குப் பழிப்பு உண்டாக்கிக் கொள்வது அதினும் மிகக்கேடுகெட்டதாம். வாலிபத்தில் சிற்றின்பத்தைக் கொண்டாடித் தீயவழியில் இறங்கினவன் பெரியவனும்பொழுது கறையுண்டு பழுதுறுவான்; அவன் பெரும்பாலும் சுத்தனாயிருக்க விரும்பினும் சுத்தனாக அவனாலில்லை. இதற்குப் பரிகாரம் ஏதாவதொன்று உண்டெனில் அது, நெஞ்சை உருக்கும் தருமசிந்தையை நினைவிற் பொருத்துவதும், பயன்படத்தக்க வேலையை [illegible] சிரத்தைகூர்ந்து செய்வதுமே யன்றி வேறல்ல.

பெஞ்சமின் கான்ஸ்தந்து (Benjamin Constant) என்னும் பிரான்சுதேசத்தான் ஒருவன் இயற்கையிலேயே நல்ல புத்திமானாயிருந்தான். ஆயினும் அவன் இருபதாம் வயதில் அற்பனாக நடக்கத்தலைப்பட்டதனால் அவன் ஆயுளளவும் ஓயாமல் அவதிப்படும்படி நேரிட்டது. அப்படியன்றிச் சாதாரணமான முயற்சியும் சித்த ஸ்வாதீனமும் உடையவனா யிருப்பா